பதினெட்டாம் நூற்றாண்டின் போர்வாள் மாவீரன்

பூலித்தேவன்



ந. இராசையா எம்.ஏ.,எம்.எட்.

பதினெட்டாம் நூற்றாண்டின்
போர்வாள்

மாவீரன் பூலித்தேவன்

ந. இராசையா எம். ஏ; எம். எட்;

ஞானமுருகன் எழுத்தகம்
3/97, அயன்கொல்லங்கொண்டான்
இராசபாளையம் வட்டம்
காமராசர் மாவட்டம்-626 142.

நூல் விவர அட்டவணை

நூல்பெயர்	:	பதினெட்டாம் நூற்றாண்டின் போர்வாள் மாவீரன் பூலித்தேவன்
ஆசிரியர் பெயர்	:	ந. இராசையா எம்.ஏ., எம்.எட்.,
முதற் பதிப்பு ஆண்டு	:	மார்ச் 1995
(C) உரிமை	:	பதிப்பகத்திற்கே
மொழி	:	தமிழ்
நூலின் அளவு	:	18.5 செ.மீ. 12.5 செ.மீ.
பொருள்	:	வரலாறு
தாள்	:	10.7 சேஷஷாயித் தாள்
அச்சு எழுத்து அளவு	:	10 புள்ளி
பைண்டிங்	:	சாதா அட்டை பைண்டு
மொத்த பக்கங்கள்	:	144
நூல் வெளியிடுவோர்	:	ஞான முருகன் எழுத்தகம் 3/97, அயன் கொல்லங்கொண்டான் இராசபாளையம் வட்டம்-626142. காமராசர் மாவட்டம்.

விலை : ரூ. 25-00

அச்சிட்டோர் : வெற்றி அச்சகம்
91, டாக்டர் பெசன்ட் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை-600 014

"மாவீரன் பூலித்தேவன்"
வாழ்த்துப்பாக்கள்

"மூவேந்தர் முறையாக ஆண்ட நாடு!
முத்தெடுக்கக் கொற்கைத்துறை கண்ட நாடு!
பாவேந்தர் தமிழ்மணக்கச்- செய்த நாடு!
பார்புகழும் தொகைநூ ல்கள் பெற்ற நாடு!
கோலேந்தும் தமிழ்மறவர் கொண்ட நாடு!
கொள்கைதனை விற்காத நல்ல நாடு!
சாவேந்தும் களங்கண்ட சால்பு நாடு!
சான்றோர்கள் பலராக வாழ்ந்த நாடு!" (1)

"வந்தவர்க்கு வாழ்வளித்து மடிந்த நாடு!
வாழவைக்கும் தமிழையே மறந்த நாடு!
சொந்தமுறு இனத்தாரைக் கொல்லும் நாடு!
சொகுசாக மற்றமொழி மணக்கும் நாடு!
சிந்தனையைக் கடன்கொடுத்து அழிந்த நாடு!
சிறப்பனைத்தும் ஓராது ஓய்ந்த நாடு!
இந்தநிலை ஏனென்று எண்ணா நாடு!
இப்படியே இருக்கட்டும் இந்த நாடு!" (2)

'பாராண்ட வரலாறு பாழாய்ப் போக!
பஞ்சைகளாய் வந்தவர்கள் பாரை ஆள!
ஆராண்டால் நமக்கென்ன அயர்ந்து போக!
அதுவொன்றே மாற்றார்கள் மகிழ்ச்சி பொங்க!
வீரங்கொள் தமிழினமே வீழ்ச்சி கொள்ள!
வேற்றவர்க்கு நம்தொடையே மெத்தை யாக!
ஆர்வருவார் இழிநிலைதான் எடுத்துச் சொல்ல!
அப்போது பார்த்திடுவோம் வணக்கம் சொல்ல!'' (3)

''நாமெல்லாம் திராவிடர்கள் என்று சொன்னார்!
நாமுமதை மெய்யென்று கொள்ள லானோம்!
நாமட்டும் தலைமுறைகள் சொல்லி வந்தும்
நம்மோடு அண்டையினம் ஒட்ட மாட்டார்!
நாமின்னும் உண்மைதனை ஓரா விட்டால்
நம்நாடும் நம்மொழியும் தேய்ந்து போகும்!
'நாமெல்லாம் தமிழர்களே' என்று சொல்லும்
நற்காலம் வந்தாலே விடிவு தோன்றும்!'' (4)

''இத்தகைய எண்ணங்கள் தோன்ற வேண்டும்!
எண்ணற்ற வரலாறு எழுத வேண்டும்!
உத்தமராம் இராசையா ஒருவர் வேண்டும்!
ஒளிமிக பூலித்தேவன் பிறக்க வேண்டும்!
சத்தான நூலிங்குப் படிக்க வேண்டும்!
சாக்கடைநூல் பலவற்றைத் தள்ள வேண்டும்!
வித்தாக மொழிப்பற்று முளைக்க வேண்டும்!
விடிவெள்ளி தமிழகத்தே தோன்ற வேண்டும்!'' (5)

முனைவர் ச. சாம்பசிவனார்
ஆசிரியர், ''தமிழ்மாருதம்''

மாவீரன் பூலித்தேவன் வரலாற்றுக் குறிப்புகள்

பிறப்பு :	கி. பி. 1715 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 16-ஆம் நாள் (1-9-1715)
பெற்றோர் :	சித்திரபுத்திரத் தேவர், சிவஞான நாச்சியார்.
ஊர் :	நெற்கட்டான் செவ்வல், நெல்லை மாவட்டம்.
இயற் பெயர் :	காத்தப்ப பூலித்தேவன்.
மனைவி :	கயல்கண்ணி நாச்சியார்.
பிள்ளைகள் :	கோமதிமுத்துதலவச்சி, சித்திரபுத்திரத் தேவன், சிவஞானத் தேவன்.
ஆட்சியை ஏற்றல் :	1726.
நிகழ்ந்த சம்பவங்கள் :	சிவகிரிச் சண்டை, மதுரையில் புலியை அடக்கியது.

அறக்கொடைகள் :

உள்ளமுடையார் கோயில் பணி,

சங்கரன் கோயில் பணி,

பால்வண்ணநாதர் கோயில் பணி,

வாசுநகர் கோயில் பணி,

தாருகாபுரம் 16 கால் மண்டபம் கட்டி அன்ன தானம் வழங்கல்,

இடை மலையில் மண்டபம் கட்டி, கிணறு வெட்டி, நந்தவனம் வைத்தல்.

சீவலப்பேரி மருவாத்தலை பூலுடையார் கோயில் பணி.

பூலித்தேவன் முன்னோர் :

1. வரகுணராம சிந்தாமணி பூலித்தேவன்— 1378—1424.
2. வடக்கரத்தான் பூலித்தேவன்— 1424—1458.
3. வரகுணசிந்தாமணி வடக்காத்தான் பூலித்தேவன்— 1513—1548.
4. சமசதித்தேவன்— 1548—1572.
5. காத்தபபத்தேவன்— 1572—1600.
6. காத்தப்ப பூலித்தேவன்— 1600—1610.
7. சித்திரபுத்திரத்தேவன்— 1610—1638.
8. காத்தப்ப பூலித்தேவன்— 1638—1663.
9. சித்திரபுத்திரத்தேவன்— 1663—1726.
10. காத்தப்ப பூலித்தேவன்— 1726—1767.

பூலித்தேவன் போர்கள் :

1. இராபட் கிளைவ் சண்டை 1750
2. மாபூசுக்கான் சண்டை 1755
3. ஹெரான் சண்டை 1755
4. களக்காட்டுச் சண்டை 1755

5. திருவில்லிபுத்தூர் சண்டை 1756
6. திருநெல்வேலிச் சண்டை 1756
7. ஆழ்வார் குறிச்சிச் சண்டை (கான்சாகிபு) 1757
8. நெற்கட்டான் செவ்வல் சண்டை ,, 1759
9. வாசுதேவ நல்லூர் சண்டை ,, 1759
10. வாசுதேவ நல்லூர் சண்டை ,, 1760
11. வாசுதேவ நல்லூர் சண்டை ,, 1761
12. வாசுதேவ நல்லூர் சண்டை (டொனால்டு காம்பல்) 1767

பூலித்தேவன் கொள்கை :

1. அந்நியர் தலையீட்டை எதிர்க்க வேண்டும்,
2. மதுரையில் பாண்டியர் ஆட்சியை நிலைபெறச் செய்தல்,
3. தெய்வமும், தேசியமும் இரு கண்கள்
4. பசுமைப் புரட்சி உண்டு பண்ணவேண்டும்.

இறப்பு : 1767 ஆடி மாதம் 10ஆம் நாள்.

பூலித்தேவன் பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் :

1) பூலித்தேவன் சிந்து,
2) புதுக்கோட்டை சண்டை,
3) வண்ணக் கோடாங்கி பாடல்,
4) பொலிப் பாடல்,
5) கும்மிப் பாடல்,
6) தாலாட்டுப் பாடல்.

பொருளடக்கம்

முன்னுரை 9

1. பாரதநாடு 23

2. வரலாறு மறைக்கப்பட்டதேன்? 27

3. இந்திய விடுதலைப்போரின் காலகட்டங்கள் 43

4. பூலித்தேவன் கும்பினியரை எதிர்த்து நடத்திய போர்கள் 101

5. முடிவுரை 121

முன்னுரை

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு இன்னமும் சரியாக இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரவில்லை. உண்மையான போராட்ட வீரர்கள் இருட்டடிப்புக்கு ஆளாக்கப் பெறுவதும், போலிகளின் புகழ் வெளிச்சம் பெறுவதும் இன்றைய நாளில் மிகுந்து காணப் பெறுகிறது.

நேதாஜி, பகவத்சிங் போன்றோர், ஏனையோர் பெற்ற புகழில் ஒரு சிறு பகுதியைக்கூட பெறாதது வேதனைக்குரிய தாகும். அதனைப் பற்றியெல்லாம் கூறுவதென்றால் நீண்டதோர் பட்டியல் தொடர்கதையாகப் போய்க் கொண்டே இருக்கும்.

வடக்கே நடந்த சிப்பாய்க் கலகம்தான் விடுதலைப் போராட்டத்தின் 'உதய காலம்' என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். 1857-இல் நடைபெற்ற விடுதலைப் போரைச் 'சிப்பாய்க் கலகம்' என்றே கும்பினியர் அழைத்து வந்தனர். பல ஆண்டுகள் கடந்த பின்னர்தான், பலரும் அதனை "முதல் சுதந்திரப் போர்" என்று அழைத்தனர்.

அதனை எதிர்த்து, அதற்கு முன்னரே தென்னகத்தில் பாளையக்காரர்களுக்கும், கும்பினியருக்கும் நடைபெற்ற போரே "முதல் விடுதலைப் போர்" என்று யாரும் குரல் கொடுக்கவில்லை.

அதனால், தமிழகத்தில் நடந்த மானமும், வீரமுமிக்க போராட்டங்களுக்கு இதுவரை தக்க மரியாதை கிடைக்க வில்லை. அதை எடுத்துச் சொல்லும் துணிவு இங்குள்ள தமிழர்களுக்கு கிடையாது.

சாதிச் சண்டைகள் போடுவதற்கே தமிழர்களுக்கு நேரம் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். அரசியல்வாதிகள், இந்த உண்மையை எடுத்துச் சொன்னால் கிடைத்த பதவியும் போய் விடுமோ? என்று அஞ்சுகின்றனர். இந்நிலையால், தமிழகத்தின் விடுதலைப் போராட்டம் இருட்டடிப்புக்குள்ளானது. பின்னுக்குத் தள்ளப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழன் கொடுத்த முதல் குரலையே எடுத்துச் சொல்ல நாதி யில்லாமல் இருக்கும் நேரத்தில்.

''இந்திய விடுதலைப் போருக்கு முதல் குரல் கொடுத்தது யார்?'' என்று கேட்பதை விடுத்து, ''தமி ழகத்தில் நடந்த விடுதலைப் போரில் முதல் குரல் கொடுத்தது யார்? என்னும் விவாதத்தை ஏற்படுத்தினர். இத்தகைய நிலை தமிழகத்தில் இருந்ததால் தமிழகத்தின் விடுதலைப் போர், தன்னுடைய முதன்மையை இழந்து பின்னுக்குத் தள்ளப்பெற்றது.

வரலாறு முறையாக எழுதப் பெறாமையே இதற்கு முதன்மையான காரணமாகும். அவரவர் விருப்பு வெறுப்பு களுக்கு ஏற்றவாறெல்லாம் வரலாறுகளை எழுத ஆரம் பித்து விட்டனர். அவ்வாறு வெளிவந்த வரலாறுகளைப் போட்டி போட்டுக்கொண்டு நாள் இதழ்கள் வெளியிட்டன.

சமீபத்தில் 'தினகரன்' இதழ் தமிழகத்தின் விடுதலைப் போர் பின்னுக்குத் தள்ளப்பட்டதேன்? என்னும்

கட்டுரையை வெளியிட்டது. அதில், விடுதலைப் போராட்ட வீரனை கொள்ளைக்காரனென்று தமிழர்களே கூறியதால் முதன்மையை இழந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரைக்கு விளக்கம் கொடுத்து, பூலித்தேவன் முதல் முழக்கம் முழங்கிய செயல்பாடு மறைக்கப்பட்டதால் தமிழகத்தின் விடுதலைப் போர் பின்னுக்குத் தள்ளப் பெற்றது; முதன்மையை இழந்தது என்று எழுதியிருந் தேன். அக்கட்டுரை வெளியிடப் பெறவில்லை.

ஒரு நாளிதழில், ஒரு கட்டுரை வெளியிட்டால், அதனை ஒட்டிவரும் கருத்துக்களை வாசகர்கள் எழுதுவார்களே யானால் அதனையும் வெளியிட்டு மூலக்கட்டுரைக்கு மேலும் சிறப்புக் கொடுக்கவேண்டும். அதுவே நடுநிலை நாளிதழ் களின் கடமையாகும்.

அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள் எழுதியுள்ள வரலாற்றிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டியோ அல்லது மறுத்தோ நூல் வெளியிட்டால், அந்த எழுத்தாளர் எழுதிய முதல் நூலும் கடைசி நூலும் அதுவாகத்தான் இருக்க முடியும். அவ்வாறு விமர்சனம் செய்யும் நூல்களுக்குத் தக்க மரியாதைகள் கொடுக்கப்படுவதில்லை. அந்நூல்கள் தீண்டத் தகாதவைகளாகப் புறக்கணிக்கப்படுகின்றன. இந்நிலை மாறவேண்டும்.

இந்திய நாட்டின் விடுதலைக்குப் பிறகாவது உண்மை யான விடுதலைப் போராட்ட வரலாறு எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுநாள் வரை எழுதப்படவில்லை. இதற்கென்று டாக்டர். எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அது சரியாகச் செயல்படவில்லை. அதற்குப் பின்னர் ஒவ்வொரு மாநிலமும் விடுதலைப் போராட்ட வரலாற்றை தயார் செய்யவேண்டும் என்று நடுவண் அரசிடமிருந்து ஆணை வந்தது. தமிழகம் அதில் அக்கறை காட்டவில்லை.

இதனால் சுயநலம் படைத்தோர், தமிழகத்தின் விடுதலைப்போரை மறைத்தும், தங்களுக்கு வேண்டியவர் களை அறிமுகப்படுத்தியும், முன்னுக்குக் கொண்டுவந்தும் வரலாற்றையே திசை திருப்பியும் எழுதிவந்தனர்.

எனவே தமிழகத்தில் நடந்த விடுதலை இயக்க வரலாற்றை எழுதவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டது இன்றியமையாமையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழகத் தின் அரசியலில் பலமாற்றங்கள் ஏற்பட்டன. சிக்கலான அரசியல் சூழ்நிலைகளோடு நிர்வாகம் சீரான முறையிலும், ஒழுங்கான முறையிலும் நடைபெறவில்லை, ஔரங்கசீப். தமது இறுதிக் காலத்தில் ஐதராபாத்தில் 'நிசாம்' என்னும் பெயரில் ஒருவரையும், கர்நாடகத்தில் 'நவாப்' என்னும் பெயரில் ஒருவரையும் நியமித்தார். நிசாமுக்கு நவாப் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தமிழகத்தில் இத்தகைய அரசியல் முறை ஏற்பட்டது.

சுல்பிக்கர்கான் என்பவர் கர்நாடகத்தின் நவாபானார் (1698). இவரே கர்நாடகத்தின் முதல் நவாபாவார். இவருக்குப்பின் தாவுத்கான் கர்நாடக நவாபாக நியமிக்கப் பட்டார் (1704). இதுவரையிலும் தலைநகராக இருந்த செஞ்சி, இவர்காலத்தில் ஆர்க்காட்டுக்கு மாற்றப்பட்டது. இதனால், கர்நாடக நவாபு என்ற அழைக்கப்பட்டவர், ஆர்க்காட்டு நவாபு என்று அழைக்கப் பெறலானார். இவருக்குப் பின்னர் சதக்கத்துல்லாகான் (1710) கர்நாடக நவாபானார். இவரைத் தொடர்ந்து தோஸ்த் அலி (1732-1740) சப்தர் அலி (1740-1742) முகமது சையத்கான் (1742-1744) அன்வருதீன்கான் (1744-1749) முகமது அலி வாலாஜா (1749-1795) உமத்துல்லா உமாரு (1796-1801) அசீம்உத்துல்லா (1801-1820) ஆகியோர் ஆட்சி புரிந்து வந்தனர்.

இம்மன்னர்கள் முறையே ‘நவநயத்தவர்’ ‘வாலாஜா’ என்னும் வம்சத்தைக் கொண்டவராவர். 1710 முதல் 1743 வரை நவநயத்தவரும், 1743 முதல் 1801 வரை வாலாஜாக்களும் ஆர்க்காட்டு நவாபாக ஆண்டு வந்தனர். நவநயத்தாரைச் சேர்ந்த சந்தாசாகிப்புக்கும், வாலாஜாவைச் சேர்ந்த முகமதுஅலிக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக தென்னிந்தியாவில் ஆங்கிலேயரின் எழுச்சிக்கு வழிகோலியது. 1801 இல் கர்நாடக நவாபை நீக்கிவிட்டு, ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி செலுத்தும் அரசாக எழுந்தது என்று டாக்டர் கு. ராசையன் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆற்காட்டு நவாபான தோஸ்து அலி, மதுரையைக் கைப்பற்றுமாறு, தனது மகன் சப்தர் அலியையும், மறுமகன் சந்தாசாகிபையும் அனுப்பிவைத்தான். அப்போது மதுரையில் ராணி மீனாட்சிக்கும், பங்காரு நாயக்கருக்கும் நல்லிணக்கம் இல்லாமல் போரிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் சப்தர் அலி பங்காருநாயக்கருடனும், சந்தாசாகிப் ராணி மீனாட்சியுடனும் சேர்ந்து கொண்டு போர் நடத்தினர். போரில் சந்தாசாகிப் வெற்றி பெற்றார் இராணி மீனாட்சியை சிறையிலடைத்துவிட்டு தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டினார். சந்தா சாகிப் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டதால் ராணிமீனாட்சி மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டு மாண்டார். 1736 இல் மதுரையில் நாயக்கராட்சி முடிவுற்றது.

ஆற்காட்டு நவாப்புக்குக் கட்டுப்படாத அரசை திருச்சியில் சந்தாசாகிப் அமைத்துக் கொண்டார். இந்நிலையில் 1740-இல் மராட்டிய படைகள் தமிழகத்திற்குள் நுழைந்தன. ஆற்காட்டு நவாபு படைக்கும் மராட்டிய படைக்கும் போர் நடைபெற்றது. தோஸ்து அலி கொல்லப்பட்டார். மகாராட்டியர் மகத்தான வெற்றி பெற்றனர். திருச்சியி

லிருந்த சந்தாசாகிபையும் கைது செய்து சதாரா சிறையில் அடைத்தனர், ஹைதராபாத் நிசாம் தமிழகத்தின்மீது படையெடுத்துவந்து, மராட்டியரிடமிருந்து மதுரையையும் திருச்சியையும் கைப்பற்றிக் கொண்டார்.

இத்தகைய போர்களை ஆற்காட்டு நவாபு நடத்திக் கொண்டிருந்ததால், நிர்வாகத்தைச் செம்மைப் படுத்தாமல் ஆட்சி சீர்கேடு அடைந்தது. இந்நிலையில் கும்பினியார், ஆற்காட்டு நவாப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, தென்னகத்திலுள்ள பாளையக்காரர்கள் மீது நேரடி நடவடிக்கை எடுத்தனர்.

இத்தகு நிலையில், பூலித்தேவனின் புரட்சிக்கு கீழ்க் கண்டவைகள் முக்கியமான காரணங்களாக இருந்தன. மதுரையில் பாண்டிய பேரரசின் வீழ்ச்சியும், நாயக்கராட்சி யின் மேலாண்மை ஆதிக்கமும், ஆற்காட்டு நவாபுக்கு கும்பினியர் கொடுத்து வந்த ஆதரவு இவைகள் பூலித் தேவனின் நெஞ்சத்தில், அந்நியர் எவராயினும் தம்முடைய தாயகத்தின் மண்ணிலே காலூன்ற விடக் கூடாது என்னும் எழுச்சியே மேலோங்கி இருந்தது. பூலித்தேவனின் விடுதலைந் போர் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன் றியதாகும்.

இந்திய நாட்டில் விடுதலை வேரூன்றத் தொடங்கியது இருபதாம் நூற்றாண்டில்தான் என்று பலரும் கூறியிருக்கின் றனர். இதற்கான வித்து பத்தொன்பதாம் நூற்றாண்டி லேயே இடப்பட்டது என்ற கருத்தை டாக்டர். டி. ஜி. பி. ஸ்பியர், அனில்சீல், ஸ்டாண்டிலி வால்பெர்ட், ஆர். சி. மஜீம்தார், எஸ். சுந்தரலிங்கம், எஸ். பி. சென், கே. கே. பிள்ளை ஆகியவர்களின் ஒருமித்த கருத்தாக டாக்டர். ச. செயம்பிரகாசம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு என்னும் நூலில் ப-33 இல் குறிப்பிட்டுள்ளார்.

மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களை வழி நடத்திச் செல்லும் இயக்கங்கள் தோன்ற அரசியல் கட்சிகளும், அறிஞர் குழுக்களும், மக்கள் மன்றங்களும் தேவை. இவையெல்லாம் இந்நாட்டில் 19 ஆம் நூற்றாண்டில்தான் தோன்றலாயின. மாறுபட்ட மக்களை ஒன்று படுத்தி (சாதி, சமய, மொழி வட்டார வேறுபாடுகளுக்கு அப்பால்) விடுதலை இயக்கம் நடத்துவது என்பது பதினெட்டாம் நூற்றாண்டில் சிந்தித்துப் பார்க்க முடியாத ஒன்று தான். என்றாலும்,

''பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழ் நாட்டுப் பாடல்களைக் கொண்டு ஆராய்கையில் மக்களின் ஆர்வமும், எழுச்சியும், வீரமும் புலனாகிறது'' என டாக்டர் தெ. பொ மீனாட்சி சுந்தரனார் கருதுகிறார். பாமர மக்களின் பாடல்கள் தரும் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தள்ளிவிட முடியாது என்பதும், அவருடைய விவாதமாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழகத்தை அவர் 'வீரயுகம்' என்று முடிவுகட்டுகிறார். ஆனால், நாட்டுப் புறப் பாடல்களில் புனைந்துரையும், கற்பனையும் மிகுதி. அவற்றைக் கொண்டு வரலாறு எழுத முடியாது என டாக்டர். ந. சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார். நாட்டுப் புறப் பாடல்களில்,

வரலாற்றுக்கரு ஒன்று இருக்குமாயின் அதை ஏன் புறக்கணிக்க வேண்டும். அவ்வாறு வேறு படுத்தியிருந்தால், பூலித்தேவன், கட்டபொம்மன், மருதுபாண்டியர், தேசிங்குராசன், கான்சாகிபு ஆகியவர்களின் வரலாறு இன்று கிடைக்காமலே போயிருக்கக் கூடும்.

எனவே நாட்டுப்புறப் பாடல்களில் கூறப்படும் வரலாற்றுச் சம்பவங்களையும் அரசு ஆவணங்களையும்

கொண்டு ஆய்ந்து கிடைக்கக்கூடிய உண்மையான வரலாற்றுச் சம்பவங்களை எடுத்துக் கொள்ளலாம் என்பதையும் தள்ளிவிடுவதற்கில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டின் முதல் 'விடுதலை நாயகன்' பூலித் தேவன் முதல், கடைசி நாயகர் மருது பாண்டியர் வரையிலும். ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய போர்கள் யாவும், மக்கள் மத்தியில் நிலையான புகழைப் பெற்று விளங்கின என்பதை நாட்டுப் புறப் பாடல்கள் உறுதி செய்கின்றன. பின்னர் வந்த போராட்டங்களுக் கெல்லாம் வித்துகளாக அமைந்தன நாட்டுப்புற பாடல்கள். இப்பாடல்கள் இல்லையேல் பல வரலாறுகள் வெளிச்சத் திற்கு வந்திருக்க முடியாது; என்று அந்த நூலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட நாட்களாக ஏட்டுச் சுவடியாக இருந்து சமீபத் தில் வெளி வந்துள்ள நாட்டுப்புற பாடல்களில் பூலித் தேவனைப் பற்றிய வரலாறுகள் மக்கள் பார்வைக்கு வந்துள்ளன. அத்தகைய அபூர்வமான வரலாறு இது வரை மறைக்கப்பட்டது.

நாயக்கராகயிருந்தாலும் சரி, நவாபாக யிருந்தாலும் சரி கும்பினியராக இருந்தாலும் சரி, டச்சுக்காரராகயிருந் தாலும் சரி, போர்த்துக்கீசியராக யிருந்தாலும் சரி அவர்கள் அனைவரும் அந்நியரே என்று முதல் குரல் கொடுத்தான் பூலித்தேவன்.

நாயக்கர்கள் அண்டை மாநிலத்திலிருந்து வந்தவர் களானாலும், அவர்கள் தமிழ் மக்களோடு இணைந்து வாழ்ந்து வந்ததாலும் நாயக்கர்களை அந்நியர் எனக் கொள்ளாது அவர்களையும் தன்னோடு ஒத்துழைக்கும்படி வேண்டுகோள் விடுத்தான். தமிழ் தேசியம் இந்திய தேசிய

மாக பூலித்தேவன் உள்ளத்தில் மலர்ந்தது. இத்தேசிய உணர்வுதோன்றியது பதினெட்டாம்நூற்றாண்டிலேயாகும்.

தென்னாட்டில் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டு களிலே சுதந்திர எழுச்சி தோன்றிவிட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக எச். ஆர். பேட்டி என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"During the Seventeenth and Eighteenth Centuries; the stronghold of the Marava Poligars who struggled to maintain against all opposition the ancient Independence of their race.

என்று கூறியதோடு நின்றுவிடாமல், பூலித்தேவன் பதினெட்டாம் நூற்றாண்டில் விடுதலைப் போரை நடத்தி னான் என்று கூறுவதையும் காணலாம்.

"Puli Tevan of Nelkattanseval, the most Conspicuous amongst them, held the heart of the Country, and around him were the Poligars of Chokkampatti, Uttumalai, Talavankottai, Sivageri and settur, all Maravans and all Prominent figures in the history of the Eighteenth Century."

மேலும், பூலித்தேவன் ஆற்காட்டுநவாபையும், கும்பினி யரையும் பதினெட்டாம் நூற்றாண்டில் எதிர்த்தான் என் பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"Nelkattanseval (or Avudaiyapuram) Eighteenth Century the stronghold of the Redoubiable Puli Tevan. who figured for many years as the leader of the Marava Confederacy against the troops of the Nawab and the Company."

பதினெட்டாம் நூற்றாண்டில் விடுதலை இயக்கம் நடத்தியது தமிழர்களின் வீரத்தை எடுத்துக் காட்டுகிறது. மூவேந்தர் ஆட்சிக்காலத்தில், அரசியல் குழுக்களும், அறிஞர் குழுக்களும், மக்கள் மன்றங்களும் சேர்ந்தே அரசியலை நடத்தி வந்தன. போட்டியில்லாத குடவோலை முறைத் தேர்தல்களைக் கொண்டு வந்தவர்களே தமிழர்கள்தாம் என்பதை மறந்துவிட முடியாது. அத்தகைய ஆட்சியை தமிழர்கள் நடைமுறைப்படுத்தி வந்தனர்.

தமிழகத்தில், பாண்டியரின் வீழ்ச்சிக்குப் பிறகு ஏற்பட்ட நாயக்கராட்சி, மகமதியர் ஆட்சி, ஆற்காட்டு நவாபு ஆட்சி ஆகியவற்றைத் தொடர்ந்து தமிழர்கள் எதிர்த்து வந்திருக்கின்றனர். அந்நியரை எதிர்க்க வேண்டும் என்னும் விழிப்புணர்ச்சி அப்போதே ஏற்பட்டு விட்டது. ஆகையால், பதினெட்டாம் நூற்றாண்டிலேயே விடுதலைப் போராட்டத்தைத் தமிழர்கள் தொடங்கினர் என்பதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறியதைப் போல, விடுதலைப் போரின் வீர யுகம் பதினெட்டாம் நூற்றாண்டேயாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் 'வெள்ளையனே வெளியேறு' என்று முதல் குரல்கொடுத்தவன் பூலித்தேவன்தான். அவனுடையமுதல் விடுதலைப்போராட்டத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவனுக்குப் பின்னர் வந்த வீரபாண்டிய கட்டபொம்மனுடைய விடுதலைப் போராட்டத்தை முன்னுக்குக் கொண்டுவந்து வரலாற்றைத் திசை திருப்பிய பெருமை திரு ம. பொ. சிவஞானம் அவர்களையே சார்ந்ததாகும். இச் செயலானது திரு ம. பொ. சி. அவர்கள் வரலாற்றில் செய்த பெரும் பிழையைக் காட்டுகிறது.

மாவீரன் பூலித்தேவனின் வரலாறு மறைக்கப் பட்டதைப் போல், விடுதலைப் போராட்ட வரலாற்றில்

தாழ்த்தப்பட்டோரின் வீரத் தியாகமும் மறைக்கப்பட்டது; இருட்டடிப்புக்கு ஆளாக்கப்பட்டது ''தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் கும்பினியர் நடத்திய போர்களை வேடிக்கை பார்த்தனரென்றும், பரங்கியரை எதிர்த்து அவர்கள் கலகம் செய்திருப்பார்கள், துரதிஷ்ட வசமாக, அந்த நிலை காந்தியடிகள் தோன்றுவதற்கு முன்பு இந்திய நாட்டில் எந்த நாளிலுமே இருந்ததில்லை''என்றும் ம. பொ. சி. அவர்கள் 'விடுதலைப் போரில் தமிழகம் என்னும் நூலில் பக்கம் 86-87இல் குறிப்பிட்டுள்ளார்.

அப்படியானால், காந்தியடிகள் காலத்திற்கு முன்னர் தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலைப் போரில் கலந்துகொள்ள வில்லையா? பாளையக்காரர்களில், பூலித்தேவன் முதல் மருதுபாண்டியர் வரையிலுள்ளவர்கள் நடத்திய விடுதலைப் போராட்டங்களிலெல்லாம் தாழ்த்தப்பட்டோர் கலந்து கொண்டு போராடிய செயலானது, வீரகாவியமாகக் கருதப் பட வேண்டிய ஒன்றாகும். இதை விடுத்து காந்தி சகாப்தத் திற்கு முன்னர் எந்த நாளிலுமே தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலைப் போரில் கலந்து கொள்ளவில்லை என்று கருத்தைக் கூறுவது பொருத்தமில்லாமையாகும். இதனைப் பற்றி 'விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

பூலித்தேவன் காலத்தில் தாழ்த்தப்பட்டோரில் பல் லாயிரக்கணக்கானவர் பணியாற்றினர். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒண்டிவீரன் பகடை, பெரிய காலாடி என்ற வெண்ணிக் காலாடி போன்றவர்களுக்குத் தளபதி பட்டம் கொடுக்கப்பட்டு, அவர்களின் தலைமையின் கீழ் பல்லாயிரக் கணக்கான போர்வீரர்கள் ஒப்படைக்கப் பட்டிருந்தனர். பாளையக்காரர்களில் பூலித்தேவன் ஒரு வனே தாழ்த்தப்பட்டவர்களைத் தளபதி போன்ற உயர்

பதவிகளில் நியமனம் செய்தவனாவான். இதனை, முதல் புரட்சி என்றே சொல்ல வேண்டும்.

விடுதலைப் போரில் வீரமரணம் அடைந்த வெண்ணிக் காலாடிக்கு வீரக்கல் நட்டு பெருமைப்படுத்தினான் பூலித் தேவன். மற்றொரு வீரனான சென்னிராயன் வீர மரணம் அடைந்த போது, தன்னுடைய உறவினர்களின் சமாதிக் கருகில் சென்னிராயனின் உடலை நல்லடக்கம் செய்தான் பூலித்தேவன்.

தாழ்த்தப்பட்டவர்களை, மேல் சாதிக்காரர்கள் அடிமைப்படுத்திய அந்தக் காலத்தில், பூலித்தேவன், தாழ்த்தப்பட்டோர் நடத்திய விடுதலைப் போருக்கு முதன்மை கொடுத்து காவியம் பாடச் செய்தான்.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் காவியமாகப் ‘பூலித்தேவன் சிந்து’ மலர்ந்தது.

அத்தகைய மறைக்கப்பெற்ற விடுதலைப் போராட்ட வரலாற்றை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறுவது நம்முடைய கடமையாகும்.

பாரத நாட்டின் வளங்களை எல்லாம் கொள்ளை கொண்டு போக, பன்னெடுங் காலங்களாக அந்நியர்களின் கூட்டங்கள் வந்தவண்ணமிருந்தன. அன்றைய நாளிலிருந்து இன்றைய நாள் வரை தாய்த்திரு நாட்டின் மண்ணில் கால் வைத்தவன் எவனாக இருந்தாலும் விரட்டியடித்து வெற்றி முரசு கொட்டினர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இந்திய நாட்டை அடிமை கொள்ள, ஆற்காட்டு நவாபை பொம்மையரசாக வைத்துக் கொண்டு கிழக்கிந்திய கம்பெனியார் கப்பம் வசூலிக்கும் உரிமையில் வந்தனர். நம்மிடமுள்ள ஒற்றுமைக்

குறைவால் கும்பினியரின் ஆதிக்கம் நாடு முழுவதும் பரவ ஆரம்பித்து விட்டது. அதை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்று போர் முரசு கொட்டியவன் தான் மாவீரன் பூலித்தேவன். அவன் முழங்கிய முரசின் ஒலியானது அந்த நூற்றாண்டு முழுவதும் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. அதனால், பல முரசுகள் முழங்கின. முடிவில் வெற்றி முரசுகள் முழங்கின.

அந்த வரலாற்றை எழுதியவர்களில் சிலர் முதல் முரசு கொட்டிய பூலித்தேவனை மறைத்து வரலாறு எழுதி வெளியிட்டனர். ஒரு பொய்யை பலமுறை திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டேயிருந்தால் அந்தப் பொய்யே மெய்யாகி விடும் என்று கூறுவதைப் போல் பூலித்தேவனின் வரலாற்றைப் பின்னுக்குத் தள்ளி கட்டபொம்மனுடைய வரலாற்றை முன்னுக்கு கொண்டு வந்து மீண்டும் மீண்டும் பிரச்சார யுக்தியைக் கையாண்டு, வீரபாண்டிய கட்டபொம்மனே முதல் முழக்கம் முழங்கினான் என்னும் தவறான வரலாற்றை நிலை நாட்டினர். அந்த நேரத்தில் கட்டபொம்மன் திரைப்படமும் பிரமாண்டமான முறையில் தயாரித்து வெளியிட்டனர். இந்த வரலாறு மக்கள் மத்தியில் நிலைத்துள்ளது. இவ்வாறு இருட்டடிப்புச் செய்திருப்பது பெரும் வியப்பிற்கும் வேதனைக்கும் உரியதாகும்.

இதனால், இளந்தலைமுறையினரிடையே வியக்கத்தக்க தேசப்பற்றும், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வும் குறைந்திருக்கிறதென்றால் மிகையாகாது. உண்மையான வரலாற்றை எடுத்துக் கூறுவதன் மூலம், இளைஞர்களுக்கு வீரத்தையும், விவேகத்தையும், தியாகத்தையும் வளர்க்க முடியும் என்னும் நம்பிக்கையினால் எழுந்ததே இச்சிறு நூல்.

இந்நூல் வெளியிடுவதற்குப் பெரிதும் உதவி புரிந்த பாண்டிச்சேரி மின்துறை பட்டதாரி பொறியாளர் சங்கத்தின் நிர்வாகத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறினால் அடுத்து வரும் பதிப்பில் திருத்திக் கொள்ள வாய்ப்பாகும், வாசகர்கள் இதயத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துமாயின், அதனால் பெரும் மகிழ்ச்சி அடைவேன். நன்றி!

ந. இராசையா
பூலித்தேவன் வரலாற்று ஆய்வாளர்.
3-97, அயன் கொல்லங் கொண்டான் 626142.
இராசபாளையம் வட்டம்
காமராசர் மாவட்டம்.

பாரத நாடு

இமயம் முதல் குமரி வரை பரந்து கிடக்கின்றது பாரத பூமி. கங்கை, யமுனை, பிரமபுத்திரா, சிந்து ஆகிய நதிகள் வடநாட்டினை வளப்படுத்துகின்றன. பாரத நாட்டின் தென்பாகத்தில் நருமதை, தப்தி என்னும் இரு நதிகளும் மேற்கு நோக்கிப் பாய்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்திரை, வடபெண்ணை, தென்பெண்ணை, காவிரி, வைகை, பொருநை ஆகிய நதிகளும் பாய்கின்றன. இதனால் நீர் வளமும், நில வளமும் செழித்தோங்கி, இயற்கை எழில் கொழிக்கின்றது.

இத்திருநாட்டில் காயும், கனியும், கிழங்கும் மலிந்து கிடக்கின்றன. பட்டும், பருத்தியும், மிளகும், மயிலும், தந்தமும், துகிலும், ஆடையும், அணியும், கொண்டு இம் மக்கள் திரை கடலோடி திரவியம் தேடி வந்தனர். பாரத நாடு பண்டு தொட்டு பலவளங்களுடன் பெருமையும் பெற்று விளங்கி வந்தது.

அந்நாளில், உரோமானியரும், கிரேக்கரும், எகிப்தியரும், சீனரும் நம்மிடம் வந்து வியாபாரம் செய்தனர். அதனால் அந்த நாடுகள் செல்வத்தால் உயர்ந்தன.

இத்தகு சிறப்புமிக்க பாரத நாட்டில் தங்கமும், வெள்ளியும், ரத்தினமும், வைரமும், வைடூரியமும், முத்தும், பவளமும் வேண்டிய அளவு குவிந்து கிடந்தன.

இதனால், 'பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' என்னும் புகழைப் பெற்று விளங்கியது. இதனைக் கேள்விப் பட்ட அந்நியர் கூட்டம், அலையலையாய் இந்நாட்டைக் கைப்பற்றி இதன் வளங்களையெல்லாம் தனதாக்கிக் கொள்ள நடத்தப்பட்ட கொடுமைகள் பலவாகும்.

முதலாவதாக, மகா அலெக்சாண்டர் என்னும் கிரேக்க மன்னன் இம்மண்ணின் மீது படைகொண்டு வந்தான். அவனை புருஷோத்தமன் என்பவன் எதிர்த்தான். 'சாகர்' என்ற அன்னியர் படைகொண்டு வந்தனர். அவரை விக்கிரமாதித்தன் என்பவன் விரட்டியடித்தான். மீண்டும் சாகர் வரவே சமுத்திரகுப்தன் அவர்களை விரட்டியடித் தான்.

அதன் பின்னர் ஹூணர் என்னும் அன்னியரை ஹர்சன் என்பவன் வென்றான். பிறகு வந்த கஜினி முகம்மதை இரஜபுத்திரர்கள் எதிர்த்துப் போரிட்டனர். பிருதிவிராஜன் வீரப்போர் புரிந்து வீரமரணமடைந்தான். மொகலாயர் அரசு புரியலாயினர். மொகலாய மன்னன் பாபரை இரஜபுத்திரர்கள் எதிர்த்துப் போராடினர்.

நம்மிடம் ஒற்றுமையின்மையால் அடுத்து பாபர் மகன் ஹூமாயூன்; ஹூமாயூன் மகன் அக்பர்; ஜஹாங்கீர்; ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகியோர் முறையே டில்லியை ஆண்டு வந்தனர். ஔரங்கசீப்பை எதிர்த்து சிவாஜி என்னும் மாராட்டிய வீரன் போர்க்கொடியை உயர்த்தி னான். சீக்கியர்கள் ஔரங்கசீப்பை எதிர்த்தனர். சிவாஜி யின் மறைவுக்குப் பிறகு மீண்டும் மகாராஷ்டிரர்கள் எதிர்த்துப் போரிட்டனர்.

இதனால், தென்னகத்திலுள்ள செஞ்சிக் கோட்டைக்கு வந்து சேர்ந்தனர். ஔரங்கசீப்பின் முடிவுக்குப் பிறகு,

அவனின் அதிகாரிகள் சுபேதார்கள், நவாப்புகள் என்போர் தனியரசு கொள்ளத் தலைப்பட்டனர். அதன் விளைவாக, ஹைதராபாத்தில் நிஜாம் தனி அரசு செலுத்தினான். இவ்வாறு அயோத்தி, வங்காளம் கர்நாடகம் முறையே தனி அரசுகளாயின. வடக்கே மகாராஷ்டிரர்கள் தொடர்ந்து எதிர்த்து வந்தனர்

இந்நிலையில் போர்த்துக்கீசியரான வாஸ்கோடகாமா என்பவன் நம் நாட்டின் மேற்குக் கடற்கரையான கோழிக் கோடு வந்து சேர்ந்தான். கோவா, டையு, டாமன் என்னும் பகுதிகளைப் போர்த்துக்கீசியர் கைப்பற்றிக் கொண்டு வாணிகத்தைத் தொடர்ந்தனர்.

பின்னர் டச்சுக்காரர்களும், அவர்களுக்குப் பின்னர் 1600-இல் ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெ , என்னும் பெயரில் மேற்குக் கடற்கரையில் சூரத் என்னுமிடத்தில் வாணிகத்தை தொடங்கினர். ஆங்கிலேயர், சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் கோட்டை கட்டினர். இவர்களுக்குப் போட்டியாக பிரெஞ்சுக்காரர் களும் வாணிபம் செய்ய புதுச்சேரியில் தங்கி கோட்டை கட்டினர்.

ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் போட்டி ஏற்பட்டது. இதனால் உள்நாட்டிலுள்ளவர்களுடன் உறவு கொள்ள ஆரம்பித்தனர். ஹைதராபாத்தின் முதல் நிஜாம் இறந்ததும் ஏற்பட்ட அரசு தகராறில் பிரஞ்சுத் தலைவன் டூப்ளே என்பவன் நவாப்பின் மருமகன் பக்கம் நின்று வெற்றியை ஈட்டிக் கொடுத்தான். அதனால் பல இடங்கலை இனாமாக டூப்ளே பெற்றான்.

அதே நேரத்தில், அன்வருதீன், சந்தாசாகிப் ஆகிய வரிடையே ஏற்பட்ட போட்டியில் அன்வருதீனுக்கு

ஆதரவாக ஆங்கிலேயரும், சந்தாசாகிப்பிற்கு ஆதரவாகப் பிரஞ்சுக்காரரும் இருந்து வந்தனர். இதனால் ஆம்பூர் என்னுமிடத்தில் நடந்த போரில் அன்வருதீன் கொல்லப் பட்டான். அன்வருதீன் மகன் முகம்மது அலி தானே ஆர்காட்டு நவாபு என்று திருச்சியில் பட்டம் சூட்டிக் கொண்டான்.

முகமது அலிக்கு ஆதரவாக ஆங்கிலேயர் நின்றனர். சந்தாசாகிப்புக்கு ஆதரவாக பிரஞ்சுக்காரர் நின்றனர். திருச்சியில் இருவருக்கும் சண்டை நடந்தது. ஆங்கிலேயரே வெற்றி கண்டனர். பிரெஞ்சுக்காரர் தோல்வியடைந் தனர். இதனால், தமிழகத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. அவர்களின் வாணிகமும் வளரத் தொடங்கியது.

ஆற்காட்டு நவாபின் போட்டியைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் அரசியல் சூழ்ச்சியில் ஈடுபடலாயினர். இந்திய மக்களின் ஒற்றுமைக் குறைவால் ஆங்கில ஆதிக்கம் நாடு முழுவதும் பரவி விட்டது. இராபர்ட்கிளைவ் என்பவன் தலைமையில் இது நடந்தது.

வரலாறு மறைக்கப்பட்டது ஏன்?

பழமையை நினைவு கூர்ந்து புதுமையை அறிமுகப் படுத்தப்படுவதற்கு வழிகாட்டிகளாக விளங்குவன வரலாறு களேயாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வரலாற்றை நினைவு கூர்ந்து அறிமுகப்படுத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளது காலத்தின் கட்டாயம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் ஆற்காட்டு நவாபையும், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி யாரையும் எதிர்த்துப்போரிட்டவன் மாவீரன் பூலித்தேவன். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்புமிக்க வீர வரலாற்றைப் பெற்று விளங்கியவன் மாவீரன் பூலித்தேவன். இந்திய விடுதலைப் போர் நடைபெறு வதற்கு 1750-இல் களம் கண்டவன். அக்களத்தில் 1755-ஆம் ஆண்டில் முதல் வித்தை ஊன்றியவன்.

தாயகத்தின் மண்ணில் அயலார் எவரும் உரிமை கொண்டாடக் கூடாது என்று பல்லாயிரக்கணக்கான வீர மறவர்களை அணி திரட்டி, வாளெடுத்துப் போரிட்டவன் தான் மாவீரன் பூலித்தேவன். அதனால், அவனை விடுதலைப் போரின் முதல் புரட்சியாளன் என்று வரலாறு கூறுகிறது. அவனுடைய வீர வரலாறு, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால்

பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதுவே, இந்திய விடுதலைப் போரினைப் பற்றி விளக்கிக் கூறும் முதல் கல்லாகும்.

தென்பாண்டி நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றி, தன்னிகரற்றுத் தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்த தமிழ் மறவன் மாவீரன் பூலித்தேவன். நெற்கட்டான் செவ்வலைத் தலைமையிடமாகக் கொண்டு செங்கோ லோச்சிய பாளையக்காரன்.

தன்னுடைய பாளையத்திற்கு மட்டுமின்றி, மேற்குப் பகுதியிலுள்ள பாளையக்காரர்களுக்கெல்லாம் தலைமை யேற்று, மாற்றாரை நடு நடுங்கச் செய்த போர்வாள். அவன் போர்வாள் மட்டுமல்ல, கூர்வாளாகவும் விளங்கி வந்தான். அதனால் அவனை, பதினெட்டாம் நூற் றாண்டின் 'போர்வாள்' என்று அழைப்பதில் பெருமை கொள்கிறோம்.

இந்திய விடுதலைப் போரை நடத்திய மாவீரன் பூலித்தேவனின் வீர வரலாறு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியரால் மறைக்கப்பெற்றது. 'நெற்கட்டான் செவ்வல்' என்னும் பெயரைக் கேட்டபோதே கும்பினி யருக்குக் குலை நடுக்கம் ஏற்படுமாம். அதனால், அவன் வாழ்ந்து வந்த ஊரின் பெயரான 'நெற்கட்டான் செவ்வல்' என்பதை 'ஆவுடையார் புரம்' என்று கும்பினியர் மாற்றினர்.[1]

அவன் புகழைப் பற்றிப் பாடப் பெற்றுவந்த நாட்டுப் புறப்பாடல்களுக்குக்கூட தடை விதிக்கப்பெற்றது. கடுமை யான அடக்குமுறைகள் தாண்டவமாடியதால் அவனுடைய வீரவரலாறு கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தது.

அப்பகுதி முழுவதும் கும்பினியரின் கண்காணிப்பு அதிகரிக்கப் பெற்றிருந்தது.[2]

அதனால், பூலித்தேவன் பற்றி பாடப்பெற்று வந்த, சிந்து, கும்மி, அம்மானை, தாலாட்டு, பொலி, வண்ணக் கோடாங்கி ஆகிய நாட்டுப்புறப் பாடல்களெல்லாம், மக்களால் பாடப் பெறாமல் மங்கி மறைய ஆரம்பித்தன. அந்த ஏட்டுச் சுவடிகளும் மக்களால் மறைத்து வைக்கப்பெற்று, மறைந்து ஒழிந்தன.

பூலித்தேவனின் பிள்ளைகளான பூலி சித்திரபுத்திரத் தேவனை பாஞ்சாலங்குறிச்சியிலும், பூலி சிவஞானத் தேவனை சாயல் குடியிலும், கோமதி முத்துத் தலவச்சியை பனையூர் காட்டிலும், கும்பினியருக்குத் தெரியாமல் மறைத்து வைத்து வளர்க்கப்பட்டனர் என்பதிலிருந்தே கும்பினியரின் அடக்குமுறை தாண்டவமாடியது தெரிய வருகின்றது.

பூலித்தேவனுக்கு பின்னர் வாழ்ந்து வந்த வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியர் ஆகியவர்களைப் பற்றிப் பாடப்பெற்று வந்த நாட்டுப்புறப் பாடல்கள் மறையாமல் இருந்ததால், அவர்களுடைய வரலாறு முன்னுக்குத் தள்ளப் பெற்று, பூலித்தேவனின் வரலாறு பின்னுக்குத் தள்ளப் பெற்றதும். ஒரு காரணமாக இருந்தது.

அரசியல் காரணங்களுக்காகவும் பூலித்தேவன் வரலாறு மறைக்கப் பெற்றதாகத் தெரிகின்றது. 'இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்' என்னும் நூலுக்கு 4-6-85 இல் திருச்செந்தூர் காங்கிரஸ் தியாகி சண்முகம் கருத்துரை எழுதியுள்ளார். இதில், பூலித்தேவன்தான் அந்நியரை எதிர்த்த முதல் தமிழன். இது ம. பொ. சிக்கும் தெரியும்.

பூலித்தேவனின் பெருமையைக் கூறினால், தேவரின் பெருமையினைக் கூட்டும். அதனால் காமராஜின் எதிர்ப்பினைப் பெறவேண்டியதிருக்கும். அதனால் பூலித்தேவனை விட்டுவிட்டு, கட்டபொம்மனைப்பற்றி ம.பொ.சி எழுதினார். கட்டபொம்மனைப்பற்றி எழுதிய காலம் பசும்பொன் — காமராஜர் மோதல் இருந்த காலம்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

கட்டபொம்மனைப் பற்றிப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கூறிய கருத்துக்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது உண்மை புலனாகின்றது காங்கிரஸ் தியாகி சண்முகம் அவர்கள் கூறியுள்ள கருத்துக்களுக்கு பசும்பொன் தேவரின் பேச்சு வலுவூட்டுவதாக உள்ளது.

சுதந்திரத்தை அடைய, இங்கிருந்த மக்களும், சிற்றரசர்களும் சேர்ந்து போரிட்டமை ஒரு மாபெரும் போராட்டமாகும். ஆனால், அதைச் சாதாரணக் கலகம் என்று எழுதினர். அதில், கட்டபொம்மன் மட்டுமா சண்டையிட்டான்; இந்த நாட்டிலிருந்த ஏனைய சிற்றரசர்களும் சண்டையிட்டனர். அவ்வாறிருக்கும்போது, ஏதோ ஒரு ஆந்திரன் வந்து சண்டை செய்தான் என்று இருக்கட்டுமென்ற சூழ்ச்சியால் சரித்திரம் எழுதப்பட்டுள்ளது.

அந்த சரித்திரத்தை இன்னும் மக்கள் படித்துப் பாராட்டி வருகின்றனர். அந்த வரலாற்றைக் கட்டபொம்மன் நாடகம் என்று போட்டு வருகிறார்கள். சண்டையிட்டவர்களில் கட்டபொம்மனும் ஒருவன். மற்ற மன்னர்களும், மன்னர்களின் பரம்பரையினர்களும் சிந்திய ரத்தம் வரலாற்றில் காட்டப் பெறவில்லை. தமிழ் நாட்டு சரித்திரத்தில், தமிழனின் வீரத்தை மறைக்க வேண்டுமென்று எழுதினார்கள். அதை இன்று சரித்திரமாக

நாம் படித்து வருகிறோம்.[3] என்று பசும்பொன் தேவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்துக்களிலிருந்து, நம்மவர்களே தங்களின் சுய நலத்திற்காகவும், அரசியலில் ஆதாயம் பெறுவதற்காகவும் பூலித்தேவனின் வீரவரலாற்றை மறைத்ததாகத் தெரிகின்றது. இதன் மூலம், தமிழன் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்தாமல், பின்னால் நின்று வேடிக்கை பார்த்தான் என்னும் கறைபடிந்த வரலாறு தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. ''மகன் செத்தாலும் பரவாயில்லை மருமகள் தாலி அறுத்தால் போதும்'' என்னும் நிம்மதி மாமியாருக்கு ஏற்பட்டதைப் போல் உள்ளது இச்செயல்.

அரசியல், அதிகாரம், ஆகியவற்றின் தலையீடுகளுக்கு மாவீரன் பூலித்தேவனின் வரலாறு பலியாகி விட்டது. தமிழன் என்று தலைநிமிர்ந்து நிற்கிறானோ அன்றுதான், அவனுடைய உண்மையான வரலாறு இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும்.

''வரலாற்றில் சிறிதளவே கூறப்பெற்றுள்ள தென்னாட்டுப் பாளையக்காரர்கள் பிரிட்டிசு ஆட்சிக்கு அச்சமில்லாமல் எதிர்ப்புத் தெரிவித்நார்கள், 1857 புரட்சிக்கு முந்திய காலக்கட்டத்தில் இவர்களைப்போல் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு எதிர்ப்பை பெரிய அளவில் விளைவித்தவர்கள் வேறு எவருமில்லை.'' என்று பாளையக்காரர்களின் விடுதலைப் போரை முதன்மைப்படுத்தி எழுதியுள்ளார். சசிபூசன் சௌத்ரி என்பவர்.[4]

'இந்திய சுதந்திரப் போரை முதன் முதல் தொடங்கி வைத்தவர், சிறப்பாகத் தமிழ் நாட்டவரேயாவர்'' என்று ம. பொ. சி. அவர்கள் கூறியதோடு நின்றுவிடாமல்,

அதற்கும் ஒருபடி மேலே சென்று தென்னாட்டுப் பாளையக்காரர்களில் முதன் முதல் அந்நியரை எதிர்த்தது யார்? என்னும் கருத்து வேறுபாட்டையும் தொடங்கி வைத்தார்.

'திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலங்குறிச்சி என்னும் சின்னஞ்சிறு பாளையப் பட்டார்தாம் முதன் முதலில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் தொடங்கினார். எனவே இந்திய விடுதலைப் போரின் வரலாறு பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நடத்திய வீரப் போரிலிருந்துதான் தொடங்குகிறது என்பதில் ஐயமில்லை என்று ம. பொ. சி கூறியுள்ளார்.[5]

சசிபூசன் சௌத்ரி கூறியுள்ள கருத்துக்கள், தமிழ் நாட்டுக்கும், தமிழனுக்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. ஆனால், ம. பொ. சி. கூறிய கருத்துக்கள் தமிழர்களுக்குள் பிளவு ஏற்பட்டு சிறுமை சேர்ப்பதாக உள்ளது.

திரு. ம. பொ. சி. அவர்கள் கூறிய கருத்தை எதிர்த்து, இந்திய விடுதலைப் போருக்கு முதல் குரல் கொடுத்தவன் பூலித்தேவனா? கட்டபொம்மனா? என்னும் சர்ச்சை கிளம்பியது. இந்த விவாதக் கருத்தாய்வில், 'கல்கண்டு' தமிழ்வாணன், டாக்டர். ந. சஞ்சீவி, புலியூர்க்கேசிகன்' துர்க்காதாஸ். எஸ். கே. ஸ்வாமி, வேணுகோபால் பிள்ளை, சிரஞ்சீவி போன்றவர்கள் கலந்து கொண்டு, ''இந்திய விடுதலைப் போருக்கு முதல் குரல் கொடுத்தவன் மாவீரன் பூலித்தேவனே'' என்று எடுத்துக் கூறினர்.

'காவிரிக்குக் கரை கட்டிய கரிகாலனுக்கும், இமயத் திற்குப் படையெடுத்துச் சென்ற இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுக்கும், அந்நியரை—குறிப்பாக வெள்ளயரை முதன்முதலாக தமிழகத்திலிருந்து விரட்டிய பூலித்தேவன்

என்ற செந்தமிழ் வீர மறவனுக்கும் கொடுக்கப்படாத ஒரு பிரசித்தம் இந்தக் கட்டபொம்மனுக்குச் கொடுப்பது நியாயம் தானா? என்பதையும் அலசிப் பார்க்க பலர் தீவிர மாக முற்பட்டிருக்கின்றனர். இது ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய விசயம் தான்'' என்று இதன் முக்கியத்துவத் தைப் பற்றி சிரஞ்சிவி என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள் ளார்.[6]

''பாஞ்சாலங் குறிச்சியில் நடந்த போர்தான், இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த முதல் சுதந்திரப் போராகும் என்று பொதுவாகக் கூறப்படு கிறது. ஆனால் சரித்திரத்தை ஆராயும் அறிஞர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. காரணம் வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு முன்னதாகவே, தென்பாண்டி நாட்டில், நெற்கட்டாஞ் செவ்வல் என்ற பாளையத்தின் அதிபதி யாகிய பூலித்தேவன் ஆங்கிலேயரை எதிர்த்து வெகு துணிச்சலாகப் போராடி, வீரசாகசங்கள் பல புரிந்திருப் பதை சரித்திரம் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது.[7]

''கட்டபொம்மன் பாட்டனார் சுதந்திர விரோதியாய் இருந்த நாளிலேயே தமிழகத்தின் விடுதலைப் போரைத் தொடங்கி வைத்த மாணிக்கம், மறவர் குலத்திலகம், தமிழினத்தின் தனிப் பெரும் புகழ் நம் வீரத் தலைவர் பூலித்தேவர்' என்று டாக்டர் ந. சஞ்சீவி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[8]

''தமிழகத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தவனும், தமிழகத்து வீர மறவனும், தன்னிகாற்ற ஆற்றலுடன் வெள்ளைப்படைகளையும், கும்பினிப்படை களையும், துரோகிகளின் படைகளையும் எதிர்த்து நின்று உரிமைக்குரல் எழுப்பிய தமிழர் தலைவனுமான பூலித் தேவனுக்குத்தான் முதலிடம் தரப்பட வேண்டும். இதில்

மாறுப்பட்ட அபிப்பிராயம் எதுவும் எவருக்கும் இருப்ப தற்கு இடமே கிடையாது. போராட்டத்தின் அளவும் கடுமையும் அதிகமானவை'' என்று புலியூர்க் கேசிகன் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[9]

'1757-ல் பிளாசி யுத்தம் நடந்தது. அதற்கு முன்பே மக்கள் புரட்சியைத் துவக்கினான் பூலித்தேவன். தென்னாட்டில் முதன்முதல் விடுதலைப் போர் முரசு கொட்டியவர்களில் பூலித்தேவன் முதலிடம் பெறுகிறான்' என்று வ. வேணுகோபாலன் என்பவர் தமது நூலில் குறிப் பிட்டுள்ளார்.[10]

'தமிழ்நாட்டில் 18-ஆம் நூற்றாண்டில் கும்பினி ஆட்சி ஏற்படுவதை எதிர்ந்துத் தன் அரசுரிமையை காக்கத் தீவிர மாகப் போராடிய பாளையக்காரர்களில் பூலித்தேவன் காலத்தால் முந்தியவன். நம் தாய்நாட்டின் சுதந்திரத்திற் காகப் பெரிதும் போராடிய ஒரு வீரன்' என்று பி. கோதண்டராமன் என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள் ளார்[11]

'வீரபாண்டிய கட்டபொம்மன் பிறப்பதற்கு முன்பே பூலித்தேவன் வெள்ளையரை மட்டும் எதிர்க்கவில்லை, பிரஞ்சுக்காரர், ஆதிக்க வெறி பிடித்தோர், மதவெறி பிடித்தவர்கள், உள்நாட்டு ஐந்தாம் படைக் கூலிகள் ஆகிய பலவகை ஆதிக்கங்களையும் எதிர்த்து விடுதலைப் போரை நடத்தியவன், இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் முழக்கம் செய்த முதல் இந்தியன்' என்று துர்க்காதாஸ், எஸ். கே. ஸ்வாமி என்பவர் தமது நூலில் குறிப் பிட்டுள்ளார்.[12]

'திருநெல்வேலிச் சீமையிலிருந்த பாளையக்காரர்களில் வீர சுதந்திர வெறிபிடித்தவர்கள் உண்டு. அவர்களில்

பூலித்தேவர் என்பவரும் ஒருவர். சிறிய பாளையக் காரரா யினும் பெரு வீரர் அவர் நவாபை லட்சியம் செய்யவில்லை. வெள்ளைக் கும்பினியாருக்கும் கொஞ்சமும் அஞ்சவில்லை. எனவே கப்பத்தொகை கொடுக்க முடியாது என்று மறுத்து விட்டார்.

மறுக்கவே கும்பினியின் படையும், நவாபின் படையும் அவருடன் போரிட்டன. எனினும் பூலித்தேவரை வெற்றி கொள்ள இயலவில்லை. பூலித்தேவரைப் போல் வரி கட்ட மறுத்தவர் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மு' என்று பி. ஸ்ரீ என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். [13]

கப்பம் காரணமாக 1755-60 வாக்கில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதை எதிர்த்துத் தன் அரசுரிமையைக் காக்கத் தீவிரமாகப் போராடிய பாளையக்காரர் பூலித் தேவர். இவரை தொடர்ந்து கட்ட பொம்முவும் வரி கொடுக்க மறுத்ததால் சண்டை மூண்டது என்று நா. முகமது செரீபு என்பவர் தமது நூலில் குறிப்பிட் டுள்ளார். [14]

'இந்தியாவிலேயே முதன் முதலில் ஆங்கிலேயரை எதிர்த்தவன் தமிழன், அவன்தான் பூலித்தேவன். சரித்திரத் தின்படி, சான்றுகளின்படி தமிழனுக்குக் கிடைக்க வேண்டிய இப்பெருமை தெலுங்கனுக்குக் கிடைப்பதா?' என்று தமிழ் வாணன் தமது கட்டுரையில் குறிப்பிட்டிள்ளார். [15]

'ஆங்கிலேயர்களையும், இசுலாமியர்களையும் முறிய டித்து, மீண்டும் இந்து அரசைக் கொண்டு வரமுயன்ற பூலித்தேவர், இந்திய மண்ணில் ஆங்கிலேயர்களை முதன் முதலில் எதிர்த்துத் தனி உரிமைக்காகப் போராடிய வீரர் என அறியப்படுகிறார்.

அமெரிக்க விடுதலைப் போராட்டம், பிரஞ்சுப் புரட்சி இவைகளுக்கும் முன்பாக இந்துக்களை ஒன்று திரட்டி, இத்தலைவர் தீரமுடன் போராடி ஆங்கிலக் கும்பினியாரைக் கதிகலங்க வைத்ததை வரலாற்றுலகம் என்றும் மறவாது' என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் அ. கணபதி. [16]

'வீரபாண்டியனுக்கு முன்னால் ஆங்கிலேயருக்கு எதிர்ப்புக்குரல் கொடுத்தவர் பூலித்தேவர்' என்று பேராசிரியர் ந. க. மங்கள முருகேசன் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். [17]

நெல் கட்டுஞ்செவ்வல் பாளைத்தலைவரான பூலித்தேவர்தான் முதன் முதலில் கம்பெனி ஆதிக்கத்துக்கெதிராகக் கூட்டணி கண்டு போர்க்கொடி உயர்த்தினார்.

பூலித்தேவருக்குப் பின்னர் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்தவர் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத் தலைவரான வீரபாண்டிய கட்டபொம்மு நாயக்கர் ஆவார்' என்று டாக்டர் க. வெங்கடேசன் அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். [18]

'பூலித்தேவர் முதல் இந்திய விடுதலை வீரர்' என்று டாக்டர் ச, செயப்பிரகாசம் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். [19]

''ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியை, நெல் கட்டும் செவ்வல் பாளையத் தலைவன் பூலித்தேவன்தான் முதல் முதலில் வெள்ளையரின் கம்பெனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடியை உயர்த்தினான். பூலித்தேவனுக்குப் பின்னர் ஆங்கில ஏகாதிபத்தியத்தைஎதிர்த்தது, பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத் தலைவன் வீரபாண்டியக் கட்டபொம்மன்'' என்று காங்கிரசு நூற்றாண்டு கண்காட்சி

குழுவினர் வெளியிட்டுள்ள மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. [20]

இந்திய விடுதலைப் போரின் வரலாறு கட்டபொம்மனிலிருந்து தொடங்குகிறது என்று கூறிய ம. பொ. சி. அவர்களின் கருத்துக்களை மறுத்து சிரஞ்சீவி, டாக்டர் ந. சஞ்சீவி, புலியூர்க் கேசிகன், வ. வேணுகோபாலன், பி. கோதண்டராமன், துர்க்காதாஸ், எஸ். கே, ஸ்வாமி, பி. ஸ்ரீ, நா. முகமது செரீபு, தமிழ்வாணன், அ, கணபதி, ந. க மங்கள முருகேசன். டாக்டர். ச. செயப்பிரகாசம் ஆகியோர் கூறியுள்ளனர். இவர்கள் கூறிய கருத்துக்கள் யாவும் கீழ்க்கண்ட முடிவுகளைக் கொண்டு விளங்குகின்றன.

1. வீரபாண்டிய கட்டபொம்மன் பிறப்பதற்கு முன்பே வெள்ளையரை எதிர்த்துப் போராடினான் பூலித்தேவன்.

   (கட்டபொம்மன் பிறந்தது 1760, பூலித்தேவன் கும்பினியரை முதன் முதல் எதிர்த்தது 1755)

2. கட்டபொம்மன் பாட்டனார் வாழ்ந்த காலத்திலேயே தமிழகத்தின் விடுதலைப் போரை நடத்தினான் பூலித்தேவன்.

   (பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன் 1736-176)

3. 1757-ல் நடைபெற்ற பிளாசி யுத்தத்திற்கு முன்பே மக்கள் புரட்சியைத் துவக்கினான் பூலித்தேவன்.

4. 18-ஆம் நூற்றாண்டில் கும்பினியர் ஆட்சி ஏற்படுவதை எதிர்த்துப் போரிட்டான் பூலித்தேவன்.

5. முதன் முதல் கம்பெனி ஆதிக்கத்திற்கு எதிராகக் கூட்டணி கண்டு போராடியவன் பூலித்தேவன்.

(Tinnivelly. H. R. Pate-P-72)

(The puli Tevan, the leader among the poligars of the west, now began to Contemplate a union with his Comrades of the east, the chief of whom was Kattaboman Nayakkan. Both he however and his vassal at Ettayyapuram Refused.

6. அமெரிக்க புரட்சி, பிரஞ்சுப் புரட்சி இவைகளுக்கு முன்பே கும்பினியரை எதிர்த்துப் போரிட்டான் பூலித்தேவன்.

(அமெரிக்கப்புரட்சி 1776, பிரஞ்சுப்புரட்சி 1789)

7. பூலித்தேவரைப்போல் வரிகட்ட மறுத்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.

8. பூலித்தேவனுக்குப் பின்னர் ஆங்கிலேயரை எதிர்த்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.

9. வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்னதாகவே, பூலித்தேவன் ஆங்கிலேயரை எதிர்த்து வெகு துணிச்சலாகப் போராடினான்.

10. கும்பினியப் படைகளையும், துரோகிகளின் படைகளையும் எதிர்த்து நின்று உரிமைக்குரல் எழுப்பியவன் பூலித்தேவன்.

மேலே கண்டுள்ள கருத்துக்கள் யாவும் வரலாற்றின் அடிப்படையில் காலவேறுபாடின்றி கூறப்பட்டவையாகும். கும்பினியரும், ஆற்காட்டு நவாபும் சேர்ந்து செய்து கொண்ட வரிவசூலிக்கும் ஒப்பந்தத்தின் தொடக்க காலத்திலிருந்து நடைபெற்ற போர்களை வரிசைப் படுத்திக்கூறியுள்ளனர்.

வரலாறு மறைக்கப்பட்டது ஏன்? என்பதற்கான காரணத்தைத் தெளிவாக புரிந்துகொள்ள முடிகின்றது. முதலாவதாக, பூலித்தேவன், இராபர்ட்கிளைவை எதிர்த்து திருச்சியில் போரிட்டு வெற்றி பெற்றான் என்ற செய்தியை நாட்டுப்புறப் பாடல்களின் மூலம்தான் தெரிந்துகொள்ள முடிகின்றது. அரசாங்க ஆவணங்களிலிருந்து அதைப் பற்றிய செய்திகள் இருப்பதாகத் தெரியவில்லை.

''சிங்கம் இருக்கும் குகையென்றறியாமல் செந்தலையர் கூடிவந்தால் அவரை உயிர் வாங்கும் பாரதத்தாய் நாடு, செங்கோல் வழுவா, அரசும் தளரா செழித்தோங்கும் தன்னாட்டில் வெங்கப்பயலே ஏன் வந்தாய். இதோ போருக்குச் சென்றேன்'' என்றார் என்று அந்தப் பாடல் கூறுவதாவது.

''ராபட் கிளைவ் பேட்டியைக்—கேட்டதும்
வீரத்துடன் படைவீரர் களைக்கூவி
அச்சமில்லாப் பூலி லட்சியமாய்—எழுந்தார்
அந்நேரம்ஆண்மை யுடன்தாவி வாள்பலகேடயம்
ஈட்டி யும்தான் எடுத்தார்.''

என்று பாடல் தொடருகின்றது.

இராபட் கிளைவ், இந்தியாவில் ஆங்கிலேயருடைய அரசியல் சக்தியை நிறுவியவன் என்பதால், அவன் பூலித் தேவனிடம் அடைந்த தோல்வியை மறைத்தனர்போலும். மேலும், 1755-இல் ஹெரானோடு எதிர்த்துப் போரிட்டு பூலித்தேவன் வெற்றிபெற்றான். இந்த சம்பவமும் மறைக் கப்பட்டது.

இத்தகைய சம்பவங்கள் கும்பினியரால் மறைக்கப்பட் டது என்பது தெளிவாகின்றது. கும்பினியர் மட்டுமல்லா

மல் நம்மவர்களும் அரசியல் காரணங்களுக்காகவும் பூலித் தேவனின் விடுதலைப் போரை மறைத்தனர் என்று முன் பகுதியில் கண்டோம். இதற்குச் சான்றாக தியாகி சண்முகம் என்பவரின் கடிதமும், பசும்பொன் முத்துராம லிங்கத் தேவரின் சொற்பொழிவும் சான்றாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மேலும், திரு. ம. பொ. சி. அவர்கள் கூறியுள்ள கருத் துக்களை மறுத்து. பலரும் கூறிய கருத்துக்களையும் எடுத் துக் கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து பூலித்தேவனின் வரலாறு மறைக்கப் பெற்றது எவர்க்கும் புலனாகும்.

எனவே, இந்த சிக்கலைப்பற்றி விரிவாகத் தெரிந்து கொள்வது சாலச்சிறந்தது. இந்திய விடுதலைப் போரின் கால கட்டங்களைப்பற்றி விரிவாகக் காணலாம்.

அடிக்குறிப்பு

1. (Pate. H. R., Tinnevelly, Volume I, 1917, P-411-412)

The headquarter Village is in the Possession of a lineal descondant of the first zamindar, but it had passed temporarily to Strangers before it came to him. The name officially adopted in the deed or permanent settlement was Avudaiapuram, Perhaps because the associations of the old name Nelkattanseval were too unpleasant. The name Panjalankurichi was expunged from all official records for a Simelar reason.

2. (மேற்படி நூல் Pate H. R. P—415 A cantonment was establieshed here in 1767 on the high ground to the north of the Present traveller's bangalow.)

3. மாரிசாமி எஸ். எஸ்., தேவர் அழைக்கிறார். இமயம் பிரஸ், சென்னை-3, 1953, ப-3

4. சசிபூசன் சௌத்ரி, இந்திய நாட்டின் உட்பூசல்கள் (Civil Disturbances in India)

5. சிவஞானம். ம.. பொ., முதல் முழக்கம். 1968 ப-1-2

6. சிரஞ்சீவி; வீரபாண்டிய கட்டபொம்மன். 1958; ப—264

7. மேற்படி நூல், வீரபாண்டிய கட்டபொம்மன். 1958 ப—10.

8. சஞ்சீவி. ந. வீரத்தலைவர் பூலித்தேவர்.

9. புலியூர்க்கேசிகன், புலித்தேவனா? பூலித்தேவனா? 1959, ப—2

10 வ. வேணுகோபாலன், புரட்சித்தலைவன் புலித்தேவன், 1958, ப—III

11. பி. கோதண்டராமன், இந்திய புரட்சி இயக்கம். 1978,

12 துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி, தமிழ்வீரன் பூலித்தேவன், 1958, ப—181.

13. பி. ஸ்ரீ, தமிழ்நாடும் காங்கிரசும், 1955, ப-27

14. மகமதுசெரீபு. நா. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு முன்னேற்றம் வெளியீடு, மானாமதுரை 1979, ப-16

15. தமிழ்வாணன், கல்கண்டு, 9-11-58, ப-1

16. கணபதி. அ. தமிழக வரலாறு, 1680, ப-115

17. மங்கள முருகேசன், ந. க. தமிழ்நாட்டின் வரலாறும் பண்பாடும்.

18. வெங்கடேசன், டாக்டர். க. இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, 1985, ப-1

19. செயப்பிரகாசம், டாக்டர். க. இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, 1981, ப-71

20. காங்கிரசு நூற்றாண்டுக் கண்காட்சி மலர், தேனாம்பேட்டை, சென்னை-1985.

இந்திய விடுதலைப் போரின் கால கட்டங்கள்

இந்திய விடுதலை இயக்கத்தின் கால கட்டங்களை ஆய்ந்து பார்த்தால் உண்மை தெரியவரும். முதலாவதாக அந்நியர்களுக்கும் முடிமன்னர்களுக்கும் நடைபெற்ற விடுதலைப் போராகும். இரண்டாவதாக ஆங்கிலேயருக்கும் சிப்பாய்களுக்கும் நடைபெற்ற விடுதலைப் போராகும். மூன்றாவதாக ஆங்கிலேயர்களை எதிர்த்து மக்கள் நடத்திய விடுதலைப் போராகும். விடுதலைப் போராட்டத்தின் கால கட்டங்கள் இப்படித்தான் இருந்திருக்கிறது. இதில் பதினெட்டாம் நூற்றாண்டில் அந்நியருக்கும் முடிமன்னர்களுக்கும் நடைபெற்ற போர்களைக் காண்போம்.

இந்திய விடுதலைப் போராட்டம் 1750-ஆம் ஆண்டி லிருந்து தொடங்கியது என்று கூறலாம். ஏனெனில் ஆற்காட்டு நவாபுக்காக, கும்பினியார் நேரடியாகக் கப்பம் வசூலிக்கத் தலைப்பட்டனர். கப்பம் வசூலிக்க வந்த கும்பினியரை எதிர்த்து தென் தமிழகத்திலுள்ள பாளையக் காரர்கள் குரல் கொடுத்தார்கள்.

1750-இல் இராபர்ட் கிளைவ் திருச்சியில் இருந்து கொண்டு அதிகாரம் செலுத்தினான். பாளையக்காரர் களை வந்து பணியும்படி ஆணையிட்டான்.

1751-இல் முதன் முதல் திருச்சி கோட்டையில் ஆங்கிலக் கொடி ஏற்றப்பட்டது. தென்னாட்டில் வரிவசூல் செய்வதற்காக இங்கிலீஸ்காரருள் முதல்வரான இன்னிசுதுரை என்பவன் வந்தான். இச்செய்தியைப் பற்றி திருநெல்வேலி மாவட்ட மானுவல் கூறியுள்ளது.[1] இன்னிசுதுரை தென்னாட்டில் பூலித்தேவன் போன்ற பாளையக்காரர்களின் ஒற்றுமையைக் கண்டு, ஏதும் செய்ய முடியாதவனாய் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

1755-இல் ஆற்காடு நவாபுக்கும் கும்பினியருக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கப்பம் வசூலிக்கும் உரிமை ஆங்கிலேயர் கைக்கு மாறியது. கும்பினியத் தளபதி அலெக்சாண்டர் ஹெரான் என்பவனை தென்னாட்டிற்குக் கப்பம் வசூல் செய்ய முதன் முதல் அனுப்பி வைத்தனர். கும்பினியர் படையுடன் வந்து கப்பம் வசூல் செய்யும் உரிமைச்சாசனம் முதன் முதல் ஏற்பட்டது. இதன் பின்னர் கும்பினியருக்கும், ஆற்காடு நவாபுக்கும் பல சாசனங்கள் ஏற்பட்டன.

1755-இல் ஏற்பட்ட சாசனத்தின் அடிப்படையில் நடைபெற்ற படையெடுப்பில் 2000 சிப்பாய்கள், 500 ஐரோப்பியர்கள் கலந்து கொண்டார்கள்.[2]

இந்த படையெடுப்பே சுதந்திர உணர்வு கொண்ட தென் சீமைகளை அடக்க வந்த முதல் படையெடுப்பாகும். தெற்குப் பாளையங்களின் மீது படையெடுத்து வந்து தாக்கிய முதல் ஆங்கிலேயன் ஹெரானேயாவான்.[3]

திண்டுக்கல் அருகிலுள்ள இலட்சுமணன் நாயக்கன் பாளையத்தை முதன் முதல் கர்னல் ஹெரான் முற்றுகையிட்டான். லட்சுமண நாயக்கன் அடிபணிந்து கப்பத்தைக் கட்டினான். அவன், ஹெரானை எதிர்த்து வரிகட்ட

மறுத்திருந்திருந்தால், விடுதலைப் போராட்டத்தின் மூதல்வன் என்னும் பெயரைத் தட்டியிருப்பான். அந்த நல்ல வாய்ப்பை நழுவ விட்டு விட்டான். அதன் பிறகு மதுரையும் ஹெரானுக்கு அடிபணிந்தது.

பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன்

பாஞ்சாலங் குறிச்சிக்குக் ஹெரான் சென்றான். அப்போது, பாஞ்சாலங் குறிச்சியின் பாளையக்காரனான பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன் என்பவன் இருந்தான். இவன் வீரபாண்டிய கட்டபொம்மனின் பாட்டனார் ஆவான். கிழக்குப் பாளையங்களுக்கெல்லாம் பொல்லாப் பாண்டியனே தலைமை தாங்கி வந்தான்.

ஹெரான் பெரும் படையுடன் வருவதை அறிந்த பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன், ஏராளமான சீர்வரிசைகளுடன் சிறிது கப்பத் தொகையையும் கட்டினான்.[4] ஆனால் ஹெரானோ இதற்கு மயங்கி விடாமல் கப்பத் தொகை முழுவதையும் கட்டும்படி கடுமை யாக எச்சரித்தான்.

பொல்லாப் பாண்டியனோ, பருவமழை பொய்யாததால் பஞ்சம் ஏற்பட்டு, கையில் பணமில்லாமல் இருப்பதாகக் கூறினான். தவணை கொடுத்தால் மீதித் தொகையை கட்டி விடுவதாகக் கூறினான்.

ஆனால் ஹெரானோ இரக்கங் கொள்ளவில்லை. பொல்லாப் பாண்டியனின் இரண்டாவது மகன் சின்ன பொம்முவையும், அவன் தம்பி, மற்றும் சில உறவினர் களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு மீதத் தொகையைக் கட்டிவிட்டு பிணைக் கைதி

களை மீட்டுக் கொள்ளுமாறு கூறிவிட்டான். பிணைக் கைதிகளையும் திருச்சிக்குக் கொண்டு சென்றனர். இதன் மூலம், கும்பினியருக்குப் பயந்து பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன் கப்பம் கட்டினான் என்பது உண்மையா கிறது.

எட்டப்ப நாயக்கர்

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன் பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன், ஹெரானுக்கு அடிபணிந்து கப்பம் கட்டியவுடன் எட்டையபுரம் பாளையக்காரன், ஹெரானுக்குப் பணிந்து கப்பம் கட்டினான். கப்பத்துப் பாக்கிக்காக, எட்டையாபுரத்தானிடமும் பிணைக் கைதி களைப் பிடித்து திருச்சிக்கு அனுப்பினான் ஹெரான். 1757ஆம் வருஷம் மகமது யூசுப்கானால் எட்டையாபுரத்துப் பாளையக்காரரிடமிருந்து 18,700 ரூபாயை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு பிணைக் கைதிகள் எட்டையாபுரத் திற்குக் கொண்டுவந்து விடுவிக்கப்பட்டனர். [5]

பூலித்தேவன்

மதுரையில், விசுவநாத நாயக்கன் ஆட்சி செய்யும் போது, பாண்டிய நாடு எழுபத்திரெண்டு பாளையப்பட்டு களாகப் பிரிக்கப்பட்டது. அதில் ஒன்றுதான் நெற்கட்டான் செவ்வல் பாளையமாகும். பாண்டியரின் ஆட்சிக்காலத்தில் ‘ஆவுடையார் பாளையம்’ என்று அழைக்கப்பெற்றது. 1378-இல் மதுரையை ஆண்டுவந்த வரகுண சிந்தாமணி பாண்டியனால் இப்பாளையம் பூலித்தேவனின் முன்னோர் களில் ஒருவனுக்கு வழங்கப் பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. [6]

ஆவுடையார் புரம் பாளையம், பின்னாளில் பூலித்தேவன் காலத்தில் 'நெற்கட்டான் செவ்வல் பாளையம்' என்று அழைக்கப் பெற்றது. அந்த வழியில் வந்தவர்களில் பூலித்தேவன் பத்தாவது பாளையக்காரனாவான்.

இத் தகைய சிறப்புமிக்க ஊரில் சித்திரபுத்திரத்தேவர் சிவஞான நாச்சியார் ஆகியோருக்கு 1715ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் பதினாறாம்நாள் (1-9-1715) பூலித்தேவன் பிறந்தான் என்று நாட்டுப்புறப் பாடல் கூறுகின்றது.[2] பெற்றோர் இட்டபெயர் காத்தப்ப பூலித்தேவன் என்பதாகும்.

பூலித்தேவர், மகா பராக்கிரமசாலியாயும், அஞ்சாத நெஞ்சம் படைக்கப்பட்டவராயுமிருந்தார். கும்பினியர்

ளின் உத்தரவை சிறிதுகூட லட்சியம் செய்யவில்லை. பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன், எட்டையபுரத்தான் போன்றவர்கள் கும்பினியருக்குக் கப்பம் கட்டியபோதும், பூலித்தேவன் அதனைக் கண்டு சிறிதேனும் அஞ்சினா னில்லை. கும்பிணியத் தளபதி ஹெரானை எதிர்த்துப் போரிட வெகு துணிச்சலோடு எதிர்பார்த்திருந்தான் பூலித்தேவன்.

'பூலித்தேவனை எளிதில் வெற்றி கொண்டு விடலாம்' என்று மனப்பால் குடித்தவனாய் மாபூசுக்கான் பெரும்படை யுடன் சென்று நெற்கட்டான் செவ்வலைத் தாக்கினான். ஆனால் அதேநேரத்தில் ஹெரான் நத்தக்கோட்டையைத் தாக்க சென்றுவிட்டான்.

மாபூசுக்கானின் படையைக் கண்டு சிறிதேனும் அஞ்சாமல் பூலித்தேவன், மறத்தமிழ் வீரர்களோடு, கும்பி னியர் படையை எதிர்த்தான். மாபூசுக்கானை கோட்டை யின் பக்கமே நெருங்கவிடாமல் வரும் வழியிலேயே அவனை மடக்கி விரட்டியடித்தான் பூலித்தேவன். பீரங்கி வண்டி களையும், வெடிமருந்துகளையும் அப்படியே போட்டுவிட்டு, 'தலை தப்பினால் போதும்' என்று புறமுதுகிட்டு ஓடிப் போயினர்.

கர்னல் ஹெரான், மேலிடத்தின் உத்திரவின்படி திருச்சிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது, மாபூசுக் கானின் தோல்வி அறிவிக்கப்பட்டது. 'எப்படியும் பூலித் தேவனை ஒழித்துக் கட்ட வேண்டும்' என்று மாபூசுக்கான் ஹெரானிடம் கூறினான்.

பூலித்தேவனை ஒழிப்பது, நவாபின் பணி சிறக்கப் பெரிதும் உதவும் என்று கூறினான். கோட்டையும் மண் ணால் கட்டப்பட்டதென்றும், மூன்று அல்லது நான்கு நாட்

களில் அந்தப் பணியை முடித்து விடலாம் என்றும் ஹெரானிடம் கூறப்பட்டது.

அதன்பின்னர், கர்னல்ஹெரான் நெற்கட்டான் செவ்வல் வந்து. பூலித்தேவனின் கோட்டையைத் தாக்க முனைந்தான் நேரில் கோட்டையைப் பார்த்த பிறகுதான் தனது ஆறு பவுண்டு பீரங்கிகள் ஒரு சிறு துவாரத்தைக்கூட உண்டுபண்ண முடியாததைக் கண்டான்.

இன்னும் எத்தனை நாட்கள் போரிட்டாலும், பூலித் தேவனின் கோட்டையை அசைக்க முடியாது என்று கர்னல் ஹெரான் உறுதியாக நம்பினான். கோட்டை மிகுந்த வலிமை படைத்ததாக இருந்தது. கற்களால் கட்டப்பெற்றதாகவும், நாலாயிரம் வீரர்களால் பாதுகாக்கப்பெற்றும் வருவதாகவும் அறிந்தான்.

மதுரையிலிருந்து கொண்டு வரப்பெற்ற ஆறு பவுண்டர் பீரங்கிகளால் மதிலைத் தாக்கிப் பார்த்தேன். எனினும் எந்தச் சிறு அளவுச் சேதமும் ஏற்படவில்லை.

6 பவுண்டு பீரங்கிகளால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் பதினெட்டுப்பவுண்டு பீரங்கி பயன்படுத்தப் பெற்றது.

தளபதிகள் குழுவும் இதனையே வலியுறுத்தியது. மாபூசுக்கான் இதைத் திரும்பத் திரும்ப சொன்னதால்தான் திருச்சி செல்லும் வழியிலிருந்து விலகி நெற்கட்டுஞ் செவ்வலுக்குச் சென்றேன் என்று மேலிடத்திற்கு ஹெரான் கடிதம் எழுதினான்.

கர்னல் ஹெரான் பெரும்படையுடன் வருவதை அறிந்த பூலித்தேவன் புயலெனப் பாய்ந்து சீறி எழுந்தான். புறநானூறு போற்றும் வீரமறக் குடியில் பிறந்த தமிழ் மற

வனல்லவா? அஞ்சாத நெஞ்சம் படைத்தவன், ஆண்மை யாளன், சாம, தான, பேதம், தண்டம் என்னும் நான்கு வகை உபாயங்களையும் வெல்லுவதில் சாணக்கியனையும் மிஞ்சும் ஆற்றல் மிகு வீரன். கும்பினியரைப் போல் நவீன ஆயுதங்களில்லாவிட்டாலும், தமிழர்களிடம் எப்போதும் வழங்கப்பெற்றுவரும் பழமையான ஆயுதங்கள் இருந்தன.

கும்பினியர்கள், தங்கள் கைவசம் உள்ள பீரங்கிகளால் கோட்டையைத் தகர்க்க முடியாதென்பதையும், படை வீரர்களுக்கு உணவுப் பொருட்களும் இல்லை; இந்நிலையில் அதிகநாள் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாதென்பதை யும் ரகசியமாகத் தெரிந்து கொண்டு தீவிரமாக எதிர்த்துப் போரிட்டான் பூலித்தேவன்.

கர்னல் ஹெரானின் படைகள், கோட்டையைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். பீரங்கிகள் குண்டு மழை யைப் பொழிந்தன. அவ்வாறு பலமுறைகள் முற்றுகை யிட்டும் சிறு துவாரத்தைக் கூட உண்டுபண்ண முடிய வில்லை. ஹெரான் அதைப் பார்த்து வியப்பும், வேதனை யும் அடைந்தான்.

இதனால் கடுங்கோபம் கொண்ட ஹெரான் கைவச முள்ள இரண்டு பீரங்கிகளையும் கோட்டை முன்பு நிறுத்திக் குண்டுகளைப் பலமணி நேரங்களாகப் பொழிந்துகொண்டே இருக்கும்படி செய்தான். குண்டுகள் சிதறி விழுந்தனவே தவிர, வேறொன்றும் செய்ய முடியவில்லை.

நெற்கட்டான் செவ்வல் கோட்டையும், பூலித் தேவனைப் போலவே பீரங்கிக் குண்டுகளை அலட்சியப்படுத் தியது இன்னும் எத்தனை நாள் போரிட்டாலும் பூலித் தேவனின் கோட்டையை அசைக்க முடியாது என்ற கர்னல் ஹெரான் உறுதியாக அறிந்தான். பூலித்தேவனின் மன

உறுதியும் ஒரு நாளும் குலையாது என்று கர்னல் ஹெரான் தெளிவாகத் தெரிந்து கொண்டான்.

இந்நிலையில், போரை விரும்பாமல் சமாதானத்தில் நாட்டங் கொண்டவனைப்போல நடித்து துபாசு முதலியாரைப் பூலித்தேவனிடம் தூது போகச் சொன்னான் ஹெரான்.

பெயரளவிற்கு ஒரு சிறுதொகை இருபதாயிரம் ரூபாய் கட்டினால் போதும், ஹெரான் திருப்தியோடு போய்விடுவார் என்று முதலியார் கூறினார். ''நாங்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள்; மண்ணுக்குச் சொந்தக்காரர்கள்; கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிகள் நாங்கள். எங்கிருந்தோ வந்த கும்பெனியாருக்கு எதற்காகக் கப்பம் செலுத்த வேண்டும்.

நாயக்கர்களுக்கே கப்பம் கட்டாத நாங்கள் இவர்களுக்கா கப்பம் கட்டுவோம். ஒரு சல்லிக்காசு கூட 'கப்பம்' என்னும் பெயரில் கட்டமுடியாது. இந்த நாடு முழுவதும் தலைக்கு 'ஒரு ரூபாய்' என்று வசூலித்தால்கூட ஹெரான் கேட்கும் தொகை வராதே! பொருளாதாரம் தெரியாத ஒருவனையா கும்பினியர் அனுப்பி வைத்தனர்? என்று ஏளனம் செய்தான் பூலித்தேவன்.

படையினர் உணவின்றி வாடுகின்றனர். கொஞ்சம் நெல்கொடுத்தால்போதும் என்றார் முதலியார். 'குத்தகை' என்னும் பெயராலோ, 'வரி' என்னும் பெயராலோ ஒரு மணி நெல்லைக்கூட கட்டுவதில்லை. ஹெரானால் ஆனதைப் பார்க்கச் சொல், என்று பூலித்தேவன் கூறிவிட்டான்.

இதனால் ஹெரான் மீண்டும் கோட்டையைத் தாக்கினான். பூலித்தேவன் படைவீரர்களின் வளைதடிகள் விளை

யாட ஆரம்பித்தன. சுருள்பட்டா சுழல ஆரம்பித்தன. வாட்கள் மின்னலென மின்னி எதிரிகளைக் கண்டதுண்ட மாக்கின, வேல்கள் சீறிப்பாய்ந்தன.

மலையே விழுந்தாலும் நிலைகுலையாத மாவீரன் பூலித்தேவ்ன் தொடர்ந்து வீரப்போரை நடத்தினான். ஆனால் ஹெரானோ, பூலித்தேவனின் வீரமறவர்கள் நம்மை நாசமாக்கி விடுவதற்குள் இந்த இடத்தைவிட்டு அகன்றுவிட வேண்டும் என்று முடிவுக்கு வந்தான்.

கர்னல் ஹெரான். நெற்கட்டான் செவ்வலைவிட்டு 1755-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் நாள் வெட்கத் தோடும் வேதனையோடும் புறப்பட்டுச் சென்றான். முதன் முதல் வந்த கும்பினிய தளபதியை தோல்வியடையச் செய்து மாபெரும் வெற்றியைப் பெற்றான் பூலித்தேவன். இதுவே இந்திய விடுதலைப் போரில் ஓர் இந்தியனான பூலித்தேவன் முழங்கிய முதல் முழக்கமாகும். கும்பினியரின் முதற் படையெடுப்பு இவ்வாறு முடிவுற்றது.

கும்பினியருக்கு ஏற்பட்ட முதல் தோல்வியை மறைக்க முயன்றனர் கும்பினியர். அதில் கும்பினியர் வெற்றியும் கண்டனர் என்றுதான் சொல்ல வேண்டும். ஆயினும், அரசு ஆவணங்களில் கும்பினியர் தினசரி எழுதிய குறிப்புகளை மறைக்க முடியவில்லை. 11-4-1755, 14-5-1755 16-5-1755 ஆகிய மூன்று கடிதங்கள் ஹெரானால் மேலிடத்திற்கு எழுதப் பெற்றவையாகும். அவைகளே இன்றும் ஆதார மாக உள்ளன. [8]

மாவீரன் பூலித்தேவன் வரிகட்ட மறுத்தான் என்பதற் கான ஆதாரத்தை இராபர்ட் ஓம் எழுதிய நூலிலிருந்து காணலாம்.

Robert Ormes Hindustan Varalaru—Page. 390.

Thus for Orme. By Nellitangaville, a name which occurs very frequently in the accounts of these times, we are to understand Nerkattan sevval (Nel-Kattan-sevval) the head quarters of the "Pulitaver,' that is, the Puli-devar the herediary title of the Poligar of Avudeiyapuram, in what is now the Sankaranainar kovil Taluk, a chief whose territories were of small extent but whose influence at that time throughout the whole of the western Part of Tinnevelly, through the fame of his abilities, was immeuse.

"It was the misfortune of colonel Heron to place the utmost confidence in his interpreter, and to be constantly betrayed by him; for before the army arrived in sight of the fort, this man had informed the Poligar that they had no battering cannon, and that they would not remain long before the place, the Poligar therefore, secure in his fort, which was built of stone and very strong, answered the summons with insolence; upon which the field pieces and two cohorns fired smartly upon the walls for several hours; but this annoyance producing no effect, another message was sent, offering that the arms should retire, provided he would pay 20,000 rupees, The Poligar relying on the information which he had received from the interpreter, and encouraged by this relaxation in the terms which were at first proposed to him, answered with great contempt, that such a sum could not be raised in his whole country, and that he knew the value of money too well to pay a single rupee. By this time to the army were much distressed for provisions of all kinds, and the sepoys ready to mutany for want of pay; both which Mahfuz khan had promised, but had neglected to

supply. It was therefore determined to march away to madura. where they arrived, accompanied by Mahfuz khan. on the 22nd of May."

பூலித்தேவனுக்குப் பின்னர் 1772இல் சிவகங்கை முத்து வடுகநாதர் வீரப் போர் புரிந்து வீரமரணம் அடைந்தார். அவரைப்பற்றிக் காணலாம்.

முத்துவடுகநாதர்

பூலித்தேவனுக்குப் பின்னர் விடுதலைப் போரை முத்துவடுகநாதர் தொடங்கி வைத்தார். முத்துவடுகநாத

தேவர், சிவகங்கை முதல் மன்னன் சசிவர்ணத் தேவரின் மகனாவார். இவர் சிவகங்கையின் இரண்டாம் அரசராக

விளங்கினார். 1772-இல் ஆற்காட்டு நவாபும், கும்பினியரும் சிவகங்கையின் மீது படையெடுத்து வந்தனர். கும்பினியரின் முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டன. முத்துவடுக நாதருக்கு முன்னரே பூலித்தேவனின் விடுதலைப்போர் 1767-இல் முடிவுற்றது.

இந்நிலையில், முத்துவடுகநாதரைத் தீர்த்துக் கட்ட சதித்திட்டத்தினைத் தயார் செய்தனர் கும்பினியர். காளையர் கோவிலிலுள்ள இறைவனை வழிபட வந்து தங்கியிருந்த போது, திடீர் தாக்குதலைத் தொடுத்தனர் கும்பினியர். வீரப்போர் புரிந்த முத்துவடுகநாதர் 25-6-1772-இல் வீர மரணம் அடைந்தார். இந்திய விடுதலைப் போரின் ஒளி விளக்காகத் திகழ்ந்தார் முத்து வடுகநாதர்.

தம் கணவர் இறந்த செய்தியைக் கேட்டுப் புயலென எழுந்து; கும்பினியரை எதிர்த்துப் போருக்குக் கிளம்பினார் வீர மங்கை வேலு நாச்சியார்.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பூலித் தேவனுக்குப் பிறகு, கும்பினியரை எதிர்த்துப் போர்க் கொடியை உயர்த்தினார் முத்துவடுகநாதர்.

வீரமங்கை வேலுநாச்சியார்

வேலுநாச்சியார், செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதிக்கும் சக்கந்தி முத்தாத்தாள் நாச்சியாருக்கும் 1730-இல் பிறந்தார். 1746-இல் முத்துவடுக நாதரை மணந்தார் வேலுநாச்சியார்.

அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்திய வீரப் பெண்மணிகளில் சிவகங்கைச் சீமையின்

அரசி வேலுநாச்சியார் என்பவரும் ஒருவராவார். தம் கணவர் முத்துவடுக நாதரை வஞ்சகமாகக் கொன்ற கும்பினியரை எதிர்த்து வீரப் போர் புரிந்தார். அவருடைய வீரப் போருக்கு உதவியாக அமைச்சர் தாண்டவராயம் பிள்ளை, மருதுபாண்டியர் ஆகியோர் கும்பினியரை எதிர்த்துப் போராடினர். வெற்றி கும்பினியர் பக்கமே ஏற்பட்டதால், வேலுநாச்சியார் சிவகங்கையை விட்டு வெளியேறினார்.

வேலுநாச்சியார், திண்டுக்கல் கோட்டையில் ஹைதர் அலியைச் சந்தித்து, கும்பினியரை ஒழித்துக்கட்ட உதவியை நாடினார். ஹைதர் அலியின் உதவி கிடைத்ததும் வேலுநாச்சியார், பெரும்படையுடன் சிவகங்கையை மீட்கப் புறப்பட்டார்.

கும்பனியரை எதிர்த்து நடத்திய போரில் வேலு நாச்சியாரே வெற்றி பெற்றார். தன் கணவனைக் கொன்ற

வஞ்சகர்களான கும்பினியரை விரட்டியடிக்கத் தீவிரமாகத் திட்டம் தீட்டினார். வேலுநாச்சியார், பிரான்சு நாடு சென்று உதவி கேட்டார் என்பதைப் பாரீசிலுள்ள **Archieves Nationale Bibliotheque Nationale, Archierves duministore des affarises estrangers** ஆகிய வரலாற்று ஆய்வகங்களில் உள்ள குறிப்புகள் கூறுகின்றன.[9]

உருது, சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் பேசவும், எழுதவும் தெரிந்தவர் வீரமங்கை வேலுநாச்சியார். 25-12-1796-இல் இறந்தார். சான்சி ராணிக்கு முன்னரே வாளெடுத்துப் போரிட்டு கும்பினியரை விரட்டியடித்த முதல் பெண்மணி வேலுநாச்சியாராவார். அவரின் வீர வரலாறு மறைக்கப் பெற்றது.

'இந்தியாவிலேயே வெள்ளை ஆங்கிலேய கும்பினிக்காரனை எதிர்த்த முதல் வீராங்கனை மறவர் குலத்து மகாராணி வேலுநாச்சியார். இந்த வேலு நாச்சியார் இருக்க வேண்டிய இடத்தில் இன்று ஜான்சிராணி இருப்பது எந்த விதத்திலும் பொருத்தமாகாது. இது ஒரு சரித்திரத்துக்கு இழைக்கும் அநீதி'' என்று டாக்டர். கோவி. மணிசேகரன் கூறியுள்ளார்:[10]

வேலுநாச்சியாரின் வீர வரலாறு, வரலாற்று ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

முத்துராமலிங்க சேதுபதி

சிவ கங்கையில், முத்துவடுகநாதர்- வேலுநாச்சியார் ஆகியோர் கும்பினியரை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த சமயத்தில், இராமநாதபுரத்தில் முத்துராமலிங்க

சேதுபதி கும்பினியரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தலைப்பட்டார்.

1772-ஆம் ஆண்டு சூன் 2-ஆம் நாள் சோசப் ஸ்மித் என்ற ஆங்கிலேயன் தலைமையில் இராமநாத புரத்தில் பெரும் போர் ஏற்பட்டது. இந்தப் போரில் மறவர் படையைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற் பட்ட போர் வீரர்கள் வீரமரணம் அடைந்தனர்.

பன்னிரெண்டு வயதான முத்துராமலிங்க சேதுபதியும், அவருடைய தாயாரும், கும்பினியரால் கைது செய்யப்பட்டு திருச்சிக் கோட்டையில் அடைக்கப்பட்டனர். சிறைச் சாலை யில் மிகவும் மனம் வருந்தி சேதுபதியின் தாயார் காலமா னார். எட்டு ஆண்டுகள் கடந்த பிறகு முத்துராமலிங்க சேதுபதி விடுதலை செய்யப் பெற்றார்.

முத்துராமலிங்க சேதுபதி மீண்டும் இராமநாதபுரம் மன்னராகப் பதவியை ஏற்றார். பன்னிரண்டு வருடங்கள் சிறப்பாகப் பல பணிகளை மேற்கொண்டு நல்லாட்சியை நடத்தினார்.

இந்நிலையில் தூத்துக்குடியிலிருந்து பாம்பன் வழியாகச் சென்ற கும்பினியருடைய இரண்டு கப்பல்களுக்கும் சுங்கம் செலுத்திய அத்தாட்சி இல்லாததால் நிறுத்திவைக்கப் பட்டன. அதனால் ஏற்பட்ட தாமதத்தால் முத்துராம லிங்க சேதுபதி மீது மிகுந்த ஆத்திரங் கொண்டனர் கும்பினியர்.[11]

1795-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ஆம் நாள் கும்பினியரின் படைகள் இராமநாதபுரம் கோட்டைக்குள் புகுந்தன. இராமநாதபுரம் சேதுபதியை கைது செய்து திருச்சிக் கோட்டைக்கு கொண்டு சென்று அடைத்தனர். பின்னர் சென்னை கோட்டைக்குக் கொண்டு சென்றனர்.

அவரின் உடல் நிலை மிகவும் சீர்கேடு அடைந்ததால் பார்க்டவுனுக்கு மாற்றினர். 23-1-1809 அன்று இரவு மரணம் அடைந்தார். அவருடைய மரணம் இந்திய விடுதலைப் போரில் பொறிக்க வேண்டிய ஒன்றாகும்.

முத்துராமலிங்க சேதுபதிக்குப் பின்னர் பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரன் வீரபாண்டிய கட்டபொம்மன் கும்பினியரை எதிர்த்துப் போராடினான் என்பதைக் காணலாம்.

வீரபாண்டிய கட்டபொம்மன்

பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரன் ஜகவீரக் கட்ட பொம்மன் என்பவனுக்கும், ஆறுமுகத்தம்மாள் என்ப

வனுக்கும் வீரபாண்டிய கட்டபொம்மன் 1760-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 3-ஆம் நாள் பிறந்தான். 2-2-1790-ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரனாக வீர பாண்டிய கட்டபொம்மன் பதவி ஏற்றான்.

தென்னாட்டு வரி வசூல் உரிமையை நவாபிடமிருந்து ஆங்கிலேயர்கள் 1792-இல் பெற்றனர் ஆறுவருடங்களாக வரி கட்டவில்லை கட்டபொம்மன். அதனால் ஆலன் என் பவன் வீரபாண்டிய கட்டபொம்மனிடம் வந்து வரி கட்டும்படி கூறினான். வரி கொடுப்பதில்லை என்னும் முடிவை கட்டபொம்மன் அறிவித்தான். கம்பெனியார் இதைப்பற்றி சிந்திக்கலாயினர்.



1798-ஆம் ஆண்டு ஜாக்சன் என்பவன் கலெக்டராக வந்தான். கட்டபொம்மன் வந்து ஜாக்சனை சந்திக்க வில்லை. ஜாக்சன், கட்டபொம்மனுக்கு தன்னை வந்து

சந்திக்கும்படி எழுதினான். முதல் இரண்டு தவணைப் பணத்துடன் தன்னை நேரில் சந்திக்க வேண்டுமென்றும் மற்றுமொரு கடிதமும் ஜாக்கன் எழுதினான்.

கட்டபொம்மனிடமிருந்து இரண்டு கடிதங்களுக்கும் பதில் இல்லை இன்னும் பதினைந்து நாட்களுக்குள் தம்மை வந்து இராமநாத புரத்தில் சந்திக்காவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜாக்சன் மீண்டும் ஒரு கடிதம் எழுதினான். பின்னர் கர்நாடக வீரர் இருவரை அனுப்பி வைத்தான் ஜாக்சன். 'ஒருவாரத் திற்குள் வந்து பார்க்கிறேன்' என்று கட்டபொம்மன் அவர் களிடம் கூறினான்.

கட்டபொம்மன் அந்த அழைப்பை ஏற்கமறுத்து உதாசீனம் செய்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக, கலெக்டரைப் பார்ப்பதன் மூலம் பகைமையைக் குறைக்கலாமென நம்பினான்.

வீரபாண்டிய கட்டபொம்மன், தம்பிமார், அமைச்சர். பிரதானிகள் உட்பட, நாலாயிரத்துக்கு மேற்பட்ட வேலாளர், வாளாளர், வில்லாளர் போன்ற வீரர்கள் புடை சூழ, கலெக்டரைப் பேட்டிகாண 24-8-1798-இல். திருநெல் வேலிக்குப் பயணமாயினர். இவர் பேட்டிக்கு வெளி வந்ததைக் கண்டு யாவரும் வியந்து கொண்டனர். [12]

ஜாக்சன், வீரபாண்டியனிடம் முதல் இரண்டுமாத வரிப்பாக்கியைக் கட்டி விடும்படி கடிதம் அனுப்பியிருந் தான். வரி கட்ட முடியாது என்று கூறிவிட்டு பாஞ்சாலங் குறிச்சியிலேயே கட்டபொம்மன் இருந்திருக்க வேண்டும். வரிகட்ட மறுப்பதென்றால் கலெக்டரைக் காணவேண்டிய அவசியமென்ன ?

தன்னுடைய தன்மானத்தை விட்டு விட்டு, திருநெல் வேலிக்குச் சென்று கலெக்டரைப் பேட்டி காணச் சென்ற வீரபாண்டிய கட்டபொம்மனின் செயலானது. சுதந்திர வீரன் கட்டபொம்மனுக்கு முதன் முதல் ஏற்பட்ட கருப்புப் புள்ளியாகும். இதன் பின்னர் தொடர்ந்து, வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு கருப்புப் புள்ளிகள் ஏற்பட்டன.

இதனைப்பற்றி வீரபாண்டிய கட்டபொம்மு கதைப் பாடலே கூறுகிறது.

> ''தயவுள்ள பிரதானிக்குஞ் சேனைக்குஞ்
> சகல பேர்க் கொரு சேதி சொல்லி
> கண்ட சனம் நீங்களெங்கே போறீரென்று
> கண்டிப்பாய்க் கேட்டவர் தங்களுக்கு
> என்குலம் போற்றிய குற்றால நாதரை
> இப்போ தெரிசிக்கப் போறோமென்று
> சொல்லுங்கள் சொல்லுங்களென்று கட்டபொம்மு
> துரையுஞ் சொல்லி வழிகூடி.'' [18]

கட்டபொம்மனே சொல்வதாக இப்பாடல் கூறுகிறது. பேட்டிக்குப் போவது வெளியே தெரிந்தால் மக்கள் கேவல மாகப் பேசுவார்கள் என்னும் கருத்தின் அடிப்படையில் தான் இப்பாடல் அமைந்துள்ளது.

ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனை அவமானப் படுத்த வேண்டுமென்று திருநெல்வேலியிலிருந்து குற்றாலத் துக்குச் சென்று விட்டான். ஜாக்சன் குற்றாலம் சென்று விட்டான் என்பதை அறிந்த கட்டபொம்மன் என்ன செய் திருக்க வேண்டும்? ''நம்மை அவமானப்படுத்திய ஜாக்சனை பேட்டி காணவேண்டிய அவசியமில்லை'' என்னும் முடிவுக் கல்லவா கட்டபொம்மன் வந்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து, குற்றாலம் சென்றான். அங்கும் பேட்டி கொடுக்காமல் ஜாக்சன் சொக்கம்பட்டிக்குச் சென்றுவிட்டான். இப்படியாகக் கட்டபொம்மன், சிவகிரி சேத்தூர், திருவில்லிபுத்தூர், பேரையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி ஆகிய ஊர்களுக்கெல்லாம் சென்று, ஜாக்சனைப் பேட்டிகாண இயலாமல், முடிவில் இராமநாதபுரம் வந்து சேர்ந்தான்.

''ஜாக்சனின் சதித்திட்டம் வீரபாண்டியனுக்கு விளங்கி விட்டது. இடம் விட்டு இடம் மாறும் கருத்து, தன்னை அவமானப்படுத்தி அடிமை கொள்வதற்கேயாகும் என்பதை உணர்ந்து கொண்டான்'' என்று ம. பொ. சி. தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[14]

அவ்வாறு உணர்ந்த பின்னும் கட்டபொம்மன் பேட்டி காண வேண்டிய அவசியமென்ன? ''ஜாக்சனைப் பேட்டி காண வீரபாண்டியனுக்கு விருப்பமில்லை. ஆயினும் சுற்றிலுமுள்ள பாளையக்காரரெல்லாம் ஆங்கிலேயருக்கு அடிமைகளாகிவிட்டதால் கலெக்டரைப் பார்ப்பதன் மூலம் பகைமையைக் குறைக்கலாமென நம்பினான் என்று ம. பொ. சி. தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[15]

வீரபாண்டிய கட்டபொம்மன், சுதந்திர உணர்வோடு இருந்திருப்பானேயானால், ஜாக்சனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து, இராமநாதபுரம்வரை சென்றிருக்கமாட்டான்.

ஒரு நாளா? இரண்டு நாளா? பாஞ்சாலங்குறிச்சியில் 24-8-98இல் புறப்பட்டு, இராமநாதபுரத்திற்கு 10-9-98இல் வந்து சேர்ந்தான் கட்டபொம்மன். 18 நாட்கள் தொடர்ந்து கட்டபொம்மன் ஜாக்சன் பின்னால் சென்றான். தமிழகத்தில், எந்தப் பாளையக்காரனும், கட்டபொம்மனைப்போல் பேட்டி காணச் சென்றதில்லை. (1798)

மேலும், மற்ற பாளையக்காரர்கள் ஆங்கிலேயருக்கு அடிபணிந்து விட்டனர் என்றால் கட்டபொம்மனும் அடி பணிய வேண்டுமா? ஆங்கிலேயருடைய பகைமையைக் குறைக்கலாமென நம்பினான் கட்டபொம்மன்.

வீரசுதந்திரம் வேண்டி நின்றிருந்தால், கட்டபொம்மன் இந்த இழிவான நிலைக்குப் போயிருக்க மாட்டான். இராமநாதபுரம் பேட்டியானது, கட்டபொம்மனின் வீடு தலைப் போருக்கு ஏற்பட்ட கருப்புப் புள்ளியாகும். இதனை யாராலும் மறுக்க முடியாது.

வீரபாண்டிய கட்டபொம்மனின் போரைப்பற்றிக் காண்போம்.

1799-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் காலையில் கட்டபொம்மனுடைய கோட்டையில் தொடங் கிய போர், மாலையில் கதிரவன் மறையுமுன் முடிவுற்றது. போர் நிறுத்தத்திற்குப் பிறகு பானர்மென், பாளையங் கோட்டையிலிருந்து துணைப் படைகள் தருவிக்க வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருந்தான்.

ஆனால், அதே நேரத்தில் வீரபாண்டியகட்டபொம்ம னின் படைகள் கோட்டையைவிட்டு வெளியேறிவிடாமல் மதிலைச் சுற்றிக் காத்து நின்றனர் கும்பினியப் படையினர். கும்பினியரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்தியது ஒரு நாள் போரேயாகும். ஏழுமணி நேரமே போரிட்டதாக ம. பொ. சி. தனது நூலில் கூறியுள்ளார். [16]

பாளையங்கோட்டையிலிருந்து பீரங்கிப் படைகள் வந்து பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்குமாயின், இந்த வெற்றி விரைவில் தோல்வியாக மாறிவிடலாம் என்று கட்டபொம்மன் கருதினான். செப்டம்பர் மாதம்

7-ஆம் நாள் இரவு 10 மணிக்குமேல் எவரும் அறியா வண்ணம், தம்பிமார். தானாபதி உட்பட சில வீரர்களுடன் கட்டபொம்மன் கோட்டையைவிட்டு வெளியேறினான்.

வரலாற்று உண்மை இவ்வாறிருக்க, ''1798 ஆம் ஆண்டில் தொடங்கி 1801ஆம் ஆண்டின் இறுதிவரை அதாவது நான்கு ஆண்டுகள் பாஞ்சாலங்குறிச்சியாருக்கும், கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையருக்கும் கடுமையான போர் நடைபெற்றது.

வீரபாண்டியகட்டபொம்மன் நிகழ்த்திய அப்போர், சிம்மாசனத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஏற்பட்டது அன்று; செந்தமிழ் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேயாகும்'' என்று ம. பொ. சி. தமது நூலில் கூறியுள்ளார்.[19]

7 மணி நேரமே கட்டபொம்மனின் போர் நடைபெற்றது என்று கூறிய ம. பொ. சி. நான்கு ஆண்டுகள் நடைபெற்றதாகக் கூறுவதற்குக் காரணம் என்ன? நீண்டதோர் போரை கட்டபொம்மன் நடத்தினான் என்று வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கேயாகும். கட்டபொம்மன் நடத்திய போர் ஒரு நாள் என்றாலும், அதுவும் வீரவணக்கம் செய்யவேண்டியதொன்றாகும்.

கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய போர் இது ஒன்றுதான். மேலும் அன்றைய போரில் கட்டபொம்மனுக்கே வெற்றி கிடைத்தது என்றுதான் சொல்ல வேண்டும். அப்படியிருந்தும் கோட்டையை விட்டு கட்டபொம்மன் வெளியேறினான். வெற்றி தன் பக்கம் இருந்தும் கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறிய செயலானது, செந்தமிழ் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்குப் பதில் தன்னுடைய சிம்மாசனத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கேயாகும்.

குறுநில மன்னர்களிடமிருந்து கப்பப் பணத்தை வாங்கிக் கொள்ளும் உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனி யாருக்கு வழங்குவதே அந்த ஒப்பந்தத்தின் சாரம்.

ஆற்காட்டு நவாபு தன் வசமிருந்த அரசியல் அதிகாரங் கள் அனைத்தையுமே ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விட்டு, அரசர் என்ற பெயரில் வெறும் அலங்காரப் பொம்மையாக இருந்து வந்தார்'' என்று ம. பொ. சி. தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[18]

கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், ஆற்காட்டு நவாபுக்கும் 1792-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தமானது, அப்போது தான் புதிதாக ஏற்பட்டது போன்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு முன்னரே பல ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன.

1755-ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், ஆர்க்காட்டு நவாபுக்கும் கப்பம் வசூலிக்கும் உரிமை முதன் முதல் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி அலெக்சாண்டர் ஹெரான் முதன் முதலாக கப்பம் வசூல் செய்ய வந்தான். 1796-ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் முதலியாருக்கும் குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டது.

1755, 1756 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் இருக்கும்போது 1792-இல் ஏற்பட்ட ஒப்பந்தம் எப்படி முதன்மையாகும்? ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி, கட்டபொம்மன் தான் முதல் முழக்கமிட்டான் என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதே ம. பொ. சி. யின் நோக்க மாகும்.

'வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முற்பட்ட பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக்காரர்களும் நெற்கட்டுஞ் செவ்வல் பாளையக்காரர் பூலித்தேவர் போன்றவர்களும்

தங்கள்பால் மேலதிகாரம் பெற்றிருந்த ஆற்காடு நவாபுக்கு சரிவரக் கப்பம் செலுத்தாத காலங்களிலே, அந்தக் கப்பப் பணங்களை வசூலிப்பதற்காகக் கம்பெனிப் படைவீரர்கள் பயன்படுத்தப்பட்டனர். அந்த நேரங்களில் கம்பெனிப் படைகளுக்கும் மேற் சொன்ன பாளையக்காரர்களுக்கும் போர் நடந்ததுமுண்டு. ஆனால் அந்தப் போர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்தவை என்று கொள்வதற்கில்லை. ஆற்காடு நவாபின் ஆதிக்கத்திற் கெதிராக நடந்தவை என்றே கொள்ள வேண்டும்''[19]

வீரபாண்டியனுக்கு முற்பட்ட பாஞ்சாலங் குறிச்சிப் பாளையக் காரர்களான, பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன் (1736—1760) ஜகவீர கட்டபொம்மன் (1760—1790) ஆகியஇருவரும் கும்பினியர், ஆற்காடு நவாபு காலத்தில் பாளையக் காரர்களாக இருந்தனர்.

பொல்லாப்பாண்டிய கட்டபொம்மன், முதல் ஆங்கிலத் தளபதி ஹெரான் வரி வசூலிக்க வந்தபோது பணிந்து கப்பத் தொகையைக் கட்டினான் என்பதை முன் பகுதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கும்பினியரையோ, ஆற்காட்டு நவாபையோ எதிர்த்துப் போரிடவில்லை பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன். மாறாக, 1756-இல் திருநெல்வேலியில் நடைபெற்ற போரில் ஆற்காட்டு நவாபுக்கு ஆதரவாக, விடுதலை வீரன் பூலித்தேவனை எதிர்த்துப் போரிட்டான் பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன்.

இவனுடைய மகன் ஜகவீர கட்டபொம்மனும் ஆற்காட்டு நவாபுக்காக வரிவசூலிக்க வந்த சாதிக்கானிடம் வரித் தொகையைக் கட்டினான். இனி வாங்கும் வரித் தொகையில் ஆறிலொரு பங்கை எடுத்துக் கொண்டு மீதத்தை அனுப்பி வருக; உம் நன்றியைஎன்றும் மறவோம்;

இன்று முதல் தென்னாட்டுக்கு உம்மை சின்ன நவாபு என நாட்டியிருக்கிறோம் என்று சாதிக்கான், ஜகவீரகட்ட பொம்மனிடம் கூறினான்.[20]

வீரபாண்டிய கட்டபொம்மனின் தாத்தா பொல்லாப் பாண்டிய கட்டபொம்மனும் கட்டபொம்மனுடைய தந்தை ஜெகவீர கட்டபொம்மனும் ஆற்காட்டு நவாபு,கும்பினியர் ஆகியோருக்கு ஆதரவாக வரிவசூலித்துக் கட்டினர். இவர்கள் இருவரும் ஆற்காடு நவாபையோ, கும்பினி யரையோ எதிர்த்துப் போரிடவில்லை.

அவ்வாறிக்கும்போது ஆற்காட்டு நவாபையோ, கும்பினியரையோ எதிர்த்து இவர்கள் நடத்திய போர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்தவை என்று கொள்வதற்கில்லை; ஆற்காடு நவாபின் ஆதிக்கத்திற் கெதிராக நடந்தவை என்றே கொள்ள வேண்டும் என்று மா. பொ. சி.அவர்கள் கூறியது எவ்வாறுபொருத்தமுடைய தாகும்?

கட்டபொம்மனுக்கு முன்னால், பூலித்தேவன், சிவகங்கை, முத்துவடுகநாதர், வேலுநாச்சியார், இராம நாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி ஆகியோரே ஆற்காட்டு நவாபையும், கும்பினியரையும் எதிர்த்துப் போரிட்டனர்.

வரலாறு இவ்வாறிருக்கும்போது வரலாற்றைத் திரித்துக் கூறுவதன் மூலம் கொச்சைப் படுத்தலாமா? விடுதலை வீரன் பூலித்தேவன் நடத்திய விடுதலைப் போரானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போரேயாகும்.

ஆற்காட்டு நாவபின் அதிகாரங்கள் அனைத்தும் 1792-இல் ஒழிக்கப்பட்டு விட்டதாக ம. பொ. சி. கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்க விவாதமல்ல. 1801-ஆம் ஆண்டு

வரையிலும் ஆற்காட்டு நவாபின் ஆட்சி இருந்து வந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன.

1792-ல் ரெவினியூபோர்டு ஏற்பட்ட பிறகுதான், கும்பினியர் ஏகாதிபத்திய வாதிகளாக ம.பொ.சிக்குத் தெரிகின்றனர். ஆகையால், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முற்பட்ட பாளையக்காரர்களெல்லாம், கும்பினியாரை எதிர்த்து நடத்திய போர்களானது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்தவை என்று கொள்வதற்கில்லை என்று கூறினார்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முற்பட்ட பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் அனைவரும் கும்பினியாருக்குக் கப்பம் காட்டினார்கள் என்பது வரலாற்று உண்மை. அவர்களை எப்படி ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்களாகக் கொள்ள முடியும்?

ஆனால் அவர்களோடு ஒப்பிட்டு பூலிதேவனின் கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து நடத்திய போர்கள் யாவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்தவை அல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்?

கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து பூலித்தேவன் நடத்திய போர்கள் யாவும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போர்களாகும்.

அப்போது, ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டில் வர்த்தகத்தை விரிவாக்கி நல்ல பணமும் பண்டமாற்றும்பெற்றனர். இங்கிருந்து இங்கிலாந்துக்கு உப்பும், மிளகும் ஏற்றுமதி செய்தனர். அப்படி அவர்கள் தேடிய பொருள்களை ஆற்காட்டு நவாபுக்குக் கடனாகக் கொடுத்தனர்.

நவாபோ அதற்கு ஈடாக நாட்டில் வரிவசூலித்துக் கொள்ளும் உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்கினான்.

இதனால் ஆற்காட்டு நவாபுக்கு உரிமையான பாளையங்கள் அனைத்தும் ஆங்கிலேயருக்கு உட்பட்டன. திருச்சி, பாளையங்கோட்டை முதலிய இடங்களில் கோட்டைகளையும் அமைத்துக் கொண்டு வரிவசூல் செய்தனர்.

பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்ததோடல்லாமல், வரிகொடுக்கவும் மறுத்தனர். ஆங்கிலேயர்யர்களோ தங்களின் படை பலத்தாலும் நவாபினுடைய படைபலத்தைக் கொண்டும் பாளையக்காரர்களை மிரட்டினர். நவாபுக்கே வரிகட்டாது பூலித்தேவன், நவாபின் உரிமைபெற்ற ஆங்கிலேயருக்கா வரி கட்டுவான். வரிகட்ட மறுத்தான் பூலித்தேவன்.

ஆங்கிலேயர் எந்த ரூபத்தில் வரிவசூலிக்க வந்தாலும் அவர்களை ஒழித்துக் கட்டுவேன் என்று குரல் கொடுத்தான் பூலித்தேவன்.

1792-இல் ரெவினியூ போர்டை ஆங்கிலேயர்கள் அமைத்த பிறகுதான் ஏகாதிபத்தியவாதிகளாக ம. பொ. சி கண்களுக்குத் தெரிகிறது. அப்படியானால் 1792க்குப் பிறகுதான் இந்திய நாட்டை ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் கும்பினியருக்கு ஏற்பட்டதா? அதற்கு முன்னர் அந்த எண்ணம் ஏற்படவில்லையா?

கர்னாடகப் போர்களும், மைசூர் போர்களும் எதைக் காட்டுகின்றன. இந்தப் போர்களின் மூலம்தான் தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டினர். இந்த ஆதிக்கத்தை மேலாண்மை செய்யும் பொறுட்டே ஆங்கிலேயர்கள் 1792-இல் ரெவினியூபோர்டை அமைத்தனர்.

கம்பெனியார் புதிதாகப்பெற்ற நிலப்பகுதிகளின் நிர்வாகத்தை நெறிப்படுத்தி, தங்களது கட்டுப்பாட்டின்

கீழ்க் கொண்டுவர முற்பட்ட போது பாளையக்காரர் களின் பகையையும், போராட்டங்களையும் சந்திக்க வேண்டியதாயிற்று. பூலித்தேவன்தான் முதன் முதல் கம்பெனி ஆதிக்கத்திற்கு எதிராகக் கூட்டணி அமைத்து போர்க்கொடி உயர்த்தினான்.

ஆங்கிலேயர்கள், தமிழகத்தின் நிர்வாகத்தை நெறிப் படுத்தி தங்களது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவர முற் பட்டபோதுதான் பூலித்தேவன் எதிர்த்தான். ஆங்கிலேயர் நிர்வாகத்தை நெறிப்படுத்த பல முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். அதில் ஒன்றுதான் 1792இல் ஏற்பட்ட ரெவினியூ போர்டு முறை. இதையே காரணமாகக் கொள்வது பொருந்தாத ஒன்றாகும்.

1751-இல் நிசாமின் பேரதிகாரி என்ற முறையில் டூப்ளே ஒரு புதிய பிரகடனத்தை வெளியிட்டான். தென்னகத்தில் வாழும் மன்னர்களாயினும் சரி, பாளையக்காரர்களாயினும் சரி, இனிமேல் எல்லாரும் தன்னிடமோ, அல்லது தன் அதிகாரம் பெற்றவர்களிடமோ தான் தமது கப்பத் தொகைகளைச் செலுத்த வேண்டும் என்பதே அந்தப் பிரகடனத்தின் சாரம். அது மட்டுமல்லாமல் பிரெஞ்சுக் கொடியையும் பறக்க விடவேண்டும் என்று ஆணை பிறப்பித்தான்.

டூப்ளேயின் அறிக்கையைக் கண்டித்து, கும்பினியரும் ஒரு அறிக்கை வெளியிட்டனர்.

ஆற்காட்டு நவாபு அன்வருதீனும், அவன் மகன் மூகமது அலியும் எங்கள் கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங் கள் சட்டபூர்வமானவைகள். எனவே சட்டபூர்வமாக எங் களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடமான உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, நாங்கள் உறுதியுடன் போராடு

வோம் என்றனர். திருச்சியில் ஆங்கிலேயர் கொடியும் பறக்க விடப்பட்டது.

பிரெஞ்சுக்காரர்கள், தங்கள் அதிகாரம் பெற்றவர் களிடம்தான் கப்பம் கட்டவேண்டும் என்று பிரகடனப்படுத் தினர். அதை எதிர்த்து, தங்களுடைய ஒப்பந்தந்தான் சட்டபூர்வமானது என்று கும்பினியர் கூறினர்.

மேற்கண்ட அந்நியர்களின் குரல்களெல்லாம் ஏகாதி பத்தியவாதிகளின் குரல்களில்லையா? அந்த ஏகாதிபத்திய வாதிகளின் குரல்களை, முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று முதல் குரல் கொடுத்தவன்தான் பூலித்தேவன்.

1792இல் ஏற்பட்ட ரெவினியூ போர்டின் மூலம் கும்பினி யரின் அதிகாரம் வந்து விட்டதாக ம.பொ.சி. கூறுகிறார். ஆனால், "1857க்குப் பின்னரே இந்திய ஆட்சியை நேரடி யாக ஏற்க பிரிட்டிஷ் அரசாங்கம் முனைந்தது. அதற்கு முன் வாணிகம் செய்ய வந்த, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கழகமே, வாணிக வாய்ப்புக்காக ஆட்சியை சிறிதுசிறிதாக இந்திய மன்னரிடமிருந்து கைப்பற்றி இருநதது" என்று பேராசிரியர் கா. அப்பாத்துரையார் தமது நூலில் கூறி யிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.[21]

மேலும் பக்கம் 105இல் அவர் கூறியிருப்பதாவது "'சென்னை ஆட்சித்தலைவரான எட்வர்டு கிளைவ் பெருமக னார், மேஜர் பானர்மேன் தலைமையில் ஒருபடையை அனுப்பினார். இவரே பிரிட்டிஷ் பேரரசுக்கு அடிகோலிய இராபர்ட் கிளைவின் மகனார்" என்று குறிப்பிட்டுள்ளார். பிரிட்டிஷ் அரசுக்கு அடிகோலிய இராபர்ட் கிளைவை

எதிர்த்துக் குரல் கொடுத்தவன் பூலித்தேவன். இந்தச் செய்தி வரலாற்றில் அதிகமாகக் கிடைக்காவிட்டாலும், ''பூலித்தேவன் சிந்து'' என்னும் நாட்டுப்புறப் பாடலில் ஏராளமான செய்திகள் உள்ளன.

''கும்பினியர் ஆற்காட்டு நவாபிடம் வரிவசூலிக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டு, கிளைவ் திருச்சியில் வந்து தங்கினான். எல்லாப் பாளையக்காரர்களையும் திருச்சிக்கு வந்து தன்னைக் காணவேண்டும் என்று ஆணையிட்டான். இராபர்ட் கிளைவின் ஆணையைக் கண்டதும் எல்லாப் பாளையக்காரர்களும் திருச்சி சென்று பணிந்து கப்பத் தொகையைக் கட்டினர். ஆனால் பூலித்தேவன் சினங் கொண்டு, படைகளுடன் திருச்சிக்குச் சென்று இராபர்ட் கிளைவுடன் போர் செய்து வெற்றி பெற்றான்.

இதைப்பற்றி நாட்டுபுறப் பாடல் கூறுவதாவது.

ராபர்ட் கிளைவ் பேட்டியைக்—கேட்டதும்
வீரத்துடன் படைவீரர் களைக்கூவி
அச்சமில்லாப் பூலி லட்சியமாய்—எழுந்தார்
அச்சமில்லாப் பூலி லட்சியமாய்யெழுந்தார்'' [22]

பிரிட்டிஷ் பேரரசிற்கு அடிகோலிய ஆங்கிலேயன் இராபர்ட் கிளைவை எதிர்த்துக் குரல் கொடுத்தவன் பூலித்தேவன். அவன் நடத்திய போர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போராகாது என்று ம.பொ.சி. கூறியுள்ள கருத்தானது பொருத்தமின்மையாகும்.

''பிரிட்டிசு கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் பாளையக்காரர்கள் நடத்திய போர், வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு முன்பே தொடங்கிவிட்டதெனலாம்'' என்ற

உண்மையைக் கூறியவர் வேறு எவருமல்ல, ம.பொ.சி.தான் கூறியுள்ளார்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பே கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர்களின் குரல் முதல் குரல் ஆகாதா? ம.பொ.சி.யின் கூற்றுப்படி முதற்குரல் ஆகாதுதான். அதற்கான அவரின் விளக்கத்தையும் காணலாம்.

''தமிழ்நாட்டில் பிரிட்டிசு படையின் நடமாட்டம் இரு வகைப்பட்டது. 1792ம் ஆண்டுகளுக்கு முன்பு நவாபு ஆட்சிக்கு உதவியாகவே பிரிட்டிசு கம்பெனியாரின் படை பலம் பயன்பட்டது. அந்தக் காலத்தில் நேரடியாக ஆட்சிபொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று ம.பொ.சி. கூறியுள்ளார்.

1792-ஆம் ஆண்டுக்கு முன்னரும், பின்னரும் கம்பெனியாரின் படையினர், தென்னாட்டிலுள்ள பாளையக்காரர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப் பெற்றனர். அவ்வாறிருக்கும் போது, 1792க்கு முன்னரும், பின்னரும் என்று பிரித்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

அந்தக் காலத்தில் கம்பெனி நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று ம.பொ.சி. கூறியுள்ளார். அப்படியானால் கம்பெனி, ஆட்சிப் பொறுப்பை எப்போது மேற்கொண்டது? 1792ஆம் ஆண்டு நவாபின் அதிகாரம் ஒழிக்கப்பெற்று கும்பினியருக்கே நேரடியான அதிகாரம் வந்துவிட்டது போல் கூறியுள்ளார்.

நவாபுக்கும் கும்பினியருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அம்சத்தைப் பார்த்தால், இருவருக்கும் உள்ள உறவு எத்தன்மை வாய்ந்தது என்பது தெளிவாகும்.

''பாளையக்காரர்களிடம் வசூலிக்கும் கப்பத்தொகையில், வசூல் செலவு போக மீதியில் ஒரு பகுதியை நவாபின் செலவுக்காக தந்துவிட்டு பாக்கித் தொகை முழுவதையும் அவன் ஏற்கனவே பட்டிருந்த தீராக் கடனுக்காகக் கும்பினி வரவு வைத்துக் கொள்வதென்று ஏற்படலாயிற்று'' என்று கும்பினியர் நவாபுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் கூறுகிறது.

நவாபின் அதிகாரம் ஒழிக்கப்பெற்று, கும்பினியரின் அதிகாரம் வந்து விட்டதென்றால் வசூலின் ஒரு பகுதியை நவாபுக்கு ஏன் கொடுக்க வேண்டும்? வசூலான தொகையில் நவாபின் கடனுக்காக ஏன் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்?

நவாபை பொம்மையாக வைத்துக் கொண்டு கும்பினியர் அதிகாரம் செலுத்தினர் என்பது தான் உண்மை. கம்பெனியார் நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகும்.

''நாளடைவில் ஆர்க்காட்டு நவாபு தன் வசமுள்ள அரசியல் அதிகாரங்கள் அனைத்தையுமே ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விட்டு, அரசர் என்ற பெயரில் வெறும் அலங்காரப் பொம்மையாக இருந்து வந்தார்'' என்று ம. பொ. சி, தமது நூலில் கூறியுள்ளார்.[23]

இக்கூற்றின்படி ஆற்காட்டு நவாபும் கம்பெனியாரும் சேர்ந்து கூட்டு அரசை நடத்தினார்கள் என்பது தான் உண்மையே தவிர. கும்பினியருக்குத் தனி அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகும். இந்த உண்மையை, கும்பினியருக்கும் நவாபுக்கும் ஏற்பட்ட மற்றொரு ஒப்பந்தம் தெளிவாக்குகிறது.

31-7-1801-இல் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும், ஆற்காட்டு நவாபுக்கும் நடந்த ஒரு ஒப்பந்தம் குறிப்பிடத் தக்கதாகும். 1792-ல் நவாபுக்கும் கம்பெனியாருக்கும் ஏற் பட்ட ஒப்பந்தத்தின்படி நவாபின் அதிகாரம் ஒழிக்கப் பெற்றிருக்குமாயின் 1801-ல் ஆற்காட்டு நவாபின் அதிகாரத்தை ஒழிக்க மற்றுமொரு ஒப்பந்தம் ஏன் ஏற் பட்டது?

நவாபை பொம்மையாக வைத்துக் கொண்டு கம்பெனி யர் அதிகாரம் செலுத்திக் கொண்டு வந்தனர். மேலும் நவாபின் அதிகாரத்தைக் குறைப்பதற்காகவே 1801-இல் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது, அந்த ஒப்பந்தத்தின் அம்சம் இதனைத் தெளிவாக்குகிறது.

''இதன் மூலம் கர்னாடக நவாபு பதவிக்கு உரிய வாரி சானவர் நீக்கப்பட்டு, அஜீத்—உத்—தௌலரா நவாபாக நியமிக்கப்பட்டார். இந்த உடன்படிக்கையின் மூலம் நவாபு அவருடைய இராச்சியத்தை இழந்தார். கர்னாடகத்தின் நிர்வாகம் முழுமையும் ஆங்கிலேயக் கம்பெனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.''[24]

இந்த உடன்படிக்கையின்படி நவாபின் அதிகாரம் 1792-இல் முடியாமல் 1801 வரையிலும் தொடர்ந்து இருந்து வந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது. 1801- உடன்படிக்கையின்படி, கர்னாடக நவாபின் உரிய வாரிசு, கும்பினியரால் நீக்கப்பட்டார். அன்று முதல் நவாபு அவருடைய நாட்டை இழந்தார்.

கர்னாடகத்தின் அரசியல் நிர்வாகம் முழுமையும் ஆங்கிலக் கம்பெனியாரே மேற்கொண்டனர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி செலுத்தும் அரசாக எழுந்தது, உண்மை இவ்வாறிருக்க 1792-இல் நவாபின்

அதிகாரம் ஒழிக்கப் பெற்று கம்பெனியாரின் நிர்வாகம் நேரடி ஆட்சிக்கு வந்து விட்டது என்று கூறி, வீரபாண்டிய கட்டபொம்மன்தான் முதன் முழக்கம் முழங்கினான் என்று கூறும் காரணம் ஏற்புடையதல்ல என்பது தெளிவாகும்.

இந்நிலையில் கட்டபொம்மன் கும்பினியரின் நேரடி யாட்சியை எதிர்த்தான்! மற்ற பாளையக்காரர்கள் அனைவரும் நவாபு ஆட்சியை எதிர்த்தார்கள் என்று ம. பொ. சி. கூறியது பொருந்தாத விவாதமாகும்.

பாளையக்காரர்களில், பூலித்தேவனிலிருந்து தொடங்கி மருதுபாண்டியர் வரையிலும் உள்ள அனைத்துப் பாளையக்காரர்களும் நவாப்பையும், கும்பினியரையும் அந்நியராகக் கருதி எதிர்த்தனர். நவாபு ஆட்சி என்றோ, கும்பினியர் ஆட்சி என்றோ தனித்தனியான அமைப்பு இருந்ததில்லை. ஆற்காட்டு நவாபும், கிழக்கிந்தியக் கம்பெனியாரும் சேர்ந்து நடத்திய கூட்டு அரசியல் அமைப்பாகும்.

ஆற்காட்டு நவாபையே அன்னியராக எதிர்த்து வந்த பூலித்தேவன், ஆங்கிலேயரையும் அன்னியராகக் கொண்டு எதிர்த்து வந்தான். ஆங்கிலேயர்எந்த ரூபத்தில் வந்தாலும், அவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பது தான் பூலித்தேவனின் கொள்கையாகும். ஆகையால்தான் பூலித்தேவன் ஆற்காட்டு நவாபையும், ஆங்கிலேயரையும் எதிர்த்து நடத்திய போரை, இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறினர்.

மேலும் ஆங்கிலேயரை மட்டுமன்று, போர்த்துக்கீசியர், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர் ஆகிய அந்நியரையும் எதிர்த்துக் குரல் கொடுத்தான் பூலித்தேவன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததோடு, அந்நியர் ஏகாதியத்தியத்தையும் எதிர்த்துப் போரிட்டவன் பூலித்தேவன். பூலித்

தேவனின் விடுதலைப் போர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த போரேயாகும்.

வீரபாண்டிய கட்டபொம்மன் கப்பம் கட்டினானா? கப்பம் கட்ட மறுத்தானா? என்பதைப் பற்றியும் காண லாம்.

கலெக்டர் ஜாக்ஸன், 1799-ஆம் ஆண்டு, மார்ச்சு திங்கள் 16-ஆம் நாள் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் செலுத்த வேண்டிய வரித் தொகையை எடுத்துக் கொண்டு இராமநாதபுரம் வந்து தம்மைக் காணவேண்டும் என்று எழுதினான். அதற்கு வீரபாண்டிய கட்டபொம்மன் எழுதிய கடிதத்தின் சாரம்.

''பாஞ்சாலங்குறிச்சி யெங்கும் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. பஞ்சத்திற்கு அஞ்சிய மக்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டு விட்டு வெளியேறி விட்டனர். அவர்கள் திரும்பி வந்து பயிர்த் தொழில் செய்யத் தொடங்கியதும், கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய வரியைத் திரட்டி எடுத்துக் கொண்டு நேரில் வருகிறேன் என்று கட்டபொம்மன் கூறினான்.[25]

ஏழு வருஷத்துக் கிஸ்திக் காணிக்கைகள்
ஏண்டா செலுத்தவு,மில்லை பாவி
வாழுங் கெவுர்மெண்டார்கள் கேட்க
அந்த மன்னன் கட்டபொம்மு ஏதுசொல்வார்
மழைகள் தண்ணீர்களில்லாமல் குடி
வடக்கே தானோடிப் போச்சுதென்றார்.
விளையவுமில்லை தழையவுமில்லை காட்டில்
வீண் பாடாய்ப் போச்சுதென உரைத்தார்.

ஏழு வருஷம் மழையில்லாமல் காட்டில்
இட்ட பயிரு முளையாமல்
தாழ்வாகப் போச்சுதே வெள்ளாண்மைக் குடி
தாபந்தஞ் சொல்லத் தொலையாது
வானங்கள் செய்த கொடுமையினால் இந்த
மட்டும் விநோதங்கள் வந்ததென்றார்.
ஆதலினாலிப்போ கும்பினியா ரென்னை
ஆதரிக்கவேணு மென்றுரைத்தார்
பாஞ்சைப்பதி நகர் போய்ச் சேர்ந்து
கிஸ்திப் பணங்கள் தன்னை யனுப்புகிறேன்.''[26]

இக்கருத்தை வலியுறுத்தி நாட்டுப்புறம் பாடல் கூறு வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடலின்படி, வீரபாண்டிய கட்டபொம்மன் வரி கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. வரி கட்டுவ தாகச் சாக்குப் போக்குச் சொன்னான் என்பது தெளிவா கிறது.

கலெக்டர் ஜாக்சன் தன்னை வந்து கமுதியில் காண வேண்டுமென்று வீரபாண்டியனுக்குக் கட்டளை அனுப்பி னார். ஆனால் வீரபாண்டியனோ, இன்று வருகிறேன், நாளை வருகிறேன் என்று சாக்குப் போக்குகளைச் சொல்லிக் காலங் கடத்தினான்.

வீரபாண்டிய கட்டபொம்மன், வரமுடியாது என்று கும்பினியரிடம் சொல்லத் தைரியமில்லாமல் காலங்கடத்தி வந்தான். ஆனால் அதற்கு ம. பொ. சி. கூறும் சமாதானம் குறிப்பிடத்தக்கதாகும்.

''அப்போதிருந்த நிலையில் வரமுடியாது என்று சொல்ல அவனுக்குத் துணிவில்லை. எனவே உடல் நிலை

சரியில்லாததால் உடனே புறப்பட்டு வரமுடியாதென்றும், மேலும் அன்றைக்கு நாளும் நன்றாக இல்லையாதலால் மறுநாள் வருவதாகவும் பதில் விடுத்தான்.'' 27

விடாக்கொண்டான், கொடாக்கொடான் கதையைத் தான் வரலாற்றிலும், கட்டபொம்மனும், லூசிங்டனும் நடத்தியிருக்கிறார்கள். ஒரு சுதந்திரவீரன், லூசிங்டனிடம் கப்பம் கட்ட முடியாது; வரவும் முடியாது என்று கூற மறுப்பதேன்? துணிவில்லை யென்று ம. பொ. சி. யே கூறி விட்டார். இந்த நாட்டின் தலைவிதி அதையும் ஏற்றுக் கொண்டுதான் தீரவேண்டுமோ ?

'கலெக்டர் ஜாக்சனால் தனக்கு நேர்ந்த துன்பங்களையும், இனி நேரவிருக்கும் தொல்லைகளையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டு என்ன செய்வதென்பது ஆலோசிக்க விரைந்து வருமாறு அழைப்பு விடுத்தான் வீரபாண்டியன். கடிதம் கண்டதும் டேவிசன் (வெள்ளைக்காரன்) கணமும் தாமதியாது பஞ்சாலங்குறிச்சியை அடைந்து, வீரபாண்டியனை அவனது அரச மாளிகையாகிய இலட்சுமி விலாசத்தில் சந்தித்தார்.

அவன் தவறுகளை கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவர்களுக்கு யான் விளக்கிக் கூறி நினக்கும் அவர்களுக்கும் உறவை வளர்க்க என்னால் இயன்றதை யெல்லாம் செய்வேன். கவலையை விடுத்து காரியத்தைக் கவனி. எனக் கூறி, டேவிசன் துரை தமது இல்லம் திரும்பினார். 28

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும், கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் உறவை வளர்க்க என்னால் இயன்றதை யெல்லாம் செய்வேன் என்று டேவிசன் கூறியதிலிருந்து வீரபாண்டிய கட்டபொம்மன் கும்பினியரிடம் உறவை வளர்க்கவே முயன்றான் என்பது தெளிவாகிறது. அதற்கு டேவிசனை இடைத்தரகனாகப் பயன்படுத்தினான்.

இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வண்ணம் தானாவதிப்பிள்ளை திருச்சியில் வைத்துக் கும்பினியாரிடம் கூறியது குறிப்பிடத்தக்கது.

"சுதந்திரமாக வாழவிரும்புவதைத் தவிர ஆங்கிலேயருக்குத் நாங்கள் எவ்விதத்திலும் பகைவரல்லர் என்பதையும் விளக்கினார்" என்பதாகும். [29]

இதிலிருந்து, கட்டபொம்மன் தான் வாழவேண்டும். தன் நாடு வாழவேண்டும், தன்னுடைய நாட்டில் யாரும் தலையிடக் கூடாது என்றும் பிற பாளையங்களைப் பற்றிய கவலையே இல்லை என்னும் நிலையிலும் இருந்தான் என்பது தெளிவாகிறது.

"1792-ம் வருஷம் முதல் 1801-ம் வருஷம் வரை நமது ஜில்லாவில் எப்பொழுதும் குழப்பம் இருந்து கொண்டேயிருந்தது. இதற்கு மூலமாயிருந்து வீண் சண்டை செய்து கொண்டிருந்தவர் பாஞ்சாலங் குறிச்சிப்பாளையக் காரரே" என்று தனது நூலில் எம். எஸ். இராமசாமி அய்யங்கார் கூறியுள்ளார். [30]

கட்டபொம்மனுடைய போராட்டம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டேதான் நடத்தியுள்ளான் என்று மேற் கண்டவர்கள்கூறியதிலிருந்து தெரிய வருகிறது. அதனால்தான், வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய சண்டையை வீண் சண்டை என்று எழுத நேர்ந்தது போலும்.

"வீரபாண்டியனை வெள்ளையருக்கு எதிரியாக்கியதே தானாபதிப்பிள்ளை தானென்றும், அவரில்லையேல் வீர பாண்டியன் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பணிந்து போயிருப்பான் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கூறுகின்

றனர்.'' என்று ம. பொ. சி. தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[31]

ம. பொ. சி. கூறியுள்ள கருத்தின்படி, வீரபாண்டிய கட்டபொம்மனின் உண்மை நிலைத் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. வீரபாண்டிய கட்டபொம்மனைக் காட்டிலும், தானாபதிப்பிள்ளையே விடுதலை உணர்வில் விஞ்சியிருந்ததாகக் காண்பிக்கப் பெறுகின்றது.

வீரபாண்டிய கட்டபொம்பன் நடத்திய போர் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய போரன்று. தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும், தன் நாடான பாஞ்சாலங் குறிச்சியைக் காத்து கொள்ள வேண்டும் என்ற சுயநலத்துக்காக நடத்திய போராகும். இதனைப் பற்றி கால்டுவெல் என்ற ஆங்கிலேயர் கூறுவதாக ம. பொ. சி. தனது நூலில் கூறியிருப்பதாவது:

''கட்டபொம்மனும் இந்தியா முழுவதற்கும் சுதந்திரம் தேட விரும்பி கம்பெனி ஆதிக்கத்தை எதிர்த்தான் என்று சொல்வதற்கில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அந்த அளவுக்கு அவனை உந்தவுமில்லை. தான் ஆட்சிப் புரிந்த பாஞ்சாலங் குறிச்சியின் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு தான் கட்டபொம்மன் வரிகட்ட மறுத்தான் என்று கூறியுள்ளார்.[32]

கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்துச் சுதந்திரப் புரட்சியைத் தோற்றுவித்தான் என்றோ, நாட்டின் சுதந்திரத்தையும் குடிமக்களின் நலனையும்குறிக்கோளாகக் கொண்டிருந்தான் எனக் கொள்ளுவதற்கில்லை'' என்று கே. கே. பிள்ளை தனது நூலில் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.[33]

பானர்மெனின் படை பாஞ்சாலங் குறிச்சியில் புகுந்த நாள் 1799-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் நாளாகும்.[34] ஆனால் பூலித்தேவனின் நெற்கட்டான் செவ்வல் கோட்டையை, ஆங்கிலத் தளபதி ஹெரான் 1755-ஆம் ஆண்டு மே திங்களில் தாக்கினான். வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டையில் நடந்த போருக்கு நாற்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பே பூலித்தேவன் கோட்டையில் போர் நடைபெற்றது.

வரலாறு இவ்வாறு இருக்கும்போது கட்டபொம்மனுடைய போர், பூலித்தேவனுடைய போருக்கு முந்தியது என்று எப்படிக் கூறமுடியும்? வீரபாண்டிய கட்டபொம்மனுடைய தாத்தா பொல்லாப் பாண்டிய கட்டபொம்மனின் காலத்தில், கும்பினியரை எதிர்த்துப் பூலித்தேவன் போரிட்டான். தாத்தா முந்தியவரா? பேரன் முந்தியவரா? காலத்தால் முந்திய தாத்தாவை, கருத்துக்களால் முந்தவைக்கும் பேரனாக வீரபாண்டிய கட்டபொம்மனைக் காண்கிறார் ம. பொ. சி. அவர் கூறும் காரணத்தைக் காண்போம்.

வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிடும்போது மனம் நொந்து கூறியது குறிப்பிடத்தக்கதாகும். ‘‘பாஞ்சாலங் குறிச்சியை விட்டு வெளியேறாது இறுதி வரை கோட்டைக்குள்ளிருந்தே கம்பெனிப் படையுடன் போராடி இருப்பேனாயின் பகைவரால் வெட்டப்பட்டு வீரமரணம் அடைந்திருப்பேன். அந்த வாய்ப்பை இழந்ததற்காகவே வருந்துகிறேன்.’’[35] என்பதாகும்.

வீரபாண்டிய கட்டபொம்மன், தூக்குக் கயிற்றை எடுத்து கழுத்தில் மாட்டிக் கொண்டான். இந்த இடத்தில் தான், வீரபாண்டிய கட்டபொம்மன் சுதந்திர வீரனாக மிளிர்கிறான். 16-10-1799-இல் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான்.

கட்டபொம்மனைப் பற்றிய மதிப்பீடு கூறுவதாவது; கட்டபொம்மன், ஆங்கிலக் கம்பெனியை எதிர்த்துக் கலகம் செய்தவர்தானா? என்னும் வினா எழுந்துள்ளது. ம.பொ. சிவஞானம் போன்ற அறிஞர்கள், தென்னகத்தில் ஆங்கிலே யரை எதிர்த்து முதல் விடுதலை முழக்கமிட்டவர் கட்ட பொம்மனே என்று கூறியுள்ளனர்.

தமிழ்வாணன், பூலித்தேவனின் பெருமை பேசிக் கட்ட பொம்மனைக் கொள்ளைக்காரரென்று கூறியுள்ளார். என். வானமாமலை போன்றோர், கட்டபொம்மனுக்குத் தன் குடிமக்களிடம் செல்வாக்கு இல்லை என்று கூறியுள் ளார். சிவகங்கைச் சீமையில் மருதுபாண்டியர் மக்கள் நலம் பேணி, நல்லாட்சி புரிந்து, மக்களிடையே செல்வாக்கு பெற்று விளங்கியது போன்று, பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்மன் செல்வாக்குப் பெற்று விளங்கவில்லை.

பாஞ்சாலங் குறிச்சி மக்கள் ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ளவே செய்தார் கள் என்பதை அறியும்பொழுது, மக்கள் எந்த அளவிற்கு வேதனையுற்றிருந்தார்கள் என்பது தெரிய வருகிறது. என்றாலும், பின்னயக் காலங்களில், பூலித்தேவனுக்கோ அல்லது மருதுபாண்டியருக்கோ நல்காத புகழையும் மதிப்பையும், கட்டபொம்மனுக்கு நல்கி அவரை ஏற்றிப் பாராட்டிச் சிலையெடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.[36]

ஊமைத்துரை

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டபின், அவனுடைய தம்பி ஊமைத்துரை பாளையங்கோட்டையில் அடைக்கப்பட்டான். உண்மையான விடுதலை வீரனாக ஊமைத்துரை விளங்கியதால் மக்கள் மத்தியில் செல்வாக்கு

டன் விளங்கினான். அவனை சிறையிலிருந்து வெளியே கொண்டுவர சுதந்திர உள்ளங்கள் துடித்தன. 1801-ஆம் ஆண்டு ஊமைத்துரையையும், அவனின் தோழர்களையும் விடுதலை செய்தனர். பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து மீண்டும் கோட்டையைக் கட்டினான் ஊமைத்துரை.

கும்பினியத் தளபதி மெக்காலேயின் தலைமையில் படையினர் கயத்தாற்றுக்கு வந்து முகாமிட்டனர். இதை அறிந்த ஊமைத்துரையின் படையினர் திடீர் தாக்குதலைத் தொடுத்து கும்பினியரை விரட்டியடித்தனர்.

கம்பெனிப் படையினர், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்க வந்தனர். இந்தப் போரில் கும்பினியர் தோல்வியுற்றனர், ''ஊமைத்துரையைவிட, வீரபாண்டியனே நல்லவன்; அவனிடம் சமரசம் செய்து கொள்ளாமல்

போனோமே'' என்று கம்பெனித் தலைவர்கள் எண்ணி னர். [37]

கர்னல் அக்னியூ தலைமையில் பெரும் படைகள் பாஞ் சாலங்குறிச்சிக்கு வந்து சேர்ந்தன. கோட்டையை கடுமை யாகத் தாக்கினர் கும்பினியர். பல மணி நேரத்திற்குப் பிறகும் கோட்டைச் சுவர் இரண்டாக வெடித்தது. அன்றை நாள் அத்துடன் முடிந்தது. மறுநாள் மீண்டும் கோட்டை யைத் தாக்கினர் கம்பெனியார். நீண்ட போரைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் உணவுக்குக் கூட தட்டுப்பாடு ஏற்பட்டது.

ஊமைத்துரை, கோட்டையை விட்டு வெளியேறுவது தான் சிறந்தது என்னும் முடிவிற்கு வந்தான். கோட்டையை விட்டு வெளியேறுமுன் புரட்சி வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்தான்.

''புறமுதுகு காட்டாது போரிட்டுக்கொண்டே கோட்டை யிலிருந்து வெளியேறுங்கள். படுகாயமுற்ற வீரர்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர் ஆகியவரை கோட் டைக்கு வெளியே பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுங்கள்'' என்று கூறியதை ம. பொ. சி. தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். [38]

ஊமைத்துரையின் வீரத்தைப் போற்றவேண்டும். தன்மானமுள்ள வீரனாவான். அதனால்தான் கும்பினியர், ஊமைத்துரையைக் காட்டிலும் கட்டபொம்மன் நல்லவன் என்று கூறினர் போலும்.

ஊமைத்துரையும் மற்றவர்களும் கோட்டையைவிட்டு வெளியேறினர். அவனைப் பிடிப்பதற்கு கடுமையான முயற்சிகளைச் செய்தனர் கும்பினியர். ஊமைத்துரையின் தம்பி தளவாய் குமாரசுவாமி உயிர்துறந்ததாகச் சொல்லப்

படுகிறது.கும்பினியரால், தூக்கிலிடப்பட்டதாகவும் கருத்து நிலவுகின்றது.

போர்க்களத்தில் குத்துயிரும் குறையுயிருமாய்க்கிடந்த வீரர்களில் முத்திருளி என்பவள் தன் மகனைத் தேடி அலைந்தாள். தன் மகனைக் கண்டாள். துயருற்ற நான் இனி பிழைக்கமாட்டேன். அதோ மயங்கிய நிலையில் இருக்கும் ஊமைத்துரையைக் காப்பாற்று. அதுவே நாட்டுக்கு செய்யும் தொண்டாகும் என்றவுடன் இறந்து விட்டான்.

ஊமைத்துரையை தூக்கிக்கொண்டு சென்று தன் வீட்டில் படுக்க வைத்தாள். ஊமைத்துரையும் உடல் தேறிவரலா னான். பின்னர் ஊமைத்துரை கமுதிக்குச் சென்றான். அங்குள்ள மறவர்கள் ஊமைத்துரையை வரவேற்றனர். அதன் பின்னரே சிவகங்கை மருதுபாண்டியரிடம் அடைக்கல மானான். இதனை முன்னிட்டு கும்பீனியர் மருதுபாண்டி யர் மீது போர் தொடுத்தனர். ஊமைத்துரையைப் பிடித்து பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு சென்று தூக்கிலிட்டுக் கொன்றனர்.

வரலாற்றில், ''கட்டபொம்மனுக்குக் கிடைத்த புகழ் ஊமைத்துரைக்குக் கிடைக்கவில்லை. குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ வேண்டிய ஊமைத்துரை, குடத்தின் உள்ளே இட்ட விளக்காகத் திகழ்ந்தான். கட்டபொம்மனை அறிமுகப்படுத்திய அளவிற்கு,ஊமைத்துரையை வரலாற்றா ளர்கள் அறிமுகப்படுத்தவில்லை. ஊமைத்துரையின் வீர வரல்ாறுகள் ஏராளமாக உள்ளன. அவற்றை வெளியே கொண்டு வருவது மிகவும், இன்றியமையாததாகும்.

ஊமைத்துரை, போராட்டத்தை கோட்டைக்கு வெளியே நடத்தினான். வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டைக்கு வெளியில் போரை நடத்தவில்லை. கட்டபொம்மன் காலத்

தில் மாறுபட்டு போரில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி யிருந்த, பரமன் குறிச்சிப்பள்ளர், மறுகால் குறிச்சி மறவர் ஆகியவர்களையும் போரில் கலக்கச் செய்தான் ஊமைத் துரை. கட்டபொம்மனுக்கு விரோதமாக இருந்த தாழ்த்தப் பட்ட பள்ளர் வகுப்பைச் சேர்ந்த குலசேகரபட்டினம் மூப்பன் என்பவனை தனது போரில் இணைத்துக் கொண்டான்.[39]

''கட்டபொம்மன் பேரைச் சொன்னால் கறந்த பாலை யும் காகம் குடியாது என்றும், 'ஊமைத்துரையின் பெயரைச் சொன்னால் சீமைத்துரைகள் நடுங்குவார்கள்' என்றும், 'ஊமைத்துரை ஏழையின் கண்ணீரைத் துடைத்து இந்திரன் போல் கொலுவிருப்பான்' என்று மக்கள் பாடினர் போலும்.

இவனன்றோ விடுதலைப் போராட்ட வீரன்.

மருதுபாண்டியர்

மருதுபாண்டியர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந் தனர். மூத்தவர் வெள்ளை மருது என்றும் இளையவர் சின்ன மருது என்றும் அழைக்கப் பெற்றனர். சிவகங்கை மன்னன் முத்து வடுகநாதன் சூலத்தில் பணியாளர்களாக நியமனம் பெற்றனர். தகுதியால் உயர்ந்து அமைச்சர் பதவிகளைப் பெற்றனர். முத்து வடுகநாதர் மறைவுக்குப் பிறகும், வேலு நாச்சியாருக்குப் பிறகும் சிவகங்கையின் அரசுப் பொறுப்பை ஏற்றனர்.

கும்பினியரை எதிர்த்துப் போரிட முதல் கூட்டணியை அமைத்தவன் பூலித்தேவன். அவனுக்குப் பிறகு ஒரு வலு வான கூட்டணியை அமைத்தவர் மருதுபாண்டியரேயாவர்.

25-12-1796 வேலு நாச்சியார் மரண மடைந்தார். ஊமைத் துரை, வெள்ளையரிடமிருந்து தப்பி மருதுபாண்டியரிடம் வந்து சேர்ந்தான். இதனை அறிந்த கும்பினியர், மருது பாண்டியர் மேல் அதிகக் கோபம் கொண்டனர்.

இதனால் 1801-ஆம் ஆண்டு சிவகங்கையின் மீது படை யெடுத்துச் சென்றனர் கும்பினியர் மருதுபாண்டியருக்கும், கடுமையான சண்டை நடந்தது. கழுதிக் கோட்டையில் போர் நடந்தது. பல ஊர்களில் தொடர்ந்து போர்கள் நடந்தன. கடைசியாக. காளையார் கோயிலில் போர் நடந்தது.



கும்பினியர் பீரங்கிகளைக் கொண்டு கோட்டையைத் தாக்கினர். காளையார் கோயிலைப் பிடித்தனர் கும்பினியர். மருதுபாண்டியர் கோட்டையை விட்டு தப்பிச் சென்று விட்டனர். சங்கரபதி என்னும் கோட்டையில் தலை மறை வாக இருந்தனர். துரோகிகளால் காட்டிக் கொடுக்கப் பட்டு, அங்கும் கும்பினியர் வந்து முற்றுகையிட்டனர்.

மருதுபாண்டியர் ஒரு விநாடிக்குள், மின்னலென மறைந்து காட்டிற்குள் சென்றுவிட்டனர். தலைக்கு நாலாயிரம் தருவ தாகப் பறைசாற்றினர். ஆனால் ஒருவனாலும் அக் காரியத்தைச் செய்ய முடியவில்லை.

மருதுபாண்டியரும், ஊமைத்துரையும் ஒரு காட்டிற்குள் இருக்கும்போது, கும்பினியர்களால் சுற்றி வளைக்கப் பட்டனர். வெள்ளை மருதுவின் தொடையில் ஒரு ஆங்கி லேயன் சுட்டான். அதனால் அவனால் ஓடமுடியாமல் தரையில் விழுந்தான். சின்ன மருதுவும், ஊமைத்துரையும் வெள்ளை மருதுவைத் தூக்கினர். அப்போது வெள்ளையர் கள் மூவரையும் கைது செய்தனர்.

திருப்பத்தூர் கோட்டைக்கு மருதுபாண்டியரையும், பாஞ்சாலங் குறிச்சிக்கு ஊமைத்துரையையும் கொண்டு சென்றனர். அங்கு அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்ற னர். மருது பாண்டியர் உறவினர்களைச் சிறையிலடைத்துத் துன்புறுத்தினர். சின்ன மருதுவின் மைந்தனான பதினைந்து வயதுச் சிறுவனையும் சும்மா விட்டு விடவில்லை. பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்னும் தீவினிலே சிறையிலடைத்தனர். தாய் நாட்டுக்குத் திரும்பாமலே மாண்டுவிட்டான் மருதுவின் மகன்.

மருதுபாண்டியரின் விடுதலைப் போர், ‘தென்னிந்தியக் கிளர்ச்சி’ என்று சொல்லும் அளவிற்குப் படர்ந்து விரிந்தது. பூலித்தேவன் நடத்திய விடுதலைப் போருக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க ஒன்றாக, மருதுபாண்டி யரின் போர் அமைந்திருந்தது.

வேலூர் சிப்பாய்க் கலகம்

1806 இல் நடைபெற்ற வேலூர் சிப்பாய்களின் புரட்சி யும் சுதந்திரத் தாகத்தையே மூலகாரணமாகக் கொண்டது.

1857-இல் நடைபெற்ற விடுதலைப் போருக்கு அது ஒரு ஒத்திகை வேலூர் புரட்சி தேசிய வரலாற்றில் தனியிடம் பெற்றுள்ளது. 1806-இல் வேலூரில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த சிப்பாய்களின் புரட்சி, இந்திய நாட்டிலுள்ள பிரிட்டிஷ் இராணுவத்தில் தோன்றிய முதல் புரட்சியாகும்.

வேலூர் கோட்டையிலுள்ள இராணுவத்தின் சிப்பாய்கள் அணி வகுப்பில் கலந்து கொள்ளும் போது காதணிகளையோ, நெற்றியில் சமயச் சின்னங்களையோ அணிந்து கொள்ளக் கூடாது. புதிதாகத் தயாரிக்கப்பட்ட பெரிய தலைப் பாகையை அணிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆங்கிலேயரின் ஆணையை எதிர்த்து இந்திய சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர்.

இக்கிளர்ச்சி, 1806-ஆம் ஆண்டு சூலை 10-ஆம் நாள் இரவு 2 மணி முதல் காலை 10 மணி வரையிலும், இந்து முஸ்லிம் சிப்பாய்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் புரட்சி செய்தனர். 113 ஆங்கிலேயர் கொல்லப்பட்டனர். 359 இந்திய சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். சுமேதார் சேக் காசிம் என்னும் சிப்பாய் இதில் முக்கியமாக விளங்கினான்.

முதலில் இந்திய சிப்பாய்கள் கோட்டையைக் கைப் பற்றியிருந்தனர். ஆங்கிலேயர் வட ஆற்காட்டிலிருந்து

பெரும்படைகளைக் கொண்டு வந்து கோட்டையைக் கைப் பற்றினர். திப்புவின் மைந்தர் பன்னிருவரையும், மகளிர் அறுவரையும் வேலூர் சிறையிலிருந்து கல்கத்தா சிறைக்கு மாற்றப்பட்டனர். வேலூர் புரட்சி ஏற்பட்டதற்கு அவர் களும் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்று நம்பினர். பாளையக்காரர்களின் புரட்சிக்குப் பிறகு நடந்த விடுதலைப் போர் வேலூர் புரட்சியாகும்.

வடநாட்டில் நடந்த சிப்பாய்க் கலகம்

இந்திய கவர்னர் செனரலாக அப்போதிருந்த டல்கௌசிப் பிரபு ஆங்கில ஆதிக்கத்தை விரிவடைவதற் காகக் கையாண்ட குறுக்கு வழிகள் பலவாகும். வாரீசு இல்லாத சமஸ்தானங்கள் ஆங்கில அரசுடன் சேர்த்துக் கொள்ளப்படும் என்று கூறினான்.

அதன்படி சான்சி, சதாரா, நாகபுரி ஆகிய சமஸ்தானங் களைச் சேர்த்துக் கொண்டான். சிப்பாய்களைப் பன்றிக் கொழுப்புத் தடவிய தோட்டாக்களை கையாளுமாறு கூறினான். இச்செயல்களே சிப்பாய்களையும், மக்களை யும், வீறு கொண்டு எழச் செய்தது. இப்புரட்சிக்கு முன் னோடிகளாகத் திகழ்ந்தவர்களில் நானாசாகிப், சான்சி ராணி இலட்சுமிபாய் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க வராவர்.

1857-இல் நடைபெற்ற இந்திய சிப்பாய்களின் கலகம், பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் நடை பெற்ற முக்கிய சம்பவமாகும். இதனை ஆங்கில வரலாற்றாளர்கள் 'சிப்பாய்க் கலகம்' என்று அழைத்தனர். 1857-ஆம் ஆண்டு நடந்த இந்த நிகழ்ச்சிகளை 'முதல்

இந்திய விடுதலைப் போர்' என்று வீரசவர்க்கர் போன்றவர்கள் கூறினர்.

1857-இல் நடைபெற்ற விடுதலைப் புரட்சியே. பொது மக்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிடுவதற்குக் காரணமாக அமைந்தது. மக்கள் புரட்சியாக மலர்ந்தது. வாரீசுக் கொள்கையால் பாதிக்கப்பட்ட சுதேச மன்னர்களும், தொழிலாளர்களும், பொதுமக்களும் சேர்ந்து கொண்டு போராடிய விடுதலை முழக்கமாகும்.

வேலூரில் 1806- இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் பெரிய அளவில் நடைபெற்றது. 1857-இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகமேயாகும். இதை இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம் என்று கூறி வருகின்றனர். இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

பாளையக்காரர்களாக இல்லாமல், அவர்களுக்கு அடுத்த இடத்தில் இருந்ததாகக் கூறப்படும் தீரன் சின்ன மலை, அழகுமுத்து சேர்வை ஆகியவர்களின் விடுதலைப் போரைப் பற்றியும் காணலாம்.

தீரன் சின்னமலை

1799 ஆம் ஆண்டு திப்புவுக்கும், ஆங்கிலக் கம்பெனிக் கும் போர் நடந்தது. அதுவே, நான்காவது மைசூர் போர் என்று அழைக்கப் பெற்றது. போரில் திப்பு கொல்லப்



பட்டான். இதன் மூலம் கோயமுத்தூர் மாவட்டம் ஆங்கிலக் கம்பெனிக்குக் கிடைத்தது. ஆங்கிலக் கம்பெனி ஆட்சி கோயமுத்தூரில் தொடங்கியது.

திப்பு சுல்தானுக்குப் பிறகு, தீரன் சின்னமலைக் கவுண்டன் என்பவன் ஆங்கிலக் கம்பெனியாரை எதிர்த்துக் குரல் கொடுத்தான். இவன் கொங்கு வெள்ளாள குலத்தில் பிறந்தவன். சிவன் மலைக்கும், சென்னி மலைக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பைக் கைப்பற்றி, ஓடாத நிலை என்ற ஊரில் கோட்டை கட்டி, வாழ்ந்து வந்தான் சின்ன மலை.

தீரன் சின்னமலை ஊர் ஊராகச் சென்று கம்பெனி யாருக்கு வரி செலுத்தக் கூடாது என்று கூறி வந்தான். ஆங்கிலக் கம்பெனியாருக்கு ஆதரவாக இருந்த பல்லவ ராயக் கவுண்டனை கொன்றான். மற்றும் சிலரைப் பிடித்துக் காவலில் வைத்தான். தீரன் சின்னமலையை எதிர்த்து வந்த கம்பெனிப்படையை அழித்தான். குதிரைகளின் முழங்கால்களுக்கு குறி வைத்துச் சுடுவதில் வல்லவனாக சின்னமலை விளங்கியதால், தீரன் சின்னமலை என்னும் பெயர் ஏற்பட்டது. [40]

இந்த கால கட்டத்தில் பாஞ்சாலங் குறிச்சியில் கட்ட பொம்மன், சிவகெங்கையில் மருதுபாண்டியர் ஆகியோர் வெள்ளையாரை எதிர்த்துப் போரிட்டு வந்தனர்.

தீரன் சின்னமலை, நிராயுதபாணியாயிருக்கும் போது, கம்பெனியாரால் கைது செய்யப் பெற்று, சங்ககிரிக் கோட்டையில் அடைத்து வைத்தனர். 31-7-1805-இல் தீரன் சின்னமலையை சங்ககிரிக் கோட்டையில் தூக்கி விட்டுக் கொன்றனர் கும்பினியர்.

அழகுமுத்து சேர்வை

அண்மையில், அழகுமுத்து சேர்வை என்பவர் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு வீர மரணம்

அடைந்தார் என்பதை, தமிழகத்திலுள்ள யாதவர்கள் மிகவும் விளம்பரப்படுத்தி வருகின்றனர். விசுவநாத நாயக்கரால் நியமிக்கப் பெற்ற எழுபத்திரெண்டு பாளையப்பட்டுகளில், அழகுமுத்து சேர்வையின் ஊர் குறிப்பிடப்படவில்லை.

யாதவர்கள் எழுதிய வரலாற்றைத் தவிர, அழகுமுத்து சேர்வை குறுநில மன்னராக இருந்தார் என்பதற்கான சான்றுகளில்லை. எட்டையபுரம் பாளையத்தில் தளபதியாக இருந்திருக்கக் கூடும் என்று கூறும் அளவிற்கே தகவல்கள் உள்ளன. மேலும் எட்டையாபுரம் மன்னரால் சில ஊர்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது. எப்படி இருப்பினும் அழகுமுத்து சேர்வையின் விடுதலைப் போரைப் பற்றித் தெரிந்து கொள்வது இன்றியமையாகும்.

அழகுமுத்து சேர்வையைப் பற்றிய தகவலை, 1890 இல் இ. கணபதியா பிள்ளை அவர்கள் எழுதிய 'எட்டயபுரம் வரலாறு' என்னும் ஆங்கில நூலில் பக்கம் 36-இலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. அதில் 'அழகுமுத்து சேர்வை' என்றே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், 1983-இல் மா. இராஜமணி அவர்கள் எழுதிய 'சுதந்திர வீரன் அழகுமுத்து யாதவ்' என்னும் நூலில் அழகுமுத்து, 'யாதவ்' இனத்தைச் சேர்ந்தவரென்று குறிப்பிட்டுள்ளார். 28-12-87-இல் வெளிவந்துள்ள 'தாய்' இதழில் 'அழகுமுத்துக்கோன், என்று அறிமுகப்படுத்யுள்ளது. 1993-இல் பேராசிரியர் மா. கலைமணி அவர்கள், 'விடுதலைக்கு வித்திட்ட அழகுமுத்துக்கோன்' என்று அறிமுகப்படுத்தியுள்ளார்.

'அழகுமுத்து சேர்வை', 'அழகுமுத்து யாதவ்'' 'அழகு முத்துக்கோன்' என்று அழகுமுத்து அழைக்கப் பெறுகிறார். இருப்பினும், அதற்கான விளக்கத்தை பேராசிரியர் மா. கலைமணி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'சேர்வை' என்னும் பட்டம் எட்டையபுரம் மன்னரால் வழங்கப்பட்ட ஒன்றாகும். அவரின் சேவைக்கு வழங்கிய சேர்வைப்பட்டமே அது அது சாதிப் பெயரல்ல. இந்தப் பட்டப் பெயர் காரணமாக அவர்கள் யாதவரா அல்லது முக்குலத்தோரா என்ற குழப்பம் ஏற்பட்டு நீண்ட நெடுங் காலம் அழகு முத்துப் பரம்பரை தமிழ் நாட்டு யாதவர் களுக்குத் தெரியாமலே இருந்து வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.[41]

ஆனால், தேவர் சாதியைச் சேர்ந்த அகம்படியாருக் குண்டான பட்டம் 'சேர்வைக்காரர்' என்று மறவர்

வரலாறு கூறுகிறது.[42] முக்குலத்தோரில் ஒரு பிரிவினர் அகம்படியார்.

'கோனார்' பிரிவினரைச் சேர்ந்தவருக்குச் 'சேர்வை' என்னும் பட்டம் வழங்கியதாக, வேறு வரலாற்றுச் சான்றில்லை.

இராமநாதபுரத்திலிருந்து எட்டயபுரத்திற்கு ஏராளமான சேர்வைக்காரர்கள் குடியேறியுள்ளனர் என்ற வரலாறுக் குறிப்பும் உள்ளது. அழகுமுத்துச் சேர்வையுடன் கொல்லப்பட்டவர்கள் அனைவருமே சேர்வை என்றே குறிக்கப் பெற்றுள்ளது.

ஆகவே, 'அழகுமுத்து சேர்வை' கோனார் இனத்தைச் சேர்ந்தவரா? அல்லது அகம்படியார் இனத்தைச் சேர்ந்த முக்குலத்தேவரா? என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

'கிழக்கிந்தியக் கம்பெனி எட்டையபுரத்தை மிரட்டி கப்பம் கட்டச் சொல்லியது. ஆனால் அழகு முத்துக்கோன் துணையோடு எட்டையபுரம் மன்னர் போர் தொடுத்தார். பெத்தனூர் கோட்டையில் 1739ல் அழகு முத்துக்கோனை பீரங்கிமுன் கைகால் கட்டப்பட்ட நிலையில் நிறுத்தி சுட்டார்கள் வெள்ளையர்கள்' என்று 'தாய்' இதழில் வெளி வந்த செய்தி கூறுகின்றது.[43]

1736-இல் மதுரையில் நாயக்கராட்சி முடிந்தது. நாடு அமைதியில்லாமல் தடியெடுத்தவர்களெல்லாம் தண்டல்காரர்களானார்கள். தென்னாட்டில், பாளையக்காரர்களின் கைகள் ஓங்கியிருந்த காலம். இந்நிலையில் ஆற்காட்டு நவாபு ஆட்சி ஏற்பட்டது.

முகமது அலியும் சந்தாசாகிபும் போட்டி போட்டுக் கொண்டு வரிவசூலிக்க ஆரம்பித்தனர். இத்தகைய குழப்ப

மான சூழ்நிலையில் வரிவசூல் செய்ய ஆரம்பித்தனர். 1743இல் இருந்துதான் முதன் முதல் வரிவசூலிக்க ஆரம்பித் தனர். இதைப்பற்றி கும்பினியர் எழுதிய கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. [44]

1750இல் திருச்சி கோட்டைக்கு இராபர்ட்கிளைவ் வந்தான். இந்நிலையில் கிளைவுக்கு முன்னரே 1739 இல் கும்பினியர் எப்படி வந்திருக்க முடியும்? அதற்கான வரலாற்றுச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

'கி. பி. 1739 ஆங்கிலேயரின் ஏஜண்டான கான்சாகி பிற்கு எதிராகப் போர்க்கொடியை உயர்த்தி, முதல் சுதந்திரப் போரை முன்னின்று நடத்திய அழகுமுத்துச் சேர்வைக்காரர். இவர்தான் பின்னால் பூலித்தேவனும், கட்டபொம்மனும் ஆங்கிலேயர்களை எதிர்ப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் என்று மா. இராசாமணி அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். [45]

1739-இல் கும்பினியர், திருநெல்வேலிச் சீமைக்கு வரி வசூலிக்கும் உரிமையில் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். 1750-இல் இருந்துதான் ஆற்காட்டு நவாபு கும்பினி யருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வரிவசூல் செய்வதற்கு தென்சீமைக்கு வந்தான். அதற்கு முன்னர் கும்பினியர் வரிவசூலிக்க தென்தமிழகத்திற்கு வந்ததாக வரலாறில்லை.

கும்பினியருக்காக வரிவசூல் செய்ய வந்தவர்களில் கான்சாகிபு என்பவனும் ஒருவனாவான். இவனை 'மருதநாயகம்' என்றும் 'யூசுப்கான்' என்றும் அழைத்தனர். கான்சாகிபின் வரலாற்றை டாக்டர். ந. சஞ்சீவி, துர்க்கா தாஸ் எஸ். கே. ஸ்வாமி, எஸ். சி. ஹீல் ஆகியோர் எழுதி யுள்ளனர். அவர்களின் குறிப்புக்களின்படி, 1750க்கு முன்னர் கான்சாகிபு திருநெல்வேலிச் சீமைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

மேலும் கான்சாகிபு படையினர் தாக்கியதாகக் கூறப் படும்போது எட்டையபுரத்தை ஆண்டு வந்த 26வது ஜமீந் தார் ஜகவீரராம எட்டப்ப நாயக்கர் ஐயன் (1739-1769) காலமாகத் தெரிகிறது. அவனுடைய ஆட்சியின் நடுப்பகுதி யில் இச்சண்டை நடந்திருக்க வேண்டும். அப்போதுதான் அழகுமுத்துச் சேர்வையை பீரங்கிமுன் நிறுத்தி சுட்டுக் கொன்றனர்.

கான்சாகிபு 1755-இல் ஆங்கிலப் படையிலுள்ள இந்திய சிப்பாய்களுக்குத் தலைவனாக நியமிக்கப் பெற்றான். 1756-ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் நாள் திருச்சியைவிட்டு கான்சாகிப் புறப்பட்டு தென் சீமைக்கு வந்ததாகத் தெரிகிறது. மே மாதம் 6 ஆம் நாள் மதுரையை விட்டுப் புறப்பட்டு எட்டையபுரத்திற்குக் கான் சாகிபு வந்தான் என்று கால்டுவெல்லின் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.[46]

1759-இல் ஆங்கிலக் கவர்னர் பி. காட்பிரபு என்பவரால் கான்சாகிபு மதுரையின் ஆளுநராக நியமிக்கப் பெற்றான். அதற்குப் பின்னரும் எட்டையபுரம் தாக்குதலுக்கு உள்ளானது. எனவே 1756க்குப் பிறகு, கான்சாகிப் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் 1764க்கும் உட்பட்ட காலத்தில்தான் அழகுமுத்து சேர்வை கொல்லப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக 1756க்கும் 1759க்கும் இடையில் இச் சம்பவம் நடந்திருக்கக்கூடும்.

அழகுமுத்து சேர்வையை 1739இல் கொன்றிருக்க முடியாது. அதன் பின்னரே கொன்றிருத்தல் வேண்டும். பூலித்தேவனுக்கு முன்னரே அழகுமுத்து சேர்வை கும்பினி யரை எதிர்த்துப் போரிட்டான் என்று கூறுவதற்கு வரலாற்றுச் சான்றுகளில்லை.

பூலித்தேவன் 1750இல் இருந்தே கும்பினியரை எதிர்த்துப் போரிட்டு வந்தான். அழகுமுத்து சேர்வையின் போர், காலத்தால் பூலித்தேவனின் போருக்கு பின்னர் ஏற்பட்டது. அதனால் பூலித்தேவனின் போரே முதல் முழக்கமாகும். கட்டபொம்மனின் போர், அழகுமுத்து சேர்வையின் போருக்குப் பின்னர் 1799இல் ஏற்பட்டது. கட்டபொம்மனுக்கு முன்னர் அழகுமுத்துச் சேர்வை போர் நடந்தது.

ஆகையால், அழகுமுத்து சேர்வையின் விடுதலைப் போர், பூலித்தேவன் நடத்திய விடுதலைப் போருக்குப் பின்னரும், கட்டபொம்மன் நடத்திய விடுதலைப் போருக்கு முன்னரும் நடைபெற்றது என்பதைக் காட்டும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அழகுமுத்து சேர்வையின் வரலாற்றில் கால வேறுபாடு உள்ளதால், இதனைப் பற்றி விரிவான ஆய்வு நூல் வெளிவர உள்ளது.

ஹெரானை எதிர்த்து பூலித்தேவன் போரிட்டதோடு நின்றுவிடவில்லை, அதனைத் தொடர்ந்து கும்பினியரை எதிர்த்து நீண்ட போர்களை நடத்தினான். அதனைப் பற்றியும் காணலாம்.

பூலித் தேவன் கும்பினியரை எதிர்த்து நடத்திய போர்கள்

1755-ஆம் ஆண்டு சூலையில், ஆற்காட்டு நவாபின் சகோதரனான மாபூசுக்கான் பெரும்படையுடன் வந்து களக்காட்டுக் கோட்டையை கைப்பற்றினான். இதனை அறிந்த பூலித்தேவன், திருவிதாங்கூர் படைகளையும், மதுரையிலிருந்து வந்த முடோமியா என்னும் பட்டாணியனின் படைகளையும் சேர்த்துக் கொண்டு மாபூசுக்கா

னுடன் போரிட்டு களக்காட்டுக் கோட்டையைக் கைப் பற்றினான் பூலித்தேவன். [46a]

இப்போரானது, ஹெரான் பூலித்தேவனிடம் தோல்வி யடைந்து சென்ற இரண்டு மாதத்திற்குள் நடந்ததாகும். இக்களக்காடு கோட்டை, திருவனந்தபுரம் பழைய அரண் மனை இருக்கும் பத்மநாப புரத்தின் அருகாண்மையில் உள்ளது.

களக் காட்டுப் போரிலிருந்து தொடர்ந்து கும்பினியரை எதிர்த்துப் பலபோர்களைப் பூலித்தேவன் நடத்தியுள்ளான். அவற்றையும் பற்றி தெரிந்து கொள்வது இன்றியமையாத தாகும்.

திருவில்லிபுத்தூர் கோட்டை ஆற்காட்டு நவாபின் தம்பி ரஹீம் என்பவனின் மேற்பார்வையில் இருந்தது. இக்கோட்டை மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் நடுவில் இருந்தது, நடுமண்டலம் என்னும் பெயரும் இதற்குண்டு. பூலித்தேவன் பெரும் படையுடன் சென்று முற்றுகை இட்டான். 1756-இல் திருவில்லிபுத்தூர் கோட்டை பூலித் தேவன் கையில் சிக்கியது. [47]

1756 மார்ச் 21இல் மாபூசுக்கான், பொல்லாப் பாண்டிய கட்டபொம்மனையும் சேர்த்துக்கொண்டு, திருநெல் விக்கு அருகில் பூலித்தேவனைத் தாக்கினான். பூலித் தேவனுக்கு ஆதரவாக முடோமியா என்னும் பட்டாணி யத் தலைவனும் போரிட்டான். முடோமியா கொல்லப் பட்டான், ஏராளமான படை வீரர்களைப் பூலித்தேவன் இழந்தான். எஞ்சிய படைகளுடன் நெற்கட்டான் செவ்வ னுக்குத் திரும்பினான் பூலித்தேவன். [48]

மாபூசுக்கானின் மேல் திருப்தியில்லாதிருந்ததால் ஆற்காட்டு நவாபு, திரும்பும்படி உத்திரவிட்டான். மகமது

யூசுப்கான் என்பவனை மாபூசுக்கானுக்குப் பதில் அனுப்பி வைத்தான் நவாபு. கான்சாகிப் என்ற மகமது யூசுப்கான் பூலித்தேவன் கைப்பற்றியிருந்த திருவில்லிபுத்தூர் கோட்டையையும், பூலித்தேவனின் நண்பனின் கோட்டையான கொல்லங் கொண்டானையும் கைப்பற்றிக் கொண்டான்.

நபிகான் கட்டாக் என்னும் பட்டாணியனும், நவாபின் பிரதிநிதியான பர்க்கத்துல்லாவும், மகமது அலியின் சகோதரன் மாபூசுக்கானும் பூலித்தேவனிடம் சரணடைந்தார்.

1757ஆம் ஆண்டு மார்ச் 5-இல் கான்சாகிபு ஆழ்வார் குறிச்சியைத் தாக்கினான். காலை 7 மணி முதல் சூரியன் அஸ்தமனமாகும் வரை போரிட்டான். பூலித்தேவன் படைகளில் 300 பேரை கான்சாகிப் கொன்று குவித்தான். பூலித்தேவன் தன்னுடைய படைத் தலைவரில் இருவரை இழந்தான். வடகரைப் பாளையக்காரர் சின்னணஞ்சாத் தேவர் கால் ஒன்றை இழந்தார்.

1759 நவம்பர் 6-ஆம் நாள் பூலித்தேவனின் கோட்டையான நெற்கட்டான் செவ்வலைத் தாக்கினான். ஒருநாள் போரல்ல, இரண்டுநாள் போருமல்ல, பாரதப் போராகிய பதினெட்டுநாள் போருமல்ல, ஒரு மாத காலம் தொடர்ந்து போர் நடந்தது. ஒருநாள் ஒய்வு.

1759 டிசம்பர் 4ஆம் நாள் மீண்டும் போர். வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கினான் கான்சாகிபு. கான்சாகிபுக்கு ஆதரவாக திருவிதாங்கூர் படையினர் வந்து சேர்ந்தனர். தூத்துக்குடி, மதுரை, பாஞ்சாலங்குறிச்சி ஆகிய இடங்களிலிருந்தும் ஏராளமான படைகளையும், போர்க் கருவிகளையும் கொண்டு வந்து குவித்தான்.

இங்கும் சுமார் ஒரு மாதமாகப் போர் நடைபெற்றது. பூலித்தேவனின் படையினை கான்சாகிப்பினால் ஒன்றும் செய்யடிமுயவில்லை. மறவர் கொடுப்பது 'வளரிப் பிரசாதம்' என்னும் பழமொழி உண்டு. வளரி என்பது வயிரமரத்தால் செய்த ஈட்டிக்கம்பு அல்லது அரிவாள். ஒருவன் வளரியால் கொல்லப்பட்டால், வளரியை வீசியவனைப் பிடித்துக் கொல்லவேண்டும் என்பது மரபு. கான்சாகிப்படையின் மீது பூலித்தேவனின் படையினர் வீசிய வளரிக்குத் தாககுப் பிடிக்க முடியாமல் புறமுதுகிட்டு ஓடினர். பூலித்தேவன் மகத்தான வெற்றியைப் பெற்றான்.

1760 ஜனவரி 28ஆம் நாள் வாசுதேவ நல்லூர் கோட்டையை கான்சாகிபு மீண்டும் தாக்கினான். திருவாங்கூர் படையும் சேர்ந்து தாக்கியது. பூலித்தேவன் கான்சாகிப்பின் படையைத் தோற்கடித்தான். கும்பினியரின் பெருந்தலைவனான கான்சாகிபு பின்வாங்கினான். அவனையும், அவனுடைய படைவீரர்களையும் பூலித்தேவனின் புரட்சிப் படை வீரர்கள் ஓடஓட விரட்டி அடித்தனர்.

1761 மே மாதம் கான்சாகிபு பெரும்படையுடன் பூலித்தேவனைத் தாக்கினான். திருச்சி, புதுக்கோட்டை., இராமநாதபுரம் சேதுபதி, நாலுகோட்டை, மதுரை, திருவிதாங்கூர் ஆகிய இடங்களிலிருந்து படைகள் வந்து குவிந்தன. கூலிப்படைகளும் வந்து குவிந்தன.

தன்னந்தனியாக நின்றுகொண்டிருந்த பூலித்தேவனை முறியடிக்கக் கங்கணம் கட்டினான் கான்சாகிபு. கான்சாகிபுக்கும் பூலித்தேவனுக்கும் கடுமையான போர் நடைபெற்றது. முடிவில் கான்சாகிபு வெற்றிபெற்றான். பூலித்தேவன் தோல்வியடைந்து கைகளில் சிக்காமல் தப்பித்துக் கடலாடிக்குச் சென்றுவிட்டான்.

1760ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து 1761-ஆம் ஆண்டு ஏப்ரல் வரையிலும் சுமார் நான்கு மாதங்கள் கான்சாகிப் தாக்குதலை தொடர்ந்து நடத்திவந்தான். 1761ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள் பூலித்தேவனின் கோட்டைகள் கான்சாகிபின் கைகளில் சிக்கின. அவனுடைய கோட்டைகள் தரைமட்டமாக்கப்பட்டன. பூலித்தேவன், கான்சாகிபு கைகளில் சிக்காமல் தப்பித்துச் சென்று இராமநாதபுரத்தைச்சேர்ந்த கடலாடிக்குச் சென்று விட்டான். [49]

கான்சாகிப், பூலித்தேவனின் கோட்டைகளைப் பிடித்தான் என்ற செய்தியுள்ளதே தவிர, இந்நிகழ்ச்சி எப்படி ஏற்பட்டது, 1766இல் கோட்டை பூலித்தேவனுக்கு எப்படி வந்தது என்பதற்கான ஆவணங்களில்லை. இதைப்பற்றி திருநெல்வேலி மாவட்டச் சுவடி கூறுகின்றது. [50]

மிகுந்த வல்லமை படைத்தவரும், பெரிய பாளையக்காரருமாகிய பூலித்தேவரை அடக்குவதில் கான்சாகிப் ஈடுபட்டான். அவரை அடக்க அவனுக்கு மூன்று ஆண்டுகள் ஆயின என்று பாரீசில் வெளியிடப்பட்டுள்ள நூல் கூறுகின்றது. [51]

வெள்ளையரை எதிர்த்து முதன் முதல் வாளெடுத்துப் போரிட்ட பூலித்தேவனையும், அவனின் நண்பர்களான கொல்லங்கொண்டான் வாண்டாயத்தேவன், வடகரை சின்னணஞ்சாத் தேவன், சேத்தூர் திருவநாதன் போன்ற பாளையக்காரர்களையும் அடக்கி, அவர்களின் கோட்டைகளையும் தரைமட்டமாக்கி சுதந்திர விரோதியாக இருந்தவன் கான்சாகிபு.

பூலித்தேவனை வெற்றிகொண்ட மமதையில், தென்னாட்டுக்குத் தானே அதிபதியாக இருக்கவேண்டும் என்னும்

சுயநலத்தால் கான்சாகிபு கும்பினியரை எதிர்த்தான். ஒரு கான்சாகிபு இல்லாமல் இருந்திருப்பானேயானால், இந்த மண்ணில் ஆங்கிலேயர் காலுன்றி இருக்க முடியாது. அதற்கு வழிவகுத்தவன் கான்சாகிபேயாவான். அதனால், கான்சாகிபை இந்திய விடுதலைப் போரின் விடுதலை வீரன் என்று எழுதத் தொடங்கி விட்டனர்.

எந்த கும்பினியரின் ஆட்சிக்காகத் தாயகத்தின் விடுதலை வீரர்களைச் சுட்டுப் பொசுக்கினானோ, அந்தக் கும்பினிய ஆட்சியே அவனுக்கு விரோதமாக வந்தது. தமிழ் நாட்டில் பிறந்து, தமிழனாக வாழ்ந்த கான்சாகிபு, தமிழ் வீரர்களையே காட்டிக்கொடுத்து தமிழர்களின் ரத்த ஆற்றில் நீந்தியவன். அவனையும் விடுதலை வீரன் என்று சொல்லும் அளவிற்கு வரலாற்றாய்வாளர்கள் விரைந்து கொண்டிருப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கான்சாகிபைக் கும்பினியர் கொன்ற பிறகு, பூலித்தேவன் மீண்டும் தன் பாளையத்திற்கு 1766இல் வந்து சேர்ந்தான். கும்பினியரை எதிர்த்து மீண்டும் போரிட, படைகளையும், படை வீரர்களையும் தயார் நிலையில் வைத்திருந்தான். இது விசயம் கும்பினியருக்குத் தெரிய வந்தது. தென்னாட்டில் கும்பினியரை எதிர்க்கும் ஒரே பாளையக்காரன் பூலித்தேவன்தான். அவனை ஒழித்துக் கட்டவேண்டும் என்று கும்பினியர் ஆலோசனை நடத்தினர்.

இங்கிலாந்திலிருந்து இராணுவங்களையும், குதிரைப் படைகளையும், தளவாடச் சாமான்களையும் கப்பலில் கொண்டுவந்து இறக்கினர். மேலும் ஆயுதங்கள்வேண்டி கவர்னர் டிகாட் என்பவன் இங்கிலாந்துக்கு எழுதினான். டிவிண்டர் என்னும் வெள்ளைத் தளபதியின்கீழ் இருந்த இங்கிலாந்து ராணுவத்தையும், குதிரைப் படைகளையும்,

ஏராளமான ஆயுதங்களையும் மேஜர் லாரன்ஸ் என்னும் கும்பினியரின் ராணுவத்தளகர்த்தனையும் அனுப்பி வைத்தனர்.

1766ஆம் ஆண்டு அக்டோபரில் கேப்டன் பௌட்சன் என்பவன் பூலித்தேவனின் வாசுதேவ நல்லூர் கோட்டையைத் தாக்கினான். பூலித்தேவனை வெற்றிகொள்ள முடியாமல் அவமானப்பட்டு பாளையங் கோட்டைக்குச் சென்றான் கேப்டன் பௌட்சன்.

1767ஆம் ஆண்டு மேதிங்கள் 13ஆம் நாள் பூலித்தேவனின் வாசுதேவ நல்லூர் கோட்டையை டொனால்டு காம்பெல் தாக்கினான். மேஜர் 'பிளிண்ட், கேப்டன் காப்பர், பீட்டர் டேவிசன் போன்ற ராணுவப் பெருந்தலைவர்கள் கொண்ட போர்ப் படையினரும் கலந்து கொண்டனர்.

பூலித்தேவனின் படைகள் கோட்டையைப் பாதுகாக்கும்போது, அனல் கக்கும் குண்டுகளைச் சற்றும் பொருட்படுத்தாமலும், சாவுக்குச் சிறிதும் அஞ்சாமலும் போரிட்ட காட்சியானது டொனால்டு காம்பலையே பிரமிக்கச் செய்தது.

பீரங்கியைக் கொண்டு 500 முறை சுட்டபோதும் கோட்டையில் ஒரு பிளவு கூட ஏற்படுத்த முடியவில்லை. ஒரு வாரமாகப் போர்நடைபெற்றும் பூலித்தேவனின் கோட்டையை ஒன்றும் செய்ய முடியவில்லை. எதிர்பாராத வகையில் பலத்தமழை பெய்துகொண்டிருந்தது. இருதரப்பினரும் போரைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. பூலித்தேவனின் படையினருக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டதால், பூலித்தேனும், படைவீரர்களும் கோட்டையை விட்டு வெளியேறி அருகிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக்குச் சென்று விட்டனர். டொனால்டு காம்பெல்லின் போர் இந்த விதமாக முடிந்தது.

வாசுதேவ நல்லூரில் நடைபெற்ற இந்தப் போரே பூலித்தேவன் நடத்திய இறுதிப் போராகும். இதற்குப் பிறகு கும்பினியரை எதிர்த்துப் போரிட்டதாகச் சிலர் கூறி யுள்ளனர். அதற்குத் தக்க சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் போரைப் பற்றி டொனால்டு காம்பெல் 20-5-1767-இல் கும்பினியருக்குக் கடிதம் எழுதி னான். இக்கடிதம் பூலித்தேவனின் வீரத்தையும், படை வீரர்களின் ஆற்றலையும், கோட்டையைப் பற்றியும், எழுதியுள்ளான்.

மேலும், நான் கண்ட நாடுகளில் இதைப்போல் பயிர் வளமிக்கது வேறொன்றுமில்லை. அதனை அழிக்க நான் விரும்பவில்லை என்று டொனால்டு காம்பெல் எழுதிய கடிதத்தின்படி கும்பினியர், அதனைப் பார்வையிட முதன் முதல் ஒரு ஆங்கில அதிகாரியை அனுப்பி வைத்தனர்.[62] போரினால் ஏற்பட்ட அழிவைப் பார்வையிட அதிகாரி வந்தது இதுதான் முதல் ம்றையாகும்.

ஆகையால், பூலித்தேவன் கும்பினியரை எதிர்த்துப் போரிட்டத்தை, இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம் என்று கூற முடிகிறது.

''தென் தமிழகத்தின் தேசியப் புதுமலர்ச்சி, மைசூர் எழுச்சி கடந்து நீடித்துத் தழைத்ததாயினும், அது திப்புவுக்கு முன்னும் கைதருக்கு முன்னும் தொடங்கிவிட்ட தெனலாம். அது 1750-லிருந்தே திருநெல்வேலி மாவட்டத் தின் மேலைச் சீமையில் பூலித்தேவர் தலைமையில் நெல் கட்டும் செவ்வலில் முகிழ்ந்தது. மைசூர் ஆட்சியை கைதர் கைப்பற்றுவதற்கு முன்பே அவனுடன் தொடர்பு நாடிற்று. பின் அவன் எழுச்சி இராமநாதபுரத்தில் படர்ந்து, சிவகங்கையில் 1772 முதல் கொழுந்து விட்டு எரிந்து 1790-க்குப்பின் பாஞ்சாலங் குறிச்சியில் புயல் வேகத்தில்

ஆர்ப்பரித்தெழுந்தது. அதன் இறுதிக் கொழுங்கனல் 19-ஆம் நூற்றாண்டின் முதலிரண்டு ஆண்டுகளில் பாஞ்சாலங் குறிச்சியையும் சிவகங்கையையும் உட்கொண்டு மீண்டும் தென் தமிழகமெங்கும் அழன்றெரிந்தது. தென் தமிழகத்தில் அடங்கிய தீ அடுத்த ஐம்பது ஆண்டுகளில் தென்னகமெங்கும் பரவி இந்திய மாநிலமெங்கும் விடுதலைப் பேரியக்கங்களை வளர்த்தது'' என்று பேராசிரியர் கா. அப்பாத்துரையார் கூறியுள்ளார்.[58]

இந்திய விடுதலைப் போரின் காலகட்டங்களை வரிசைப் படுத்தி, உண்மை நிலையைத் தெள்ளத் தெளிவாக எழுதி யுள்ளார் பேராசிரியர் கா. அப்பாத்துரையார். மேலும், பூலித்தேவன்தான் இந்திய விடுதலைப் போரைத் தொடங்கி வைத்தான்.

அவனுக்குப் பின்னரே மற்றவர்கள் போரிட்டனர். பூலித்தேவனின் விடுதலைப் போரே. 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் எதிரொலித்தது என்று அவர் கூறியுள்ளது குறிப் பிடத்தக்கதாகும்.

அடிக்குறிப்பு

1. Manual of the Tinnavelly District chapter III, P-48.

He therefore sent an expedition. Consisting of 2,500 horses and 300 peons, with a detachment of 90 Europeans under Lieutenant Inn is (Probaly the first English man ever seen in Tinnevelly) to settle the government.

2. Manual of the Tinnevelly District, Chapter III, P-48

At the request of the Nawab a force of 500 Europeans and 2000 Sepoys was ordered to proceed to the countries of Madura and Tinnevelly in 1755, in order to reduce them to obedience.

3. Pate. H. R., Tinnivelly 1919, P-387.

The Leader was colonel Herone, the first British commandant to enter Tinnevelly

4. Robert Ormes, Hindustan Varalaru, Vol I P-399. (Caldwell, Tinnivally. P-95)

The detachment had been as far to the north-east as shillinaikenpettah, the principal fort of the Polygar. who on their appearance entered into a negolation, paid some money in part of the tribute due from him, and gave hostages as security for the rest, some money was likewise received from several inferior polygars, but the whole collection did not exceed 70,000 Rupees; as soon as the troops received the orders to return, they summoned catabomanaig to redeem his hostage; but he knowing that they would not venture to stay any longer in his country, made some trifling excuses, and without any concern suffored them to carry the hostages away with them.

5. குருகுஹதாசப்பிள்ளை, எஸ். திருநெல்வேலி சீமை சரித்திரம், சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை 1931, ப - 122

6. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தொகுதி I எல். ஆர். 7992, 1919, ப-40.

7. இராசையா. ந. மாமன்னன் பூலித்தேவன் ஞானமுருகன் வெளியீடு, 1992, ப - 22.

8 *(Caldwell—History of Tinnevelly, P-96)*

It was the misfortune of colonel Heron to place the utmost confidence in his interpreter, and to be constantly betrayed by him; for before the army arrived in sight of the fort, this man had informed the poligar that they had no battering cannon, and that they would not remain long before the place;the poligar, therefore,secure in his fort, which was built of stone and very strong, answered the summons with insolence; upon which the field pieces and two cohorns fired amartly upon the walls for several hours; but this annoyance producing no effect. another massage was sent, offering that the army should retire, provided he would pay 20,000 rupees. The Poligar relying on the information which he had received from the interpreter, and encouraged by his relaxation in the terms which were at first proposed to him, answered with great contempt that such a sum could not be raised in his whole country, and that he knew the value of money too well to pay a single rupee.

(Srinivasa chari. C. S, An Extract from "Ananda Ranga Pillai", 1940, P-355.)

Even when Heron had received to return to Trichiropalls, he turned aside at the request of Mahfuz khan to attack Pullitevar in his fort, as that Poligar was the only one who had not submitted. But finding that he could not take the place ever with the help of heavy guns Heron returned to Madura, and subsequently to Trichinopoly in June. 1755.

9. திருவரங்கராசன்' வே. கலைமகள் தீபாவளி மலர். 1993—ப. 105.

10. மணிசேகரன். டாக்டர் கோவி, முதல் உரிமைப் புரட்சி, 1982, ப—5

11. கமால், எஸ். எம் ; விடுதலைப் போரில் சேதுபதி மன்னர், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1986-ப-2

12. கவிராஜ பண்டிதர் ஜக வீரபாண்டியனார். பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் 1939, ப-84

13. வானமாமலை- நா. பதிப்பாசிரியர். வீரபாண்டி யக் கட்டபொம்மு கதைப் பாடல் மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை-2, 1971—ப—37.

14. சிவஞானம் ம. பொ. முதல் முழக்கம். இன்ப நிலையம், சென்னை-4, 1968, ப—14.

15. சிவஞானம், ம.பொ. முதல் முழக்கம், மேற்படி நூல், 1968, ப—13.

16. சிவஞானம் ம. பொ, முதல் முழக்கம் 1968, ப—41.

17. சிவஞானம் ம. பொ. முதல் முழக்கம் 1968, ப—1.

18. ம. பொ. சிவஞானம், முதல் முழக்கம், இன்ப நிலையம், 1968—ப—8

19. சிவஞானம் ம. பொ. காந்தியடிகளுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப் போர், 1974.

20. கவிராஜ பண்டிதர் ஜகவீர பாண்டியனார் பாஞ்சாலங் குறிச்சி வீரசரித்திரம், முதல் பாகம், 1939, ப—29.

21. அப்பாத்துரை. பேராசிரியர். கா, இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு, 1953, ப - 100

22. Rajaiah N. The first Freedom Fighter. The Story of Pulittevan Institute of Asian Studies, Madras, 1993 P-XIVI

23. ம. பொ. சிவஞானம், முதல் முழக்கம், இன்ப நிலையம். 1968, ப—9.

24. Treaty between the company and the nawab of Arcot Date 31-7-1801.

This treaty settled the dispute of succession to the subadarship of the carnatic by setting up Azim-ud daula in preference to the rightful heir the most important provision of this treaty was that the nawab was deprived of his dominions and the civil and military government of the carnatic was uested in the company,

25. சிவஞானம், ம. பொ. முதல் முழக்கம், 1968, ப-26

26. வானமாமலை-நா. பதிப்பாசிரியர், வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல் மதுரைப் பல்கலைக் கழகம் மதுரை, 1971, ப-82.

27. சிவஞானம், ம. பொ. முதல் முழக்கம் 1968, ப-30

28. சிவஞானம், ம. பொ. முதல் முழக்கம் 1968, ப-21

29. சிவஞானம், ம. பொ. முதல் முழக்கம்,1968, ப-25,

30. இராமசாமி, எம். எஸ். திருநெல்வேலி ஜில்லா 1930, ப-62

31. சிவஞானம், ம. பொ. முதல் முழக்கம்,1968, ப-79

32. ம. பொ, சிவஞானம். காந்தியடிகளுக்கு முற்பட்ட தமிழகம் 1974, ப—13

33. பிள்ளை. கே. கே; தமிழக வரலாறும் மக்கள் பண் பாடும். 1974, ப — 453-457

34. ம. பொ. சிவஞானம், முதல் முழக்கம், இன்ப நிலையம்,1968, — 36.

35. சிவஞானம் ம. பொ. முதல்முழக்கம் 1968 ப—67.

36. கணபதி. அ. தமிழக வரலாறு, மல்லிகைப் பதிப்பகம், மதுரை-20, 1988, ப - 132.

37. சிவஞானம் ம.பொ. மேற்படி நூல். ப—86.

38. மேற்படி நூல் முதல் முழக்கம், ப—90.

39. இராசையா. ந, விடுதலைப்போரில் தாழ்த்தப்பட் டோரின் பங்கு, ஞானமுருகன் எழுத்தகம், 3—97. அயன் கொல்லங்கொண்டான் — 626142 1990. ப—81.

40. சக்திதேவி டி. கே. கோவை நகர வரலாறு, சக்தி தேவி பதிப்பகம், கோவை—34, 1979, ப—47.

41. கலைமணி., மா. விடுதலைக்கு வித்திட்ட அழகு முத்துக்கோன், பாண்டியன் பைந்தமிழ்ப் பதிப்பகம். 1993, ப-37.

42. ஆசீர்வாத உடையார்த்தேவர், ஏ.வி., மற்றும் குழந்தை வேலுச்சாமி. வி. எஸ், மறவர் வரலாறு 1935, ப-145.

43. 'தாய்' இதழ், 28-12-87 ப-48.

44. Millitery consulation 25th July 1767, P. 635-636.

45. ராஜாமணி. மா. சுதந்திரவீரன் அழகுமுத்து யாதவ், தமிழ்எழுத்தாளர் சங்கம், எட்டையபுரம் 1983, ப-10.

4 . *Caldwell, Ttr.nivelly—P.* 100.

46*a*. Country correspondence, 1755. Letter 132. P-53

47. Pate. H. R. Tinnavelly District. P-72.

The confederates concentrated their efforts on srivilliputtur, the main strong hold of the northern part of the district. Abdul Rahim, to whome Mahfuz khan had deputed the charge of the country, was defeated;

48. Diary and proceedings 1755—P, 132.

The day before the Nellour's March came the Accounts of Mohafoz cawn's victory over Pullitaver of which no doubt you are apperiz'd as the hareans had letters for the governar, and were immediately

Dispatch'd. The particulars of the Engagement are not yet come to hand. The general accounts make the victory very compeat. Moudemia certainly kill'd and two thousands collerles Three hundred horses taken all the Baggage, Guns and some Elephants, the battle was tought within seven miles of Turnavelly.

49. *Hill. S.C.. Yusuf khan, the Rebel commandant,* 1914, *P.* 103.

The seige continued for four months. An April 1761 yusuf khan with fresh reinforcements, captured the summit of a hill which commanded a view of the fort continuously for four days, cutting off communications PuliThever who had kept up the fight for us long as was possible, had no other alternative but to surrender on the 16th May 1761. Yusuf khan allowed Puli Thevan to escape to Ramanathapuram. although it took him three years to suppress him.

He followed this victory with the suppression of other chiefs. He destfoyed twenty nine mud forts and occupied forty five posts by his over whelming success he established the Nawab's authority at Tinnevelly.

50. *Pate. H. R., Tinnevelly, Vol I* 1917; *P.* 420.

Originally the place belonged to the poligar of Nelkattan-seval and Muhammed Yusuf was signally repulsed in 1761 *in an attempt to capture the fort,* **sub-***sequently it come into the hands of the Nawab, but on records are traceable to, show how this happened. The*

Nawab's occupation, however, was of very short duration for in 1766 the place was again in the hands of the Poligars.

51. *Merchand's Precis Historique — (Paris-1771) P. 10.*

"Madras being delivered, khanshib returned to Madura. He then under took to reduce Pulidevar a great Poligar and the most powerful of those who had taken off the yoke of Mohfuzkhan It took him three years to reduce him. It was his courage which enabled him terumph over this enemy whose de eat brought as its congequence that of all the others."

52. *Pate. H. R, Tinnevelly* 1917, *Vol I, P-420.*

The favourable situation of the place impressed the first British officers who visited those parts.

53. அப்பாத்துரை பேராசிரியர், கா. தென்னாட்டுப் போர்க்களங்கள். 1971. ப—484.

முடிவுரை

பதினெட்டாம் நூற்றாண்டிலேயே மாவீரன் பூலித்தேவன், ஆற்காட்டு நவாபையும், கும்பினியரையும் எதிர்த்துப் போரிட்டான். ஆங்கிலேயரை மட்டுமன்று ஏனைய அந்நியரையும் எதிர்த்துக் குரல் கொடுத்தான். தமிழகத்தில் அப்போதிருந்த பாளையக்காரர்களில், பூலித்தேவன் ஒருவனே கும்பினியரை எதிர்த்து நீண்ட போரை நடத்தினான். ஆகையால், பூலித்தேவன் மட்டுமே கும்பினியரை எதிர்த்து முதல் குரல் கொடுத்தவன், என்பது மக்கள் தீர்ப்பு.

1750-இல் இராபர்ட் கிளைவை எதிர்த்துப் பூலித் தேவன் திருச்சியில் போரிட்டு வெற்றி பெற்றான். இதனையே இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்க மாகும் என்று நாட்டுப்புறப் பாடல்கள் கூறுகின்றன. ஆனால், அரசு ஆவணங்கள் அதைப் பற்றி மௌனம் சாதிக்கின்றன.

1755-இல் ஆங்கில முதல் தளபதி ஹெரானை எதிர்த்து மாவீரன் பூலித்தேவன் போரிட்டான். இதனையே இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம் என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுவதோடு நாட்டுப்புறப் பாடல்களும் கூறுகின்றன. 1750-முதல் 1767 வரை நடைபெற்ற கும்பினியர் போர்களையெல்லாம் எதிர்த்துத் தலை நிமிர்ந்து நின்றவன் தமிழ் மறவன் பூலித்தேவனாவான்.

கும்பினியரையும், ஆற்காட்டு நவாபையும் எதிர்க்க ஒருவலுவான கூட்டணியை பூலித்தேவன் உருவாக்கினான். கிழக்குப் பாளையங்கள் பூலித்தேவனின் கூட்டணியில் சேரத் தயங்கின. மேற்குப் பாளையங்கள் அத்தனையும் ஒட்டுமொத்தமாகக் கூட்டணியில் சேர்ந்தன. திருவிதாங்கூர் மன்னனும், மதுரையில் முடோமியாவும் பூலித்தேவன் கூட்டணியில் சேர்ந்தனர். இக் கூட்டணியைக் கண்டு குலைநடுங்கினர் கும்பினியர்.

பொல்லாப் பாண்டிய கட்டபொம்மனும், எட்டப்பனும் இவர்களைச் சார்ந்த நாயக்கர் பாளையங்களும், கும்பினியருக்கு ஆதரவாகப் படைகளைக் கொடுத்து உதவினர். இதனால், திருநெல்வேலிக்கு அருகில் நடந்த போரில் பூலித்தேவன் தோல்வியடைந்தான். பொல்லாப் பாண்டிய கட்டபொம்மனும், அப்போதைய எட்டையபுரத்தானும் விடுதலை வீரன் பூலித்தேவனைக் காட்டிக் கொடுத்த முதல் பாளையக்காரராவர். இவர்களில்லாது இருந்திருந்தால், கும்பினியர் இந்நாட்டைக் கைப்பற்றியிருக்க முடியாது.

'கொரிலாத் தாக்குதல்' என்னும் போர் முறைகளை முதன் முதல் கையாண்டவன் பூலித்தேவனேயாவான். பூலித்தேவன் நடத்திய கொரிலாப் போரைக் கண்டு கும்பினியர் கதிகலங்கிப் போயினர்.

முதல் ஐந்து ஆண்டுகளில் சிறிய அளவில் போர்கள் நடைபெற்றன. அடுத்து, பன்னிரண்டாண்டுகளில் மிகவும் கடுமையான போர்களை நடத்தினான் பூலித்தேவன். ஒருநாள் போரல்ல; இருநாள் போருமல்ல; பாரதப் போரில் நடைபெற்ற பதினெட்டுநாள் போருமல்ல; கலிங்கப் போருமல்ல; பல மாதங்களாகத் தொடர்ச்சியாக நீண்டதோர் போரை நடத்திக் காட்டினான் மாவீரன்

பூலித்தேவன். வரலாற்றில் இத்தகைய நீண்டதோர் போரை, எந்தப் பாளையக்காரனும் நடத்தியதில்லை. அத்தகைய தகுதியும், பாரம்பரியமும் பூலித்தேவன் ஒருவனுக்குத்தான் இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில், பூலித்தேவன், கான்சாகிப் ஆகிய இருவரை மட்டும் சிறந்த போர் வீரர்களாக மக்கள் கருதி வந்தனர். அவர்களில் பூலித்தேவன் விடுதலைப் போராட்ட வீரனாகத் திகழ்ந்தான்.

கான்சாகிப்போ, விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட பாளையக்காரர்கள் அனைவரையும் ஒழித்துக் கட்டியதோடு விட்டுவிடாமல், அவர்களின் கோட்டை கொத்தளங்களையும் தரைமட்டமாக்கி காட்டிக்கொடுக்கும் கயவனாகத் திகழ்ந்தான்.

கும்பினியரும், ஆற்காட்டு நவாபும், கான்சாகிபைச் சிறந்த வீரனெனப் பாராட்டிப் பல பரிசுகள் வழங்கினர், பூலித்தேவனும், கான்சாகிபும் தமிழர்களேயாவர். தமிழனை, தமிழனே காட்டிக் கொடுத்தான் என்னும் துரோகத்தைச் செய்தான் கான்சாகிபு.

அத்தகைய கான்சாகிபையும் எதிர்த்து தன்னுடைய வீரத்தையும், விவேகத்தையும் எடுத்துக்காட்டினான் மாவீரன் பூலித்தேவன். ஆகையால், பூலித்தேவனைப் பதினெட்டாம் நூற்றாண்டின் போர் வாளாக அழைத்தனர்.

பூலித்தேவனின் விடுதலைப் போருக்குப் பின்னர், விடுதலைப் போர் தொடர்கதையாக வளர ஆரம்பித்தது. முத்து வடுகநாதர் — வேலுநாச்சியார், முத்துராமலிங்க சேதுபதி, வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை

மருதுபாண்டியர், தீரன் சின்னமலை, அழகு முத்து சேர்வை போன்றவர்கள் கும்பினியரை எதிர்த்து விடுதலைப் போரை நடத்தினர்.

இவர்கள் நடத்திய விடுதலைப் போருக்குப்பின்னர், 1806-இல் வேலூரில் நடைபெற்ற சிப்பாய் கலகமும், 1857ல் வடநாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டமும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கண்ட விடுதலைப் போராட்டங்கள் அனைத்தும். மக்கள் போராட்டமாக மலர்வதற்கு அடிப்படையாக விளங்கின. இந்தப் போராட்டங்களுக்கெல்லாம் முதன்மைக் காரணம், 1750இல் ஊன்றிய விடுதலை வித்தாகும்.

பூலித்தேவன் முதன் முதல் ஊன்றிய அந்த வித்தே, ஆலமரமாய் படர்ந்து 1947-இல் சுதந்திரமாக மலர்ந்தது. இந்த ஆலமரத்தில் தோன்றிய வித்துக்களே, உலக நாடுகளில் விடுதலைத் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் மிகையாகாது.

பூலித்தேவன் நடத்திய விடுதலைப் போரைப்பற்றி பிரான்சு வரலாற்று ஆசிரியர் எழுதிய வரலாற்று நூல் பிரான்சு மக்களிடம் விடுதலைத் தாக்கம் ஏற்பட்டதற்கு ஒரு காரணமாக அமைந்தது என்பது மிகையானதல்ல. பிரெஞ்சுப் புரட்சிக்கும், அமெரிக்கப் புரட்சிக்கும் பூலித்தேவன் புரட்சி ஒரு காரணமாக அமைந்தது.

உலக நாடுகளில் விடுதலை எழுச்சி தோன்றுவதற்கு முன்னால், பூலித்தேவனால் விடுதலைப் போர் தொடங்கப் பெற்றது என்னும் கருத்தை உலக வரலாற்றில் குறிப்பிடப்

யடவேண்டும். அடிமை இருளை அகற்றி பூலித்தேவன் ஒளிவிளக்காகத் திகழ்ந்தான்.

இத்தகைய நீண்டதோர் போரை, பூலித்தேவன் நடத்தியதற்குக் காரணம் அவன் பின்னால் நின்ற மக்கள் சக்திதான். பல்லாயிரக்கணக்கான வீரமறவர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்தும் சிறிதேனும் அஞ்சாமல் வீரத்துடன் போராடினர். இதைப் பற்றி டொனால்டு காம்பெல் வியந்து பாராட்டினான்.

''தங்கள் உடல்களாலேயே கோட்டைச் சுவரை அடைத்து நின்றனர். சுட்ட இடங்களிலெல்லாம் மண்ணும் நாரும் எப்படிச் சிதறுமோ அப்படியே பூலித்தேவனின் வீரர்களின் உடல்களும் சிதறின. அதன் பின்னரும் அந்த வீரர்கள் அஞ்சாமல்தங்கள் பணியைச் செய்து வந்தனர்.

பூலித்தேவனும், அவனுடைய போர்வீரர்களும் தலை மறைவாக இருந்து கொண்டு கும்பினியரை எதிர்த்துப் போரிட ஆயத்தம் செய்து கொண்டிருந்த காலத்தில், மக்கள் பெட்டிகளில் உணவை எடுத்துக் கொண்டு சென்று மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பாறையில் வைத்து விட்டு வருவர். பின்னர் பூலித்தேவனின் வீரர்கள் உணவை எடுத்துச் சென்று உண்பர். பூலித்தேவன் துன்பப் பட்ட காலத்திலும் மக்கள் பங்கு கொண்டனர்.

தன்னுடைய மனைவி, மக்கள் தங்கியிருந்த குடிசைக்குக் கும்பினியர் தீயிட்டுக் கொளுத்தியபோதும் மனம் கலங்காமல், மக்கள் தொண்டே மகேசன் தொண் டாகப் பணியாற்றி வந்தான் பூலித்தேவன்.

மனைவி கயல்கண்ணிநாச்சியார் வீரமரணமடைந்தார். பிள்ளைகளோ, கும்பினியருக்குத் தெரியாமல் மக்களிடம்

வளர்ந்து வந்தனர். அத்தகைய மகத்தான மக்கள் சக்தியைக் கொண்டிருந்தான் மாவீரன் பூலித்தேவன் ஆகையால் நீண்ட போர்களை அவனால் நடத்த முடிந்தது.

அத்தகைய பெருமைக்கும், புகழுக்கும் உரிய பூலித்தேவன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன், இராணுவ முறையில் கைதேர்ந்தவன். நுண்ணறிவு கொண்டவன். படைகளின் நிதானங்களைக் குறிப்பினால் அறியும் தன்மையுடையவன். படைகளுக்கு உற்சாகத்தையூட்டும் வாக்கு வல்லமை பெற்றவன். ஆற்காட்டு நவாப்பின் சகோதரனான மாபூசுக்கான் போன்ற எதிரிகள் சரணடைந்தபோது, அவர்களை வரவேற்று தன்னுடைய பாளையத்திற்குள்ளேயே தங்கவைத்து, பள்ளிவாசலும் கட்டிக் கொடுத்து உரிமையுடன் வாழ வழிவகுத்த பண்பாளன்.

பூலித்தேவன் நடத்திய விடுதலைப் போரானது, பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது. பூலித்தேவனின் போர்வாளைக் கண்டு கதி கலங்கிப் போன கூட்டங்கள்தாம் எத்தனை! எத்தனை!

ஒரு விளக்கு, பல விளக்குகளை சுடர்விட்டு பிரகாசிக்கச் செய்வதைப்போல், அடிமை இருளை அகற்ற பூலித்தேவனால் எடுக்கப்பட்ட ஒரு போர் வாள், பல போர்வாள்களைத் தோற்றுவித்தது.

அந்தப் போர்வாள்தான் பல கூர்வாள்கள் தோன்றுவதற்கும் காரணமாக இருந்தது. ஆகையால்தான்

மாவீரன் பூலித்தேவனை பதினெட்டாம் நூற்றாண்டின் 'போர்வாள்' என்று அழைப்பதில் பெருமை கொள்கிறோம்.

பூலித்தேவன் தனது இலட்சியத்தில் வெற்றி பெற வில்லை. ஆனால் அவனுடைய எழுச்சி, வீரம் தியாகம், ஆகியவை என்றென்றும் மக்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காதத் திகழ்கின்றது.

பூலித்தேவன் வீரத்தையும், விவேகத்தையும் தியாகத் தையும் வருங்கால இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுவது இன்றியமையாக் கடமையாகும். இளைஞர் களுக்கு உண்மையான நாட்டுப்பற்றை இது உண்டாக்கும் எஞ்பதில் ஐயமில்லை.

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தினரால் புதிய கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தி பாடப்புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. விடுதலைப் போராட்ட வரலாற் றுக்கு முதன்மை கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. 'விடுதலைப் போரில் தாழ்த்தப் பட்டோரின் பங்கு' என்னும் தலைப்பில் நான் எழுதிய பாடம் உயர்நிலை வகுப்புக்கான பாடத்திட்டத்தில் (1990-91) சேர்க்கப் பெற்று, அச்சுக்குப் போன நிலையில் எடுக்கப் பெற்று, அதற்குப் பதிலாக 'விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு' என்னும் தலைப்பில் பிரமுகர் ஒருவரின் கட்டுரை சேர்க்கப் பெற்று வெளியிடப் பெற்றது. ஆனால். அதே தலைப்புள்ள கட்டுரை ஏற்கனவே ஒன்பதாவது வகுப்புப் பாடத் திட்டத்தில் உள்ளது. ஒரே கருத்துள்ள பாடத் திட்டம் இரண்டு வகுப்புகளில் வெளியிடக் கூடாது

என்னும் பாடநூல் நிர்வாகத்தின் விதிமுறைகளெல்லாம் மீறப்பட்டது. செல்வாக்குப் படைத்தவர்கள் எது வேண்டு மானாலும் செய்யலாம் என்னும் நிலை கல்வித் திட்டத்தில் இருத்தல் வருந்தத்தக்கதாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை வெளியிடுவதில் அச்சம் ஏனோ தெரியவில்லை. மறைக்கப்பட்ட இந்த வரலாற்றை இனிவரும் பாடத்திட்டங்களிலாவது சேர்க்கப்படுமா? என் பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழகத்தின் விடுதலை இயக்க வரலாறுகளை முன்னுக் குப் பின் முரணில்லாமல் வரிசைப் படுத்தி உண்மையான வரலாற்றை மாணவர்களுக்குக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். 'இன்றைய மாணவர்கள்தான் நாளை நாடு காக்கும் காவலர்கள்' என்பதை மனதிற் கொண்டு பாடத் திட்டங்கள் அமைய வேண்டும்.

சாதி, மதம், அரசியல் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது தான் வரலாறு. மாணவர்களிடம் நாட்டுப்பற்றை வளர்க்க வேண்டுமேயானால் நம் நாட்டில் நடை பெற்ற வீர வரலாறு களைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

தொடக்க நிலைக் கல்வியின் போது, வட்டார வரலாறு களையும், உயர் நிலைக் கல்வியின் போது மாநில வரலாறு களையும், இந்திய வரலாறுகளையும், மேல்நிலைக் கல்வி யில் இந்திய வரலாறுகளுடன் உலக வரலாறுகளை ஒப் பிட்டுக் கூறும் வண்ணம் பாடத்திட்டங்கள் அமைதல் வேண்டும்.

இந்த அடிப்படையில் பாடநூல் நிறுவனத்தின் பாடத் திட்டங்கள் தயாரிக்கப்படுமேயானால், முரணில்லாத வரலாறுகளைத் தெரிந்து கொள்ள முடியும். விடுதலைப் போரில் முதல் முழக்கமிட்டவன் பூலித்தேவனா? கட்ட பொம்மனா? போன்ற விவாத மேடைகள் தவிர்க்கப்படும்.

கல்வி இலாகாவில் முறையான வரலாற்றைக் காலத் தின் அடிப்படையில் தயார் செய்து கொடுக்கத் தவறுவோ மாயின் வருங்காலச் சமுதாயத்திற்குப் பதில் சொல்லக் கூடிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுவோம்.

''இது வீரர் பிறந்த மண்ணு நாமெல்லோரும் ஒண்ணு' என்னும் மனப்பான்மையுடன் நாமெல்லோரும் ஒன்றுபட்டு செயல்படுவோமாயின் இந்த' மண்ணின் பெருமை சிறந் தோங்கும். எந்த நாடும் இந்திய நாட்டிற்கு இணையில்லை என்று சொந்த நாட்டை சொர்க்க மாக்கிடுவர், அப்போது தான் உண்மை வரலாறுகள் மலரும். அவ்வாறு மலர்ந்து மணம் வீசும் நாள் என்று வருமோ என்று ஏங்கி நிற்கும் நமக்கு

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு''

என்று பாடிய புரட்சிக் கவிஞனும், மறுமலர்ச்சிக் கவிஞனு மான பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்ஆறுதலை கொடுப் பதுடன் புதிய பார்வையையும், புதிய தெம்பையும் கொடுக்

கிறது. உண்மையான வரலாறுகளைக் கண்டு பிடித்து உலகிற்கு வழங்கி, மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்ற புதிய சங்கொலியை முழக்குவோம்!

இந்திய விடுதலை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை நடுவண் அரசு கொண்டாடியபோது மாவீரன் பூலித்தேவ னுக்கு மரியாதை செய்யவில்லை. கடைசி நேரத்தில் கட்டபொம்மனைக்கூட சேர்த்து அந்நிகழ்ச்சியில் இடம் பெறச் செய்தனர். இந்தச் செயலைக் குறித்து இதுவரை யாரும் வருத்தம் தெரிவிக்கவில்லை.

விடுதலைப் போராட்ட வரலாற்றை சென்னைத் தொலைக்காட்சியில் ''ஏழு தலைமுறைகள்'' என்னும் தலைப்பில் விடுதலைப் போராட்டத்தை ம. பொ. சி. தலைமையில் அறிமுகம் செய்து ஒளிபரப்பப்பட்டது. அதில் வீரபாண்டிய கட்டபொம்மனையே அறிமுகப்படுத்தப் பட்டது. பூலித்தேவனை அறிமுகப்படுத்த வேண்டும் என்று கடிதம் எழுதி தக்க ஆதாரங்களையும், புகைப்படங்களை யும் அனுப்பி வைத்தேன். பதிலை, தொலைக்காட்சி ஒளிபரப்பில் எதிர்பார்த்ததுதான் மிச்சம். கடிதங்களெல் லாம் குப்பைத் தொட்டியில் போடப்பட்டன என்பதை உணரமுடிந்தது. வரலாற்றை ஒளிபரப்புவதிலும் இத்தனை பேதங்களா? அவ்வாறாயின் உண்மை வரலாறுகள் எங்ஙனம் நாட்டு மக்களுக்குத் தெரியமுடியும்.

விடுதலைப் போராட்டங்கள் நடந்த இடங்களிலெல் லாம் மண்ணை சேகரித்து, தலைநகரில் மரியாதை செய்யப்

பட்டது. முதல் முழக்கமிட்ட பூலித்தேவனின் ஊரான நெற்கட்டான் செவ்வலில் 'மண்' எடுக்கவில்லை. வருந்தத் தக்க இச்செயலைக் கண்டித்து உண்மையான தேச பக்தர்கள்கூட அறிக்கை வெளியிடவில்லை.

மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கெல் லாம் அஞ்சல்தலை வெளியிட்டது. ஆனால் 280 ஆண்டு களைக் கொண்ட பூலித்தேவனுக்கு அஞ்சல்தலை வெளியிட வில்லை. ஆங்கிலேயரின் தொடக்க கால முதல் சுதந்திரம் கிடைத்த நாள் வரையில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மறவர்கள் குற்றப் பரம்பரையினர் என்று அழைக்கப்பெற்றனர். குற்றப் பரம்பரை சாதியில் பூலித்தேவன் பிறந்தான் என்பதற்காக ஒருவேளை ஒதுக்கப் பட்டானோ? என்னவோ தெரியவில்லை.

ஏ! சுதந்திரமே உனக்குக்கூட சாதியச் சாயம் பூசப் படுகிறதே, இதை உன்னால் எப்படிச் சகித்துக்கொள்ள முடிகிறது,

மாநில அரசும் பூலித்தேவன் பெயரால் போக்கு வரத்துக் கழகம். மாவட்டம், பல்கலைக் கழகம், நினைவுக் கோட்டை, அரசு விழா எடுத்தல் முதலியவற்றைக்கூட செய்யத் தவறி விட்டது. அரசு விழா எடுக்கப் போவதாக மாண்புமிகு முதல்வர் அறிவிப்புக் கொடுத்ததோடு சரி. ஓராண்டாகியும் இன்னமும் விழா கொண்டாடவில்லை.

பூலித்தேவனின் தியாகத்தை யார் மதித்தாலும் மதிக்காவிட்டாலும் உண்மையான தேசியவாதிகளின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்றுவிட்டான். மொழியாலும், இனத்தாலும் அவன் தமிழனாக இருப்பதால், தமிழர்களாகிய நாம் பெருமைப்படுகிறோம். அவனின் புகழ் இத்த மண்ணும் விண்ணும் உள்ளவரை மறையாது. வாழ்க பூலித்தேவன் புகழ்.

பயன்கொண்ட துணைநூல்கள்

1. இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு; டாக்டர் ச. செயம்பிரகாசம், சாரா பதிப்பகம், மதுரை-1

2. தேவர் அழைக்கிறார், எஸ். எஸ். மாரிசாமி, இமயம் பிரஸ், சென்னை-3 1953.

3. இந்திய நாட்டின் உட்பூசல்கள், சசிபூசன் சௌத்ரி,

4. முதல் முழக்கம், ம. பொ. சிவஞானம், இன்ப நிலையம் சென்னை-4, 1968.

5. வீரபாண்டிய கட்டபொம்மன், சிரஞ்சீவி, பிரேமா பிரசுரம், சென்னை-24, 1958.

6. வீரத்தலைவர் பூலித்தேவர், டாக்டர். ந. சஞ்சீவி, பாரி நிலையம், சென்னை-1, 1958.

7. புலித்தேவனா பூலித்தேவனா ?, புலியூர்க்கேசிகன் தேனருவி வெளியீடு, அருணா பப்ளிகேசன்ஸ், சென்னை-17, 1959.

8. புரட்சித்தலைவன் புலித்தேவன், வ. வேணு கோபாலன், 1959.

9. இந்திய புரட்சி இயக்கம், பி. கோதண்டராமன், 1978.

10. தமிழ்வீரன் பூலித்தேவன், துர்காதாஸ். எஸ். கே. ஸ்வாமி தேனருவி வெளியீடு, சென்னை-17, 1958.

11. தமிழ்நாடும் காங்கிரசும், பி. ஸ்ரீ, 1955.

12. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு, நா. மகமது செரீபு, முன்னேற்றம் வெளியீடு, மானா மதுரை, 1979.

13. தமிழக வரலாறு, அ. கணபதி, மல்லிகைப் பதிப்பகம், மதுரை, 20, 1986.

14. தமிழ் நாட்டின் வரலாறும் பண்பாடும், ந. க. மங்கள முருகேசன்.

15. இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, டாக்டர் க. வெங்கடேசன், 1985.

16. திருநெல்வேலி சீமை சரித்திரம், எஸ். குரு குஹ தாசப்பிள்ளை சாது அச்சுக்கூடம், சென்னை, 1931.

17. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தொகுதி 1, எல். ஆர் 7992, 1981.

18. மாமன்னன் பூலித்தேவன், ந. இராசையா, ஞான முருகன் எழுத்தகம், அயன்கொல்லங் கொண்டான் 626142 1992.

19. முதல் உரிமைப் புரட்சி, டாக்டர். கோ. வி. மணி சேகரன், 1982. வானதிப் பதிப்பகம், சென்னை-17.

20. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர், டாக்டர். எஸ். எம். கமால் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-98, 1987.

21. பாஞ்சாலங் குறிச்சி வீர சரித்திரம், கவிராஜ பண்டிதர் ஜக வீரபாண்டியனார், ராஜேஸ்வரி பிரஸ், மதுரை 1939.

22. வீர பாண்டிய கட்ட பொம்மு கதைப்பாடல், நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக்கழகம். மதுரை. 1971.

23. காந்தியடிகளுக்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப் போர். ம. பொ. சிவஞானம், 1974.

24. இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு, பேரா சிரியர் கா. அப்பாத்துரை, 1953.

25. திருநெல்வேலி ஜில்லா, எம். எஸ். இராமசாமி, ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலை பிரஸ், மதராஸ், 1930.

26. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், கே. கே. பிள்ளை, 1974.

27. விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு, ந. இராசையா, ஞானமுருகன் எழுத்தகம், அயன் கொல்லங் கொண்டான்-626142, 1990.

28. கோவை நகர வரலாறு, டி. கே. சக்திதேவி, சக்தி தேவி பதிப்பகம், கோவை-34. 1979.

29. சுதந்திர வீரன் அழகுமுத்து யாதவ், மா. ராஜா மணி, தமிழ் எழுத்தாளர் சங்கம், எட்டையபுரம் 1983.

30. விடுதலைப் போராட்டத்தில் அழகுமுத்துக்கோன். பேராசிரியர் மா. கலைமணி, பாண்டியன் பைந் தமிழ் பதிப்பகம், சென்னை-87, 1993.

31. மறவர் வரலாறு, ஏ. வி. ஆசீர் உடையாத்தேவர் மற்றும் வி. எஸ். குழந்தை வேலுச்சாமி, ஸ்ரீ கான வித்தியா பிரஸ், ஸ்ரீ வைகுண்டம், 1938.

32. தென்னாட்டுப் போர்க்களங்கள், பேராசிரியர், கா. அப்பாத்துரை, 1971.

1. *Tinnevelly District Gazetteer. Vol. H. R. Pate, Government Press, Madras.* 1917.

2. *Manual of the Tinnevelly District.*

3. *Hindustan Varalaru. Vol I, Robert Orme.*

4. *History of Tinnevelly, Caldwell.*

5. *N. RAJIAH.,* The *first Freedom Fighter. The story of Pulittavan, Instutitute of Asian studies, Madras* 1993.

6. *Etaiyapuram past and Present, W. E. Ganapathy* 1890.

7. *Country correspondence, Government Press.*

8. *Dairy and Proceedings. Government Press.*

பூலித்தேவனைப் பற்றிய நூல்கள்

மதிப்புரை

மாமன்னன் பூலித்தேவன்

குமுதம்—8-4-93

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆற்காட்டு நவாபை யும் ஆங்கிலக் கும்பினியரையும் எதிர்த்துப் போரிட்ட புரட்சியாளன் பூலித்தேவனின் வரலாறு, அரிய புகைப் படங்களுடன் உள்ளது.

தமிழரசி—28-3-93

கட்டபொம்முவிற்கு அரை நூற்றாண்டுக்கு முன்பே, இந்தியாவில் முதன்முதலில் விடுதலை முழக் கம் செய்து,ஆங்கிலேயரை எதிர்த்தவன் பூலித்தேவன். அவனது வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறு கிறது இந்நூல்.

சுபமங்களா—சூலை 1993.

பூலித்தேவனுடைய வீரவரலாற்றைப் பற்றிக் கூறக்கூடிய வகையில் ஒரு நூல் கூட வெளிவரவில்லை.

அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகத்தான் எழுதியது இந்நூல், நூற்றுக்கணக்கான புத்தகங்கள் என்னும் செய்தி நூலாசிரியரின் பேரார்வப் பெருமை மிக்க உணர்ச்சியைப் புரிந்து கொள்ள உதவுகிறது. நூலாசிரியர், ஆய்வுப் போக்கும் கதைப் போக்குமாகப் பின்னிப் பிணைய இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புற இலக்கியத்தை மிகத் திறமையாக நூலாசிரியர் இந்நூலில் பயன்படுத்தியுள்ளது பாராட்டுதலுக்குரியது.

தமிழரசு—1-8-1993

'வெள்ளையனே வெளியேறு' என்று முதல் முழக்க மிட்டவன் பூலித்தேவன் என்பதைத் தம் ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் கோடிட்டுக் காட்டுகிறார். நூலாசிரியரின் உழைப்பும் உறுதியும் இந்நூலில் நன்கு வெளிப்படுகிறது. ஆராய்ச்சி நோக்குடைய இளைஞர் கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

தராசு—13-4-1993

மாமன்னன் பூலித்தேவனின் வீரவரலாறு சரித்திர சான்றுகளுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.

தினத்தந்தி—26-3-1993

தமிழ்நாட்டில் வெள்ளையரை எதிர்த்து முதல் முழக்கமிட்ட மாவீரன் பூலித்தேவன். அவனைப் பற்றிய விரிவான வரலாறு, ஆசிரியர் அரும்பாடுபட்டு அருமையான படங்களையும் சேர்த்திருக்கிறார்.

இந்நூல் நல்ல கட்டமைப்புகளை உடையதாக உள்ளது. படித்தவுடன் புரியும் வண்ணம் பாங்குடன்

அமைக்கப்பட்டுள்ளது. தனித் தமிழ் நடை, தடையற்றது, சொல்லாட்சி ஈர்ப்பு சக்தி உடையது. சான்றுகள் ஆணித்தரமானவை. நடுவு நிலை போக்கு. இந்த நூல் ஒரு கடுமையான உழைப்பு. காலங்களால் மறைக்கப்பட்டுக் கிடந்த கருவூலத்தை முறையாக வெளியே கொண்டு வந்துள்ளது.

பேராசிரியர் வி. கோபால்—பழனி, 19-4-94

மொத்தத்தில் இப்புத்தகம் பூலித்தேவனைப் பற்றி அறிய கிடைத்த ஒரு கண்ணாடியாகும்.

கோ. சதீஷ்குமார்—கோவை, 19-4-93

கவிஞர்களுக்கு நல்ல விருந்து. படிக்கும் ஆர்வத்தையும், அறிவையும் ஊட்டும் வண்ணம் அமைந்துள்ளது. இனிய தமிழ்ப் பண்பாட்டினை வளர்க்கும் பயனுள்ள கருத்துக்கள் நூல் முழுவதும் பொதிந்து பேரின்பக் களஞ்சியம் போல் வைகறை மேகமாக திகழ்கின்றது.

கு. க. தி. பா. பரணியார்—அவலூர்பேட்டை—17-1-1994

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய பாளையக்காரர்களில் முதன்மையானவன் மாவீரன் பூலித்தேவன். இறுதியானவர் மருது சகோதரர் என்பதைத் தக்க சான்றுகளுடன் இந்த நூலில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

பேராசிரியர்—டாக்டர். சாரதா நம்பி ஆரூரன்—ஆனந்தவிகடன், 4-9-94

பூலித்தேவன் நடத்திய ஒருநாள் போரில், சின்ன நாளிக்கு பதினொன்னரைப்படி தாலி அறுந்து

விழுந்தது என்பது அனைவரையும் துயரத்தில் ஆழ்த்து கின்றது. ஆராய்ச்சி அடிப்படையில் எழுதப்பட்ட நூல் இது.

சென்னை தொலைக்காட்சி நிலையம்—3-6-93
முனைவர். சி. பாலசுப்பிரமணியம்
முனைவர். மா. இரா. தமிழரசி

வரலாற்று ஆதாரங்களையும், நாட்டுப்புறப் பாடல்களையும், அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களிடம் சேகரித்த செய்திகளையும் கொண்டு இந்த ஆய்வு நூலானது எழுதப்பட்டுள்ளது. நூல்களை அவர் ஒரு பட்டியலிட்டுக் காட்டுவது அவருடைய நல்ல பண்பை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதுமட்டு மல்ல ஆழ்ந்த ஆராய்ச்சியாக, பல அரிய குறிப்பு களாகத் தேடித் தொகுத்து எழுதிய ஒரு நூலாக, அவருடைய உழைப்பைக் காட்டுகிற ஒரு நூலாக அந்த நூல் திகழ்கிறது.

மு. பெரியசாமித் தேவர்—இ. ஆ. ப. சென்னை

மாமன்னன் பூலித்தேவன் வரலாற்றை அழகுபட யாத்துள்ளார் திரு. ந. இராசையா. தமிழ் தாத்தா உ. வே. சா. ஐயர் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தென்பாண்டி நாட்டில் கால்படாத இடமில்லை என்ற அளவிற்குப் பேருந்திலும், பேருந்து இல்லாத இடங்களுக்கு இரு சக்கர வண்டியிலும், அதுவும் செல்லவியலாத ஊர்களுக்குக் கால்நடையாக வும் சென்று, சரித்திரச் சான்றுகளை சேகரித்து நெறிப் படுத்தி அங்கு வாழும் மக்களிடையே நிலவிவரும் நாட்டுப் பாடல்களையும் ஆராய்ந்து திரட்டிய மணி களின் கோர்வையே இந்நூல்.

திரு. **சொக்கலிங்கம்**—மாநில யாதவர் சங்கத்தலைவர் மதுரை வானொலி ஒலிபரப்பு.

நீலகண்ட சாஸ்திரியைப்போல் வரலாற்று ஆதாரங்களை அந்தந்த இடங்களுக்குச் சென்று தேடி எடுத்துள்ளார். நூலை எழுதுவதற்குக் கடுமையாக உழைத்துள்ளார். பாராட்டுக்கள்—

இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்

தினமலர்—13-3--85

பல வரலாற்று நூல்களையும் ஆராய்ந்து இந்திய விடுதலைப் போரில் கட்டபொம்மனுக்கு முன்பு ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவன் பூலித்தேவனே என்று இதன் ஆசிரியர் வாதாடுகிறார். மேலும் ம. பொ. சி. கூறிய கருத்துக்களை மறுத்து பூலித்தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறார். சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராக முதல் குரல் கொடுத்தவன் பூலித்தேவன் என்பதற்கு பல சான்றுகளை கையாண்டுள்ளார்.

தினமணி—13-5-85

'வெள்ளையனே வெளியேறு' என்று முதன் முதலாக குரல் கொடுத்தவன் வீரன் பூலித்தேவன் தான். பூலித்தேவனைப் பற்றி முழுமையான நூலோ முழுமையான சரித்திரமோ இதுவரை வெளியாக வில்லை. இந்த குறையைப் போக்கிட எண்ணிய

புலவர் இராசையா தந்துள்ள முழுமையான குறிப்புகள் அடங்கிய புத்தகம்தான் 'இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம்' என்னும் இந்நூல்.

குமுதம் — 14-2-85

'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கிய புரட்சி வீரன் பூலித்தேவனது வரலாறு புலவர் ந. இராசையா அவர்களால் எழுதப்பட்ட சிறந்த நூல்.

தமிழரசு — 16-9-85

பூலித்தேவனைக் குறித்த நூல்தான் என்றாலும், அவன் காலத்தில் தமிழகத்தின் நிலை, மக்களின் வாழ்க்கை முறை, போர்ப் பண்பு போன்ற பல்வேறு செய்திகளைத் தெரிவித்திருக்கிறார். ஆசிரியர் ஆய்வு மனப்பான்மை கொண்டவர் என்பதும், கடுமையான ஆராய்ச்சிப் பணியாற்றியுள்ளார் என்பதும் இந்நூலின் மூலம் தெரிய வருகிறது.

தராசு — 13-12-85

தென்பாண்டி நாட்டின் தீரன் பூலித்தேவன் புகழ் பாடி அவனை அறிமுகப்படுத்தி வைக்கிறது நூல்.

தேவர் முரசு — மே 1985

இதுவரையிலும் எழுதப்பட்டுள்ள நூல்கள் பெரும் பாலும் தேசிய அளவிலேயே வெளியிடப்பட்டுள்ளன, வட்டார அளவில் வரலாறுகள் எழுதப்படவில்லை என்ற குறை என்னால் நீங்கியது என்று சொல்லாமல்

செயலிலே காட்டியுள்ள திரு. புலவர். இராசையா அவர்கள்,

தேசிய வரலாறுகள் செம்மையாக அமைய வேண்டுமேயானால் அந்தந்த வட்டார வரலாறுகள் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற பழந்தமிழ்ப் பண்புள்ள புலவர். இராசையா அவர்கள் இந்திய விடுதலைப் போரின் முதல் முழக்கம் என்னும் நூல் வெளியிட்டுள்ளார்.

தேவர் குரல் — மார்ச் 1985

மண்மூடிப் போகவிருந்த சரித்திரச் சான்றுகளை இதோ! கண்முன்னே நிறுத்திவிட்டார் இந்தச் சுவடி ஆதாரங்களை 'தேனீ' போல சேகரிக்க எத்தனை படி ஏறி இறங்கினாரோ! அவருக்கு நன்றி கூறுவோம்!

பி. வேலப்பன் — திருநெல்வேலி — 20-3-85

நெற்றிக்கண் திறந்தாலும் குற்றமே என்ற நக்கீரர் இன்னும் சாகவில்லை, அவர் இராசையா என்ற பெயரில் வாழ்கின்றார் என்று நிரூபித்து விட்டார்கள்.

எம். இராச சேகர தங்கமணி — கரூர் — 18-8-91

தங்களது வரலாறுத் திறனாய்வு நூலைப் பல தடவைகள் படித்தேன். எனது நண்பர்களும் படித்தனர். பல புதிய செய்திகளடங்கிய அருமையான நூல். இதனை யாத்தளித்த தங்கட்கு என் பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்.

தெ. பழனிவேல் — பெரிய குளம் — 13-4-1985

பூலித்தேவனின் முழக்கம்போல் உங்கள் முழக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. நீங்கள் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பீர்கள் என்பதை நூலைப் படிக்கும்போது தெரிந்துகொண்டேன். பாராட்டுக்கள்.

தியாகி சண்முகம் — திருச்செந்தூர் — 4-6-85

ம.பொ.சி. கட்டபொம்மனை எழுதிய காலத்தில் பசும்பொன், காமராசர் மோதல் இருந்த காலம் பூலித்தேவன் பெருமை கூறினால், தேவரின் பெருமை யினை கூட்டும். அதனால் காமராஜரின் எதிர்ப்பினைப் பெறவேண்டும். இவைகள்தான் பூலித்தேவனை விட்டு விட்டு கட்டபொம்மனை எழுதினார் ம. பொ. சி தங்களின் பெருமுயற்சி, ஆர்வம், பாராட்டப்பட வேண் டியவை பாராட்டுகிறேன்.

ந. செண்பகம் — இராசபாளையம் — 20-1-85

சாண்டில்யனுடைய சரித்திர நாவலைப் போன்று உள்ளது இந்நூல். நூலாசிரியர் வரலாற்று நாவலைக் கூட எழுதலாம். இது ஒரு மிகப்பெரிய முயற்சி. இது ஒரு பூலித்தேவர் முயற்சி. இதில் வெற்றி பெற்றிருக் கிறீர்கள். பாராட்டுக்கள்.

விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு

தினகரன்—31-3-90

முதல் விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோர் கலந்து கொண்டனர் என்பதை நிருபித்துள்ளார்.

ஆதாரங்களைக் கதையோடு இணைத்துச் சென்று விளக்கும் பாங்கு பாராட்டும்படி உள்ளது.

தினத்தந்தி—18-8-90

இந்திய விடுதலைப் போரில் எல்லா மக்களைப் போன்று தாழ்த்தப்பட்ட மக்களும் பங்கு கொண்டார்கள். அவர்களின் பங்கை வரலாறு ஆக்கியிருக்கிறார் ஆசிரியர்.

தினமலர்—19-9-90

இந்திய விடுதலைப் போராட்டம் 1857-ல் தொடங்கப்பட்டதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே திருநெல்வேலிச் சீமையில் பூலித்தேவன் தலைமையில் விடுதலை போராட்டம் துவக்கப்பட்டது என்றும், காந்திஜி சகாப்தத்திற்கு முன்பு தாழ்த்தப்பட்டோர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்ற கருத்தைத் தவறு எனச் சுட்டிக் காட்டவும் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஒண்டி வீரன் சாகசம் போன்ற அரியசாதனைகள் படிக்கும் போதே புல்லரிக்க வைக்கின்றன ஆசிரியர் முயற்சி பாராட்டத்தக்கது.

தமிழரசு—1-8-1991

முதல் விடுதலைப் போர் தொடங்கி இந்திய நாடு விடுதலை பெற்ற காலம் வரையில் தாழ்த்தப்பட்டோர் பங்கு விடுதலைப் போராட்டங்களில் எந்தளவுக்கு

இருந்தது என்பதைத் தக்க ஆதாரங்களோடு விளக்கும் நூல் இது. நல்லதோர் ஆய்வுநூல் இது.

குமுதம்—31-5-90

1857ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போர் முதல், காந்தியடிகளின் காலத்து விடுதலைப் போராட்டங்கள் வரை தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வாறு பங்கு பெற்று வந்திருக்கிறார்கள் என்பதைச் சான்றுகளுடன் கூறுகிறார்.

இந்திரர் குரல்—ஜூன் 1990

முதல் விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டோர் கலந்து கொள்ளவில்லை என்ற தவறான கருத்தை இக்காலச் சந்ததியினர் மனத்திலிருந்து அகற்றி உண்மையான வரலாற்றை வருங்காலச் சந்ததியினர் அறியும் வண்ணம் வெளியிடச் செய்வது தலையாய கடமை என்று உரைத்து அதற்கான ஆதாரங்களோடு நூல் வெளியிட்டுள்ளார் ஆசிரியர்.

மருதமலர்—மே 1990

கட்டபொம்மன் காலத்துத் தாழ்த்தப்பட்டோர் என்னும் தலைப்பில் கட்டுரையாக வெளியிடப்பட்டுள்ளது.

எஸ்.ஏ. பெருமாள்—இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்) 2-8-90

தமிழில் இழிகுலத்தார்க்கு இலக்கியங்களும், வரலாறும், காதையும் மிக அபூர்வம். அதில் மிக

முக்கியமான விடுதலைப் போரில் இக் கீழ் மக்களின் பங்கு பாத்திரம் குறித்துத் தாங்கள் குறிவைத்துத் தேடல் முயற்சியில் ஈடுபட்டு ஒரு நூலை எழுதியிருப் பதை நமது இயக்கத்தின் சார்பில் மனமாரப் பாராட்டு கிறேன்.

நீலக்குயில் பாடுகிறது—இதழ் 1

இவரது இந்த சீரிய முயற்சியின் விளைவாக தாழ்த்தப்பட்டோர்களின் பெருமைக்கு இந்நூல் ஒரு மணி மகுடம்.



நூல் ஆசிரியர்

இந்நூலாசிரியர் சேத்தூரில் பிறந்து, அயன் கொல்லங் கொண்டானில் வாழ்ந்து வரும் புலவர் ந. இராசையா அவர்கள், எட்டாவது வகுப்பு வரையிலும் பள்ளியில் படித்து, பயிற்சி இல்லாத ஆசிரியராகப் பணியில் சேர்ந்து, தொழிற் கல்வி லோயர், ஹயர், பள்ளியிறுதி, இடைநிலை ஆசிரியர், புலவர், பி.லிட், எம்.ஏ; பி.எட்;எம்.எட்; போன்ற தேர்வுகளை தனியாக எழுதி முடித்தவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவதற்கு ஆய்வு கட்டுரை வழங்கி யுள்ளார். தமிழ் நாடு தமிழாசிரியர் பேரவையின் மாநிலப் பொதுச் செயலராகச் செயல் பட்டுள்ளார். படிப்படியாக வாழ்க்கையில் முன்னேற்றமடைந்தவர்.

இந்திய விடுதலை வரலாற்றில் புதைந்து போன உண்மைகளை, ஆய்ந்து அறிந்து, ஆதாரங் களோடு உலகுக்குக் கொண்டுவருகின்ற கடினமான பணியினை மிக எளிதாகச் செய்து வருவதை நாட்டுப்பற்றுள்ள நல்ல நெஞ்சங்கள் பாராட்டியே தீரும்.

பட்டதாரிப் பொறியாளர் சங்கம்
மின்துறை, புதுச்சேரி.